Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : Issued :

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு
## 15-வது பேரவை

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT
## 15TH ASSEMBLY

**புதன்கிழமை, பிப்ரவரி 1, 2017—தொகுதி 18 எண் 3**
**Wednesday, the 1st February 2017—Volume 18 No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*
**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs 3.00

# 1–2–2017

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்பு—** | |
| திரு. இ. அகமது, மக்களவை உறுப்பினர் அவர்கள் மறைவு | 341-342 |
| **2. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 342-395 |
| **3. முந்தைய நாள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளை நீக்கியது—** | 395-399, 417-419 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 395-396 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 399, 418-419 |
| திரு. துரைமுருகன் | 398, 417 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2017 | 400 |
| *மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் | 400 |
| (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017 | 416 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 416 |
| **5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2016–2017, அளித்தல்—** | 401-408 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 401-408 |

பக்கங்கள்

**6. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல் — *409*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 409

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 573

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் — 645

**7. அறிவிப்புகள்—**

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.) — 409-410

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.) — 416

(இ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு— — 629-644

(i) மதிப்பீட்டுக் குழு — 629-630

(ii) பொதுக் கணக்குக் குழு — 630-632

(iii) பொது நிறுவனங்கள் குழு — 632-633

(iv) அவை உரிமைக் குழு — 633-637

(v) பேரவை விதிகள் குழு — 637-638

(vi) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — 638

(vii) அரசு உறுதிமொழிக் குழு — 638-639

(viii) அவைக் குழு — 639-640

(ix) மனுக்கள் குழு — 640-641





பக்கங்கள்

**7. அறிவிப்புகள்—**தொடர்ச்சி

(x) பேரவை நூலகக் குழு — 641

(xi) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு — 642

(ஈ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு — 642-644

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2016–2017, வாக்கெடுப்பு—** — 410-415

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 410

**9. பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை** — 419-421

**10. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்–விவாதத்திற்கான பதிலுரை—** — 422-572

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 524-570

திரு. துரைமுருகன் — 545, 556, 562, 565, 567

திரு. அர. சக்கரபாணி

திரு. எஸ். ஆஸ்டின் — 557, 571-572

திரு. மு.க. ஸ்டாலின் — 563

திருமதி எஸ். விஜயதரணி — 567-568

**11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** — 570-571

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017 — 574-575

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 574-575

பக்கங்கள்

**11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி


(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 576,589

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 576,581, 582-585, 589

திரு. அர. சக்கரபாணி — 576-580

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் — 580

திரு. மு.க. ஸ்டாலின் — 581-582, 586-587

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 585--587

(இ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 589-595

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 590, 593, 595

திரு. எஸ்.ஆர். இராஜா — 590-592

திருமதி எஸ். விஜயதரணி — 592

(ஈ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 595-604

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 595, 599-604

திரு. மா. சுப்பிரமணியன் — 596-598

திருமதி எஸ். விஜயதரணி — 598-599

(உ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2017 — 605-606

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் — 605-606

(ஊ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2017 — 607-608




பக்கங்கள்

**11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி


*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 607-608

(எ) தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு, 2017 — 609-619

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — 609, 614-616, 618

முனைவர் க. பொன்முடி — 609-613

திருமதி எஸ். விஜயதரணி — 613-614

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 616-617

(ஏ) தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2017 — 619-621

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் — 619, 621

(ஐ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு, 2017 — 621,623

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு — 621, 623

(ஒ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 623-625

*மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் — 623, 625

(ஓ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 — 625-627

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் — 625, 627

| | | |
|---|---|---|
| | | *பக்கங்கள்* |
| **11.** | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—*தொடர்ச்சி* | |
| | *(ஔ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017* | 627-629 |
| | *மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்* | 627, 629 |
| **12.** | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 646 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, தை 19, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 பிப்ரவரி 1, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

செல்வங்களுள் எல்லாம் சிறப்பானது செவியால் கேட்டறியும் செவிச் செல்வம்தான். அது அனைத்துச் செல்வங்களிலும் முதன்மையான செல்வமாகும்.

## 1. இரங்கற்குறிப்பு

### திரு. இ. அகமது, மக்களவை உறுப்பினர் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தியாவின் மூத்த அரசியல்வாதியாகவும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், தற்போது அக்கட்சியின் தலைவராகவும் உள்ள திரு. இ. அகமது அவர்கள், இன்று (1-2-2017) அதிகாலை திடீரென மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மறைந்த திரு. இ. அகமது அவர்கள், 1967 முதல் 1991 வரை ஐந்து முறை கேரள மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1991 முதல் இதுநாள்வரை ஏழு முறை மக்களவை உறுப்பினராகவும், வெளியுறவுத் துறை, இரயில்வே துறை, மனிதவள மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளின் மத்திய இணை

அமைச்சராகவும் மற்றும் கேரள மாநில தொழில் துறை அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**31—**

### முதலைப் பண்ணை

***2877—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பழைய கொள்ளிடத்தில் முதலைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்று, தமிழகத்தினுடைய அத்தனைப் பிரச்சினைகளையும் தீர்த்து, மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கின்ற நான் வணங்கும் தெய்வம், என்னை அமைச்சராக்கி அழகு பார்த்த மாண்புமிகு புரட்சித்





தலைவி அம்மா அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், இரண்டாவது முறையாக என்னை அமைச்சராக்கிய மாண்புமிகு சின்னம்மா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மனித, வன உயிரின மோதலை விளைவிக்கும் முதலைகளுக்கான நிரந்தர முதலைப் பண்ணைகள் அல்லது பாதுகாப்பு மையம் அமைக்க வேண்டுமாயின், 1972 வனவிலங்கு பாதுகாப்புச் சட்டப் பிரிவு 2 (39)-ன்படி மத்திய உயிரியல் ஆணையத்தின் அனுமதியும், உச்ச நீதிமன்றத்தின் அனுமதியும் பெற வேண்டும். எனவே, சிதம்பரம் தொகுதி, பழைய கொள்ளிடத்தில் முதலைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

**திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலையில் கிடந்தவர்களுக்கெல்லாம் முகவரியைத் தந்து, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை சிதம்பரம் தொகுதியினுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினராக்கி அழகுபார்த்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்துவிட்டு, வங்கக் கடலோரம் ஆறடி சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமலும் விழித்துக் கொண்டிருக்கும் என் தாயை இந்த நேரத்தில் நான் வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் அம்மாவின் கனவுகளை நனவாக்கிவரும் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர்மூச்சு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் இந்த நேரத்திலே வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட கொள்ளிடம் ஆற்றில் மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காலங்களில் திறந்துவிடப்படும் தண்ணீரோடு அதிக அளவில் முதலைகள் அடித்து

வரப்படுகின்றன. இதனால், பழைய கொள்ளிடம் ஆற்றில் முதலைகளின் எண்ணிக்கை சுமார் நூற்றுக்கும் மேல் கணிசமாக உயர்ந்துள்ளது.

முற்பகல் 10-05

அவற்றின் தாக்குதலால் மாடுகள், ஆடுகள் எனத் தொடங்கி, அங்கு வசிக்கின்ற பொதுமக்கள் பலர் தங்களது கை, கால்களை இழந்துள்ளனர். சென்ற ஆண்டு சாழந்தோப்பு என்ற பகுதியினைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி என்பவரின் மகன் திரு. பாண்டித்துரை என்பவர் உயிரிழந்துள்ளார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், குமராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக நான் இருந்தபோது, அன்றைக்கு பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பகுதியில், ஒருசில இடங்களில் ஊராட்சி ஒன்றியத்தின் நிதியிலிருந்து இரும்பு வேலி அமைக்கப்பட்டது. அதனையும் மீறி இம்முதலைகள் மனித உயிர்களுக்கு அவ்வப்போது இழப்புகள் ஏற்படுத்தி வருகின்றன. இதனைத் தடுக்கும்பொருட்டு, மனிதநேயத் தலைவியாம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பழைய கொள்ளிடம் ஆற்றின் கரையோரத்தில் முதலைப் பண்ணை ஒன்றை அமைத்திட முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளாறு மற்றும் கொள்ளிடம் நதிகளில் பெருகிவரும் வெள்ளத்தின்போது, கல்லணையிலிருந்து இடம் பெயரும் முதலைகள் வாய்க்கால் கரைகள் வழியாக கிராமப் பகுதிகளுக்குள் புகுந்து விடுகின்றன. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், மறைந்தும் மறையாத மாமேதை மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ், நெய்வேலி ‘A’ Block-ல் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் முதலைகள் மாற்று மையம் ரூபாய் 20 இலட்சம் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. கொள்ளிடம் வாய்க்காலிலிருந்து இடம் பெயரும் முதலைகள் மேற்படி முதலைகள் மாற்று மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் அருகிலுள்ள வக்கிரமாரி ஏரியில் பாதுகாப்பாக விடப்பட்டு வருவதன்மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை நிரந்தரமாகக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அறிவிப்பு மற்றும் எச்சரிக்கைப் பலகைகள் வைத்தல், கிராமங்களில் தண்டோராமூலம் எச்சரிக்கை செய்தல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், செய்தித்தாள் மற்றும் ஊடகங்கள்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கோட்டம், அமராவதி ஆனைமலை புலிகள் காப்பகத்திலும், திருவண்ணாமலை தெற்குக் கோட்டம், சாத்தனூரிலும், தருமபுரி கோட்டம், ஒகேனக்கலிலும் ஏற்கெனவே முதலைப் பண்ணைகள் நிரந்தரமாக அமைக்கப்பட்டு, முதலைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, இப்போது முதலைகள் மாற்று மையம்மூலம் கொள்ளிடம் வாய்க்காலிலிருந்து இடம்பெயரும் முதலைகள் வக்கிரமாரி ஏரியில் பாதுகாப்பாக விடப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு அனைத்து எச்சரிக்கையும் விடப்பட்டு இருக்கிறது. இதையும் மீறி, பொதுமக்களுக்கோ, விலங்குகளுக்கோ ஏதேனும் பிரச்சினை ஏற்படுமானால், வனத் துறையின் நிதி நிலைமைக் கேற்ப கருத்தில் கொண்டு, ஏற்கெனவே இருக்கின்ற மூன்று முதலைப் பண்ணைகளில் அவற்றை மாற்றுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

**திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் வாய்க்காலில் இடம்பெயரும் முதலைகளைப் பிடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வினாவிற்குத்தான் தற்போது விடை அளித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மீண்டும் அதே கேள்வியைக் கேட்பதனால், அருள்கூர்ந்து நான் தற்போது அளித்த பதிலை அவர் திரும்பப் பார்க்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கைகளுக்கு மேலாக, இன்னும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய தேவை இருப்பின், அதையும் இந்த அரசு வனத் துறையின் மூலமாக எடுக்க ஆவன செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூளகிரி, கெலமங்கலம் ஒன்றியத்தைச் சார்ந்த சானமாவு ஊராட்சி, பிஜேபள்ளி ஊராட்சி, காமன்தொட்டி ஊராட்சி, உத்தனபள்ளி ஊராட்சி போன்ற ஊராட்சிகளில் காட்டு யானைகள் அட்டகாசம் செய்கின்றன. விவசாயிகளின் விளைநிலங்களில் யானைகள் நுழைந்து நெல், வாழை, கோஸ், தக்காளி, தென்னை போன்ற பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. யானைகளால் விவசாயிகள் உயிரிழக்கின்றனர். இந்தக் காட்டு யானைகளை உடனடியாகக் கட்டுப்படுத்தி, விவசாயிகளைக் காப்பாற்ற இந்த அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யானைகள் மீதுள்ள பயத்தின் காரணமாக மூலக்கேள்விக்குத்



தொடர்பில்லாமல் கேட்கிறார். நான் இந்த அவையில் பலமுறை யானைகளைப் பிடிப்பது பற்றியும், யானைகளை விரட்டுவது பற்றியும் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினால், வறட்சி நிலவுகிற காரணத்தினால் யானைகள் மற்றும் பிற விலங்குகள் தண்ணீர் உள்ள பகுதிகளைத் தேடி வருகின்றபோது, விவசாயப் பயிர்களுக்கு அழிவு ஏற்படுகின்ற நிகழ்வு நடைபெற்று வருகின்றது. நடந்து முடிந்த வறட்சி மற்றும் நிவாரணப் பணிக் கூட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர் அதிகாரிகளை வைத்து, நம்முடைய வனங்களிலுள்ள விலங்குகளுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற அளவிற்கு நீர்த் தொட்டிகள் அமைப்பது, நிலத்தடி நீரை பைப்புகள் மூலமாக விலங்குகள் இருக்கின்ற இடத்திற்கு அருகில் கொண்டு சேர்ப்பது போன்ற பணிகளுக்காக எவ்வளவு செலவானாலும் செய்யுங்கள், நம்முடைய விவசாய நிலத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என்று உத்தரவிட்டு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்பதை ஏற்கெனவே இந்த சட்டசபை கூட்டத்தொடரின் முதல் நாளில் நான் குறிப்பிட்டிருக்கின்றேன். மீண்டும் அதை உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். நிச்சயமாக விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிற சூழ்நிலையை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அனுமதிக்காது, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் சிறந்த மாநில அரசாக விளங்கி, சிறப்பான நிர்வாகத்தைத் தந்த இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களின் இதயத் துடிப்பாக, கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருக்கின்ற மாண்புமிகு சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, மயிலாடும்பாறை-மல்லப்புரம் தார்ச் சாலை வனப் பகுதியில் இருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் . . . (குறுக்கீடு)

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், இது முதலைப் பண்ணை அமைப்பது சம்பந்தப்பட்ட கேள்வி, இது சம்பந்தமாக ஏதாவது கேளுங்கள். மூலக் கேள்வியைவிட்டு வேறு எங்கும் போகாதீர்கள்; சாலைகள் பற்றியெல்லாம் கேட்காதீர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுபவம் வாய்ந்தவர், அவர் பாராளுமன்றத்தில் பல வருடங்கள் ஆற்றிய பணி எனக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தத் துறையினுடைய சிக்கல் தெரியும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வனத் துறையின் அனுமதி பெற்று, புதிய சாலை அமைத்து, அதில் பேருந்தும் விடப்பட்டது. மதுரை மாவட்டம் மற்றும் தேனி மாவட்ட மக்கள் அதில் சிறப்பாகப் பயணித்தார்கள். ஆனால், தற்போது அந்தச் சாலை பழுதடைந்து இருக்கிறது. அந்தச் சாலையை மீண்டும் புதுப்பித்து புதிய வழித்தடத்தில் பேருந்து விட்டால், அந்தப் பகுதி மக்களுக்கு உதவியாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டதைப்போல் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தாலும்கூட, எங்கள் திண்டுக்கல் அருகில் இருக்கிற தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி என்பதால் இந்தச் சாலைகளைப் பற்றி எனக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தேனி மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அந்தத் தொகுதி மிகவும் முக்கியமான தொகுதி. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக, சட்டமன்ற உறுப்பினராக இருந்த தொகுதி. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே முதலமைச்சராக இருந்த தொகுதி. தற்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் அந்தத் தொகுதியின் உறுப்பினராக இருக்கின்றார்கள். ஏற்கெனவே அங்கே என்னென்ன பிரச்சினைகள் இருந்ததோ அத்தனையும் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் இவர் குறிப்பிட்டிருக்கிற அந்தச் சாலை மிகவும் அத்தியாவசியமான சாலை என்பது எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, ஒரு மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, அங்கே இருக்கிற அரசு கலைக் கல்லூரிக்கு இடம் கிடைக்காமல், வன இலாகா அதற்குத் தடையாக இருந்த செய்தியைக் கேட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். நேற்றையதினம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, வன இலாகா நிலம் என்று இருந்ததை மாற்றி, வன இலாகாவிடமிருந்து அந்த நிலங்களை மீட்டு, அது அரசுக்குச் சொந்தமானது என்று சொல்லி வீரபாண்டி அரசு கலைக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்செல்வன் அவர்கள் குறிப்பிட்ட அந்த மயிலாடும்பாறை-மல்லப்புரம் சாலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பகுதியைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தினால், அதற்கு நிதி ஆதாரங்கள் பெற்று நல்ல நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 பிப்ரவரி 1]

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

## இரயில்வே மேம்பாலம்

***5125——திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2017 பிப்ரவரி 1

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை-மாப்படுகை இரயில்வே கடவில் புதிய மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை-மாப்படுகை இரயில்வே கடவில் புதிய மேம்பாலம் அமைப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என வாழும் காலம்வரை மக்களைப் பற்றியே சிந்தித்து மக்கள் நலனுக்காக பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி மக்கள் போற்றும் மாதரசியாக வாழ்ந்து, நம்மையெல்லாம் மீளா துயரத்தில் ஆழ்த்திவிட்டு, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனங்களில் என்றென்றும் தெய்வமாக வீற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நெஞ்சில் நிறுத்தி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கண்ணின் இமைபோல என் தாயைக் காத்து, ஒன்றரைக் கோடி தொண்டர்களைக் கொண்ட இயக்கத்தில் கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று, எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் தியாகத் தலைவி மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு பல மேம்பாலங்களைக் கட்டி, போக்குவரத்தை சீர் செய்து சாதனை படைத்திட்ட அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், நவக்கிரக ஸ்தலங்களின் மையப் பகுதியாகவும், புகழ்பெற்ற மயூரநாதர் திருக்கோயில் அமைந்துள்ள பகுதியாகவும் விளங்குகிறது. நவக்கிரக



2017 பிப்ரவரி 1]

ஸ்தலங்களுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மயிலாடுதுறை வழியாக பயணிப்பதால், நகரில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இதனைச் சீர்செய்ய மயிலாடுதுறை-கல்லணை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மாப்படுகை இரயில்வே கடவில் மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை-மாப்படுகை இரயில்வே கடவில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி, கல்லணை-காவிரிப்பூம்பட்டினம் மாநில நெடுஞ்சாலையில் SH 22 கி.மீ. 98/4-ல் இரயில்வே கடவு எண் 229-ல் அமைக்கப்படவுள்ள இரயில்வே பாலமாகும். இந்த இரயில்வே கடவின் தற்போதைய வாகன அலகுகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் சற்று கூடுதலாக இருப்பதால், தற்போது பாலம் அமைக்கும் பணியினை மாநில அரசு மற்றும் இரயில்வே துறையின் நிதிப் பகிர்வு அடிப்படையில் மேற்கொள்ள உத்தேசித்து, இரயில்வே துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்அகலம் கு தொடர் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. வி. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மயிலம் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய கூட்டேரிப்பட்டு கிராமத்தில் ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற பணி, 2012 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் அப்பணி முடிவடைந்திருக்க வேண்டும். ஆனால், 2016 ஆம் ஆண்டையும் கடந்து, இன்னமும் அந்த மேம்பாலம் கட்டுகின்ற பணி முடிவடையவில்லை. ஏறத்தாழ 22 கிராமங்கள் அந்த வழியாக போக்குவரத்தைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றன. காலையில் பள்ளி மாணவர்களும், தொழிலாளர்களும் அந்தச் சாலையில் செல்வதற்கு சிரமப்பட்டுக்கொண்டு, மாற்றுப் பாதையில் சென்று கொண்டு இருக்கிறார்கள். இதற்கிடையில், அந்தப் பாலத்தின் இருபுறமும் போக்குவரத்துக்காக அமைக்கப்பட வேண்டிய, சர்வீஸ் சாலை அமைக்கும் பணியில் ஒப்பந்தக்காரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த சர்வீஸ் சாலை என்பது திட்ட மதிப்பீட்டின்படி, மழைநீர் வடிகாலோடு சேர்த்து, இரு பக்கமும் 7 மீட்டர் அளவு அகலம் இருக்க வேண்டும். ஆனால் 3 மீட்டர் அளவு அகலத்திற்குத்தான் அந்தப் பணியைத் துவக்கியிருக்கின்றார்கள். ஒப்பந்தக்காரர்களைக் கேட்டபோது, இன்னும் நிலம் கையகப்படுத்திக் கொடுக்கப்படவில்லை, எனவே, இருக்கின்ற இடத்தில் நாங்கள் பணியைத் துவங்குகிறோம் என்று கூறுகிறார்கள். அந்த ஊர் மக்கள் நேற்று அந்த ஒப்பந்ததாரர்களைப் போராட்டத்தின்மூலமாக தடுத்து, 7 மீட்டர் அளவு அகலத்திற்கு அந்தப் பணியை செய்தால்தான் அந்தப் பணியைத் தொடர விடுவோம் என்று போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சமாதானம் செய்து, உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தி, அந்தத் திட்ட மதிப்பீட்டின்படி இருபுறமும் 7 மீட்டர் அளவு அகலத்திற்கு அந்த சர்வீஸ் சாலையை அமைப்பதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது மயிலம் LC 102 என்று கருதுகின்றேன். அந்தப் பாலப் பணியை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சர்வீஸ் சாலையை 7 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றீர்கள். அதற்கு நிலம் கையகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, தற்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு உண்டான நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

முற்பகல் 10-20

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று நாட்டு மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தவ வாழ்க்கை வாழ்ந்த தன்னிகரில்லா தமிழினத் தலைவராய், தமிழ் மக்களை தரணியிலே முன்னிலைப்படுத்த வாழ்ந்து மறைந்த தங்கத் தாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். கழகத்தினுடைய பொதுச் செயலாளர், எங்களையெல்லாம் வழிநடத்துகின்ற பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த தஞ்சாவூர் சட்டமன்றத் தேர்தலிலே மகத்தான வெற்றியை தன்னுடைய திட்டங்களால் பெற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சாவூர் சட்டமன்றத் தேர்தலிலே என்னுடைய வெற்றிக்காக உழைத்த கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பெருமதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும், கழகத்தினுடைய முன்னோடித் தலைவர்களுக்கும், கழகத்தினுடைய செயல் வீரர்களுக்கும், தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்கள், தொண்டர்கள் மற்றும் தஞ்சாவூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 பிப்ரவரி 1

தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதியின் நீண்ட கால கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சையின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச் சாலைப் பணியை முழுமை அடையச் செய்து, 5 மேம்பாலங்களை தஞ்சை தொகுதியிலே அமைத்துக் கொடுத்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு திட்டை இரயில்வே ஸ்டேஷன் புறவழிச் சாலையிலே, இரயில்வே கடவுப் பாதையில் ஒரு மேம்பாலம் அமைத்துக் கொடுத்து தடையில்லா போக்குவரத்திற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது LC 304 என்று கருதுகிறேன். கடவு எண் 304-ல் கட்டப்படுகின்ற பாலம் செயலாக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அதை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பணியை எடுப்பதிலிருந்து, நேர்ப்பாடு மற்றும் நிலம் ஆர்ஜிதம் செய்து, மதிப்பீடு தயாரித்து, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி முடிக்கப்பட்டு, அந்தப் பணியைச் செய்து முடிக்க கிட்டத்தட்ட 5 முதல் 6 ஆண்டு காலம் ஆகிவிடுகின்றது. இதனால்தான், காலதாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும், பாலப் பணிகள் வேகமாக முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், எனது கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓவேலி பேரூராட்சியில் உள்ள மாவட்ட இதர சாலையான ஸ்ரீபெருமுதன் முதல் பெரியசோலை வரை உள்ள சாலை திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு C.R.I.D.P. திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, வனத் துறையின் அனுமதி பெற்று விரைவில் பணி தொடங்கப்படுமென்று அறிவித்தார்கள். ஆனால், இதுவரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை. இதே பேரூராட்சியிலுள்ள சுண்ணாம்புப் பாலமும் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தை உடனடியாகச் சீர் செய்து, போக்குவரத்தைச் சரி செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்த வினாவை கடந்த கூட்டத்தொடரின்போதும் எழுப்பினார்கள். அதன் தொடர்ச்சியாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தச் சாலையை சீர் செய்ய வேண்டுமென்று நிதி ஒதுக்கீடு செய்து, டெண்டர் விட உத்தரவிட்டார்கள். மேற்படி சாலை அமையவுள்ள பகுதி வனப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, வனத் துறையினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும், விரைந்து வனத் துறையின் அனுமதி பெற்று அந்தச் சாலையைச் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**33—**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

****3449—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

*மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குளம் தொகுதியில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். அவர் சட்டமன்ற உறுப்பினராக முன்பும் இருந்திருக்கின்றார். திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் சட்டமன்றத்திற்குட்பட்ட ஆலங்குளத்திலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது 23-12-2015 அன்று புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. பி.ஜி. இராஜேந்திரனுடைய கோரிக்கையினை ஏற்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து, புதிய குற்றவியல் நீதிமன்றத்தை 22-12-2016 அன்று நானே நேரடியாக சென்று திறந்து வைத்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்* (Judicial Magistrate cum District Munsif Court) *அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நீங்கள் கேட்ட இரண்டு நீதிமன்றங்களில்* Judicial Magistrate Court *திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், முன்னாள் அ.தி.மு.க. பேரூராட்சித் தலைவர் அவர்களுடைய சோப்பு கம்பெனி செயல்பட்டு வந்த இடத்தில் கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்துதான் நீதிமன்றத்தைத் திறந்திருக்கிறீர்கள். அதுவும் வாடகைக் கட்டடத்தில்தான் தற்போது அந்த நீதிமன்றம் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாமல் இயங்கி வருகின்றது. இரண்டே இரண்டு கழிப்பறைகள்தான் அங்கு உள்ளன. அங்கு வரும் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, அந்த நீதிமன்றம் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மட்டுமல்லாமல் உரிமையியல் நீதிமன்றமாகவும் செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அந்த நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா? ஏனென்றால் இப்போது நீதிமன்றம் இயங்கிவரும் இடம் ஆலங்குளம் பேருந்து நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்தப் பகுதியில் அடிப்படை வசதிகளும் சரியாக இல்லை. அறிவிக்கப்பட்டு ஒரு வருடம் கழித்துத்தான் அந்த நீதிமன்றத்தை அந்த இடத்தில் திறந்திருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது ஏன் சொந்தக் கட்டடம் கட்டாமல் வாடகைக் கட்டடத்தில் திறந்திருக்கிறீர்கள்? வேறு நல்ல இடத்தைத் தேர்வு செய்து நீதிமன்றத்தை நீங்கள் அமைத்திருக்கலாம். அந்த நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டவும், அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோருகின்றபடி*

Judicial Magistrate cum District Munsif Court-க்கான செயற்குறிப்பினை அரசே தானாக அறிவிக்க முடியாது. அந்தச் செயற்குறிப்பு மாவட்ட நீதிபதியின்மூலம் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றம் மூலமாக அரசுக்குப் பரிந்துரையாக வரப்பெறவேண்டும். அந்தப் பரிந்துரையின்படிதான் அரசு, முன்னுரிமையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளும். மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கை சம்பந்தமாக இதுவரை உயர் நீதிமன்றத்திலிருந்து எந்த ஒரு செயற்குறிப்பும் பெறப்படவில்லை. உரிமையியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அங்கே நான் சென்றபோதே வழக்கறிஞர்கள் என்னிடம் வைத்தார்கள். ஆனால், உயர் நீதிமன்றத்திலிருந்து அப்படி ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த 6 மாத காலத்தில் மட்டும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பகுதியில் உரிமையியல் நீதிமன்றம் வேண்டும், குற்றவியல் நீதிமன்றம் வேண்டும், சார்பு நீதிமன்றம் வேண்டும், கூடுதல் மாவட்ட நீதிமன்றம் வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து, மாவட்ட நிருவாகம் மூலமாக பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத்திலே அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தாமலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த 6 மாத காலத்தில் மட்டும் 191 புதிய நீதிமன்றங்களை அறிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் உளுந்தூர்பேட்டை, காங்கேயம், ஆலந்தூரிலே சார்பு நீதிமன்றம் அறிவிக்கப்பட்டது. கடந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி கிட்டத்தட்ட 32.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 புதிய நீதிமன்றங்களுக்கு அரசாணையே வெளியிடப்பட்டுவிட்டது.

அதிலே, ஜெயங்கொண்டம், குன்னூர், பாலக்கோடு மற்றும் மேட்டுப்பாளையத்திலே சார்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (Judicial Magistrate Court) ஸ்ரீபெரும்புதூர், ஜெயங்கொண்டம், தூத்துக்குடி, பெருந்துறை மற்றும் திட்டக்குடி.





அதுமட்டுமல்லாமல், 15 குடும்ப நல நீதிமன்றங்கள்: அரியலூர், கடலூர், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவண்ணாமலை மற்றும் திருப்பூர்.

*முற்பகல் 10-30*

இதுமட்டுமல்லாமல், மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள்; வேடசந்தூர், சேலத்திலே இரண்டு நீதிமன்றங்கள், பெரம்பலூர், பொள்ளாச்சி, தேன்கனிக்கோட்டை, மேட்டுப்பாளையம், திட்டக்குடி மற்றும் திருவள்ளூர். (குறுக்கீடுகள்) கேட்டதற்குப் பதில் சொல்கிறேன். நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதையும் சொல்ல வேண்டும் அல்லவா? நீங்கள் உங்கள் தொகுதியில் என்ன நடந்தது என்றே தெரியாமல் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பும் சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளீர்கள். உங்கள் தொகுதியில் ஒரு நீதிமன்றம் அறிவித்தது தெரியாமலேயே ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். அதைச் சொன்னால் உங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் செய்திருப்பதைச் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இது எனக்கு மட்டும் அல்ல. அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடுகள்) சொந்தக் கட்டடம் கேட்டுள்ளார்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கும் சேர்த்துத்தான் பதில் சொல்கிறேன். அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பூங்கோதை ஆலடி அருணா அவர்கள் கேட்ட கேள்விக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதில் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இடையிலே, உறுப்பினர் அவர்கள் எதையும் தெரிந்துகொள்ளாமல் வந்து பேசுகிறார் என்று சொல்வது, ஏதோ எங்களுடைய உறுப்பினரைக் குறை சொல்வதுபோல, குற்றம் சொல்வதுபோல அமைந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) கேள்வி

[2017 பிப்ரவரி 1

நேரத்திலே இதுபோன்ற குறைகளை, குற்றங்களை, அதுவும் உறுப்பினரைச் சுட்டிக்காட்டிச் சொல்வது என்பது மரபல்ல. எனவே, இது முறைதானா என்பதை எடுத்துச் சொல்லி, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், கேள்வி நேரத்தில் முடிந்தவரையில் நீங்கள் நேரடியாக பேசுவதைத் தவிர்த்துவிடுங்கள். இரண்டாவது, உறுப்பினர்களை தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டுவது மாதிரியாக எந்தத் தொனியிலும் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை. நான் என்ன சொன்னேன் என்பதை தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) நான் அவரைப் பற்றி குற்றச்சாட்டே சொல்லவில்லை, தயவுசெய்து நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். நான் எதுவுமே சொல்லவில்லை. என்ன சொன்னேன் என்பதை தயவு செய்து புரிந்துகொள்ளுங்கள். நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை. அவர் சட்டமன்ற உறுப்பினராக வந்த பின்னர் கேள்வி கேட்டிருக்கிறார். என்ன கேள்வி கேட்டிருக்கிறார் என்றால், ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் (Judicial Magistrate cum District Munsif Court) வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். ஆனால். 23-12-2015 அன்று இதே மன்றத்திலே மாண்புமிகு அம்மா அவர்களால், உறுப்பினர் கேட்டிருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதிக்கு Judicial Magistrate Court அறிவிக்கப்பட்டு, 22-12-2016 அன்று நான் நேரடியாகச் சென்று, அந்த Court-ஐத் தொடங்கி வைத்தேன் என்றுதான் சொன்னேன். இதில் குற்றச்சாட்டு எங்கு வந்தது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** அவர்கள் உட்கார்ந்துகொண்டு கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** இதில் எங்கிருந்து குற்றச்சாட்டு வந்தது? (குறுக்கீடுகள்) இதில் எங்கிருந்து குற்றச்சாட்டு வந்தது? இருப்பதைச் சொல்லக் கூடாதா? தெரியாமல் கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஏன் கேள்வி கேட்டீர்கள்? (குறுக்கீடுகள்) அப்படியென்றால் முன்சீப் கோர்ட் மட்டும்தானே வேண்டும் என்று கேட்க வேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். கேள்வி நேரத்தில் யாராக இருந்தாலும், என்னைப் பார்த்துப் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) என்னைப் பார்த்துப் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) இருங்கள். எல்லோரும் பேசினால் எப்படி நான் பதில் சொல்வது? எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் என்னைப் பார்த்துப் பதில் சொன்னால் பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் உட்கார்ந்துகொண்டே பேசினார். அவருக்கு மற்றொரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அவர் பேசலாம். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும் வரையிலும் பொறுமையாக இருக்க வேண்டும். உறுப்பினர் கேட்டவுடனே, மாண்புமிகு அமைச்சர் மீதி விவரங்களையும் சொல்ல வேண்டியுள்ளது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி பூங்கோதை, உட்காருங்கள், உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. இரவிச்சந்திரன், நீங்கள் கேள்வி கேட்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) திரு. இரவிச்சந்திரன், நீங்கள் கேள்வி கேட்கவில்லை. கேள்வியை அவர் கேட்டிருக்கிறார். அவருக்குக் கேள்வி கேட்க மற்றொரு வாய்ப்பிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுவதும் பதில் சொல்லி முடிக்கிற வரை, பொறுமையாக இருந்து, மீண்டும் என்ன கேட்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதனைக் கேட்கலாம், அதற்கு வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

[2017 பிப்ரவரி 1

அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்பொழுது, நாங்கள் எல்லோரும் அமைதியாக இருந்து கேட்கிறோம். இப்போது, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுதும், அமைச்சர் அவர்கள் பேசும்பொழுதும், எல்லோரும் பரவலாக எழுந்து நின்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் கண்டிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இங்கே யாருமே பேசுவது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போதே, எல்லோரும் எழுந்து கொள்கிறார்கள், எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது எப்போதோ ஒரு முறை நடப்பது கிடையாது. இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் அதைக் கவனித்து, அந்தப் பக்கம் கண்டிக்க வேண்டும். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, தொடர்ந்து எதிர்க்கட்சியினர் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அமைச்சர் சரியாக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் பதில் சொல்லி முடித்தவுடன், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசட்டும். சம்பந்தப்பட்ட உறுப்பினர் சொன்னால், அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். ஆனால், எல்லோரும் பரவலாகப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லாமல் பேசுகிற காரணத்தினால், நீங்கள் அமைதியாக இருக்கிறீர்கள். இதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது அதற்கு மரியாதை கொடுத்து, அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனமாகக் கேட்டு, அதற்குத் தகுந்த பதிலை நாங்கள் சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்வரிசையில் இருக்கின்றவர்கள், நாங்கள் பதில் சொல்வதையே கேட்பது கிடையாது. என்ன சொல்ல வருகிறோம் என்பதைப் புரிந்துகொள்வதும் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே, தான் இதுபோன்ற பிரச்சினை வருகின்றது. (குறுக்கீடுகள்) ஆகவே, அவர்கள் அமைதியாக இருந்து. . . (குறுக்கீடுகள்) பாருங்கள், என்ன பேசுகிறார்கள்? (குறுக்கீடுகள்) எதைக் கண்டீர்கள்? இதுதான் எதிர்க்கட்சியின் ஒழுங்குமுறையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அழைக்கின்றீர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை அழைக்கின்றீர்கள். இருவரும் தங்களுடைய கோரிக்கைகளை, கருத்துகளை இங்கே வைக்கின்றார்கள். ஆகவே, நாங்கள் எல்லோரும் அமைதியாக இருக்கின்றோம். நான் இப்போது பேசிக் கொண்டிருக்கும்பொழுதே, அவர்கள் எழுந்து நின்று பேசுகிறார்கள். நான் பேசும்பொழுது, அதில் என்ன தவறைக் கண்டுபிடித்தார்கள்? அவர்கள் எழுந்து நின்று பேசுகிறார்கள். நாங்கள் சரியாகத்தான் சொல்லிக் கொண்டு வருகிறோம். (குறுக்கீடுகள்) பாருங்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் எப்படிப் பேச முடியும்? எப்படி அவர்கள் கேட்கும் வினாவிற்கு நாங்கள் பதில் சொல்வது? (குறுக்கீடுகள்) ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இருதரப்பினருக்கும் சரியான ஒரு தீர்ப்பைத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரைக்கும், அவர்கள் என்ன கேள்வி கேட்கிறார்களோ அதற்கு சரியான விளக்கம் சொல்கின்றோம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன கேள்வி கேட்கிறார்களோ, அதற்குரிய பதிலைத்தான் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். அதற்கு, நம்முடைய

[2017 பிப்ரவரி 1

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விளக்கங்களைக் கேட்டார். அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தகுந்த விளக்கத்தைத் தந்தார். இதில் எந்தவிதக் குறைபாடும் இல்லை. அமைச்சர் பதில் சொல்கின்றபோது, உறுப்பினரை நான் எந்தவிதத்திலும் குறை சொல்லவில்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். இருக்கின்ற நிலைமையைத்தான் அவர் சொன்னார். அதற்கு இவ்வளவு பேர் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. நல்ல கருத்துகளைச் சொல்கின்றபொழுது, தேவையில்லாமல் வேண்டுமென்றே உணர்ச்சி வசப்பட்டு பேசுவது தவறு. ஆகவே, தாங்கள் எடுக்கின்ற முடிவுதான் இறுதியானது. இங்கே இருக்கின்ற அமைச்சர்கள், உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விக்கு முழுமையாகப் பதில் தருகின்றார்கள். இது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற அடிப்படையில், அமைதியாக அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருதரப்பிற்கும் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார். நான் குற்றச்சாட்டு எதுவும் சொல்லவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். பின்பு, நீங்கள் குற்றச்சாட்டு, குற்றச்சாட்டு என்று சொன்னால், நான் என்ன சொல்வது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, குற்றச்சாட்டு இல்லை என்று சொல்லிவிட்டார். நான் எல்லோருக்கும் பொதுவாகச் சொல்கிறேன். பல விஷயங்களைப் பேசும்போது என்னைப் பார்த்துப் பேசினால், பிரச்சினைகள் தீர்ந்துபோகும். நேரிடையாக உறுப்பினர்கள் பேசிக்கொள்வதால், பல பிரச்சினைகள் வருகின்றன. அதனை மாண்புமிகு உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று யார் பேசினாலும் சரி, எந்தப் பக்கம் இருப்பவர்கள் பேசினாலும், பொறுமையாக மற்றவர்கள் கேட்டால், அதற்குரிய பதில் சொல்ல அமைச்சர்களுக்கு வாய்ப்பிருக்கும். பல நேரங்களில், உட்கார்ந்து கொண்டே comment அடிப்பதனால், உட்கார்ந்து கொண்டே விமர்சனம் செய்வதனால், பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, இனி தயவுசெய்து அனைத்து உறுப்பினர்களும் உட்கார்ந்து கொண்டு பேசுவதைத் தவிர்க்கவும், நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்று



2017 பிப்ரவரி 1]

சொன்னால், கையை உயர்த்தினால் நான் சூழ்நிலைக்கேற்ப வாய்ப்புத் தருகிறேன்; நீங்கள் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லலாம். ஆகவே, எல்லோரும் பொறுமை காத்து இந்த அவையை நல்லமுறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், உங்களுடைய பதிலைத் தொடருங்கள்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இங்கே அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய பகுதியிலே புதிய நீதிமன்றங்கள் வேண்டும், புதிய கட்டடங்கள் வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளை இந்தச் சட்டமன்றத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் வலியுறுத்தாத நிலையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த 6 மாத காலத்திலே மட்டும் 191 புதிய நீதிமன்றங்களை அமைப்பதற்கு ஆணையிட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், கேள்வி கேட்டிருக்கிறவர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, நீங்கள் எதற்கு இப்போது பேசுகிறீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** 191 நீதிமன்றங்களிலே 38 நீதிமன்றங்கள் அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. மீதியிருக்கின்ற நீதிமன்றங்களுக்கு சட்டத் துறையின்மூலம் அனுமதி அளிக்கப்பட்டு, இப்போது அது நிலுவையிலே இருக்கிறது. இன்னும் ஓரிரு தினங்களிலே அதற்கும் அரசாணை வெளியிடப்பட்டுவிடும். ஆக மொத்தம், 191 புதிய நீதிமன்றங்கள்; அரசாணை வெளியிடப்பட்டதிலே சார்பு நீதிமன்றங்கள் அமைய இருக்கின்ற பகுதிகள் ஜெயங்கொண்டம், குன்னூர், பாலக்கோடு மற்றும் மேட்டுப்பாளையம். குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் 5; ஸ்ரீபெரும்புதூர், ஜெயங்கொண்டம், தூத்துக்குடி, பெருந்துறை, திட்டக்குடி மற்றும் குடும்பநல

[2017 பிப்ரவரி 1

நீதிமன்றங்கள் 15; அரியலூர், கடலூர், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் மாவட்ட மற்றும் கூடுதல் மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் 9; வேடசந்தூர், சேலத்தில் 2 நீதிமன்றங்கள், பெரம்பலூர், பொள்ளாச்சி, தேன்கனிக்கோட்டை, மேட்டுப்பாளையம், திட்டக்குடி மற்றும் திருவள்ளூர். மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் 3; கும்மிடிப்பூண்டி, வாழப்பாடி மற்றும் பள்ளிப்பட்டு மற்றும் சிறப்பு நீதிமன்றங்கள் 2; சென்னையிலே வங்கி மற்றும் நிதி நிறுவன மோசடியை விசாரிக்க ஒரு சிறப்பு நீதிமன்றம். விழுப்புரத்தில் மயக்க மற்றும் போதை மருந்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க ஒரு சிறப்பு நீதிமன்றம். அதுமட்டுமின்றி, இப்போது விரைவிலே அரசாணை வெளியிடப்படவுள்ள நீதிமன்றங்கள்; சார்பு நீதிமன்றங்கள் 12; மேலூர், வேலூர், அறந்தாங்கி, பல்லடம், கூடலூர், உசிலம்பட்டி, இரணியல், முதுகுளத்தூர், மானாமதுரை, லால்குடி, ஓமலூர் மற்றும் பரமத்தி. கூடுதல் சார்பு நீதிமன்றங்கள்; ஸ்ரீவில்லிபுத்தூர், அரியலூர், பொன்னேரி, தருமபுரி, பழனி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் நாமக்கல். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்; நாங்குநேரி, செங்கம், ஸ்ரீபெரும்புதூர், ராஜபாளையம், அத்தியூர், இரணியல், வந்தவாசி, பெருந்துறை மற்றும் சிவகிரி. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்; ஆத்தூர் மற்றும் தஞ்சாவூர். மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள்; இராணிப்பேட்டை, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலங்குடி. கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்; திருவண்ணாமலை, நாகப்பட்டினம், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகங்கை. அதுமட்டுமின்றி, சென்னையிலே மாவட்ட நீதிமன்றங்கள் தலைமையிலே 14 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படும். சிறப்பு நீதிமன்றங்கள்; S.C./S.T. வழக்குகளை விசாரிப்பதற்கு 16 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படும். 22 மாவட்டங்களிலே மகளிர் நீதிமன்றங்கள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

அதுமட்டுமல்லாமல் இரயில்வே சட்ட வழக்குகளை விசாரிக்க ஒரு நடமாடும் நீதிமன்றம். சைதாப்பேட்டையிலே ஒரு விரைவு நீதிமன்றம். போலி முத்திரைத்தாள் வழக்குகளை விசாரிக்க



2017 பிப்ரவரி 1]

சென்னையிலே ஒரு சிறப்பு நீதிமன்றம். கொடைக்கானலில் ஒரு சிறப்பு குற்றவியல் நீதிமன்றம். சுங்க வரி சட்ட வழக்குகளை விசாரிக்க ஆலந்தூரில் ஒரு சிறப்பு நீதிமன்றம். நில அபகரிப்பு வழக்குகளை விசாரிக்க செங்கல்பட்டில் ஒரு சிறப்பு நீதிமன்றம். மாற்றுரிமை ஆவண சட்ட வழக்குகளை விசாரிக்க திருநெல்வேலியிலே ஒரு சிறப்பு நீதிமன்றம். அதுமட்டுமின்றி, நீதிமன்றம் இல்லாத தாலுகாவை எல்லாம் கண்டறிந்து, அந்தத் தாலுகாவில் எல்லாம் ஒரு சிறப்பு குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சிறு வழக்குகளை விசாரிப்பதற்காக 51 நீதிமன்றங்களை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம் இந்த 6 மாத காலத்திலே மட்டும் அம்மா அவர்களுடைய அரசு 191 புதிய நீதிமன்றங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்த 6 மாத காலத்திலே மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 346.68 கோடி ரூபாயை புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு, நீதிமன்றக் கட்டடங்களை அமைப்பதற்கு, நீதிமன்றங்களில் அடிப்படை உள்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு நிதியை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் புதிய நீதிமன்றக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் ஆகியவற்றை பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் பகுதியிலே கேட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, வாடிப்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றம் 6.7 கோடி ரூபாய், செங்கம் 10.98 கோடி ரூபாய், ஸ்ரீபெரும்புதூர் 8.9 கோடி ரூபாய், சிதம்பரம் 20.11 கோடி ரூபாய், இராஜபாளையம் 9.64 கோடி ரூபாய், கிருஷ்ணகிரி 16.73 கோடி ரூபாய், தென்காசி 15.16 கோடி ரூபாய், தஞ்சாவூர் 35.39 கோடி ரூபாய், சிவகாசி 16.16 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், இது மூன்றாவது கேள்வி. இன்னும் ஏழு கேள்விகள் இருக்கின்றன. நேரம் ஆகிவிட்டது. கொஞ்சம் விரைவாக பதில் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** அம்மா அவர்களுடைய அரசு என்ன செய்கிறது என்று சொன்னால் உங்களுக்கு எரிச்சல் வருகிறது. (குறுக்கீடுகள்) நாங்கள் என்ன செய்ய முடியும். (குறுக்கீடுகள்) கேட்டுக்கொள்ளுங்கள். இந்த ஐந்தாண்டு காலத்திலே

[2017 பிப்ரவரி 1

செய்ததைத்தான் நாங்கள் சொல்வோம். சொல்வதற்குத்தான் எங்களை அமைச்சர்களாக வைத்திருக்கிறார்கள். புரிகிறதா? இந்த ஐந்தாண்டு காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 414 நீதிமன்றங்களை அமைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், இன்று எங்கள் அன்பு அண்ணன் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி ஆகியோரின் பயிற்சிப் பாசறையில் பயின்றவர்கள் நாங்கள். நாங்கள் ஆராய்ந்துதான் பேசுவோம், ஆதாரத்தோடுதான் பேசுவோம், துதிபாடமாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) அவரே சொல்லிவிட்டார். நீங்கள் தேவையில்லாததை எதற்குப் பேசுகின்றீர்கள். (குறுக்கீடு) கேள்வியைக் கேளுங்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** ஆதாரமில்லாமல் பேசுகிறேன் என்று சொல்கிறார் அல்லவா? அதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? நான் கேட்டது ஒருங்கிணைந்த குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றம். தவறாக எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. ஆலங்குளம் தொகுதி, பெரிய தொகுதி. அதிக மக்கள் வாழ்கின்ற தொகுதி. We need a combined Court. அதைத்தான் நாங்கள் சொல்ல வந்தோம். ஒரு வருடம் கழித்து அந்த நீதிமன்றத்தை அமைக்கின்றீர்கள். அதுவும் எங்கே என்றால் A.D.M.K. முன்னாள் பேரூராட்சித் தலைவர் அவர்களுடைய சோப்பு கம்பெனி வளாகத்தில் அமைக்கின்றீர்கள். எப்போது நீங்கள் புதிய கட்டடம் அமைத்துத் தருவீர்கள்? நாங்கள் இலவசமாக இடம் தரத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** அதுமட்டுமல்ல. அரசு நிகழ்ச்சி நடக்கிறது. அந்த அரசு நிகழ்ச்சிக்கு எந்தவித அழைப்பும் எங்களுக்கு வரவில்லை என்பதையும் இந்த மாமன்றத்தில் நான்



2017 பிப்ரவரி 1]

பதிவு செய்ய விரும்புகின்றேன். ஆராய்ந்து, தெரிந்துதான் ஆலங்குளம் தொகுதி மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்துள்ளார்கள் என்பதை நான் தெரியப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். அரசு நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் அனுப்பவில்லை என்று. அது அரசு நிகழ்ச்சியே அல்ல. அது நீதிமன்றத்தால், நீதித் துறையால் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி. ஆனால், அவர்கள் அழைப்பு அனுப்பியிருக்க வேண்டும். நீதித் துறை சார்பாக உங்களுக்கு அழைப்பு அனுப்பியிருக்க வேண்டும். இரண்டாவது, நீதித் துறையிலிருந்து எங்களுக்கே யாரும் நேரடியாக வந்து அழைப்பிதழ் கொடுக்க மாட்டார்கள். அந்த வழக்கறிஞர் சங்கத்திலிருந்துதான் கொண்டுவந்து கொடுப்பார்கள். வழக்கறிஞர் சங்கத்திற்கும் உங்களுக்கும் என்ன பிரச்சினை என்பதை நீங்கள்தான் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டும். அழைப்பிதழைக் கொடுக்கவில்லையென்றால் அது தவறுதான். ஆனால், இது அரசு நடத்துகின்ற நிகழ்ச்சி அல்ல ஒன்று. இரண்டாவது, நீங்கள் அரசாணையைப் போட்டு ஓராண்டு காலம் கழித்து இந்த நீதிமன்றத்தைத் திறந்தீர்கள் என்று சொன்னார். உயர் நிதிமன்றத்திலிருந்து பல்வேறு நீதிமன்றங்களுக்குப் பரிந்துரையை அனுப்புவார்கள். அதில், முன்னுரிமை அடிப்படையிலே, நிதிநிலைமைக்கேற்ப சில நீதிமன்றங்களை அரசு ஏற்று, அதற்கு அரசாணை போடுவதோடு அரசினுடைய வேலை முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு, அந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்வது உயர் நீதிமன்றம். உயர் நீதிமன்றம்தான் அதற்கான இடங்களைத் தேர்வு செய்து, எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதைப் பரிந்துரை செய்து, அந்த இடம் எங்களுக்கு வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அனுப்பும். அதன்பிறகுதான் அரசு அந்த இடத்தை ஒதுக்கித் தரும். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு அங்கு பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** கேள்வியை அவர்தானே கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பதிலை என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். அவர்கள் எங்கேயோ பார்த்துவிட்டுப் போகட்டும். நீங்கள் என்னைப் பார்த்துப் பதிலைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** அவர் இன்னொரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதாயம் அடைய வேண்டும் என்பதற்காக நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார். இது தவறான குற்றச்சாட்டு. நீதிமன்றம் திறப்பதற்கு யாருமே இடம் தர மாட்டார்கள். அங்கே முன்னாள் சட்டத் துறை அமைச்சர் உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு நன்றாகவே தெரியும். வழக்கறிஞர் என்றால் முதலில் வீடே தரமாட்டார்கள். அந்தத் தொகுதியிலே அரசு ஒரு நீதிமன்றத்தைக் கொடுத்திருக்கிறது. நீதிமன்றம் திறக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே, விரைந்து திறக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே ஒருவர் தன்னுடைய இடத்தைக் கொடுத்திருக்கிறார். அதைப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது. நீங்கள் வேண்டுமானால் கொடுங்கள். ஆலங்குளத்தைச் சுற்றி நிலம் வைத்திருக்கிறீர்கள், கல்லூரி, பள்ளிகள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்; நீங்கள் கொடுங்கள், நாங்கள் வரவேற்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம். இன்னொரு கேள்வி கேட்டார்கள். அரசு, புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார். நீதிமன்றம் திறந்த அன்றைக்கே உங்களுடைய வழக்கறிஞர்கள் 2, 3 இடங்களைக் காட்டினார்கள். மெயின் இடத்தில் ஓர் இடத்தைக் காட்டினார்கள். அந்த இடத்தைத் தேர்வு செய்து, அப்போதே நாங்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் சொல்லி, அவர்கள் சொல்கின்ற இடத்தைப் பார்வையிட்டோம். அந்த இடம் தகுதியாயிருப்பின், உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில், உயர் நீதிமன்றத்திலிருந்து அரசுக்குப் பரிந்துரை வரும் பட்சத்தில், நீதிமன்றத்திற்குக் கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிய கட்டடம் கட்டித் தரும். (மேசையைத் தட்டும் ஒலி)



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

## அல்லுக்கூடம்

***5538—திரு. எஸ். முத்தையா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் பகுதியில் அல்லுக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் தியாகத் தலைவி சின்னம்மா அவர்களையும் வணங்கி துவங்குகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் பகுதியில் அல்லுக்கூடம் அமைக்க அரசு முன்வருமா என்பது கேள்வி. மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் அல்லுக்கூடம் என்பது என்னவென்று தெரிய வேண்டும் என்பதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். பாவு மற்றும் ஊடை நூல்களுக்கு கஞ்சி தோய்த்தல் மற்றும் பாவு தோய்த்தல் செய்யும் இடத்திற்கு பாவடி இடம் அல்லது அல்லுக்கூடம் என்று பெயர்.

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி மற்றும் எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பரமக்குடி கிழக்குப் பகுதியில் ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் பரமக்குடி நகராட்சியால்

[2017 பிப்ரவரி 1

‘அம்மா அல்லுக்கூடம்’ என்ற பெயரில் 5,000 சதுர அடி பரப்பளவில் அல்லுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. பரமக்குடி பகுதியில் ஏற்கெனவே ஓர் அல்லுக்கூடம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருவதால், எமனேஸ்வரம் பகுதிக்கு என தனியாக மேலும் ஓர் அல்லுக்கூடம் அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா அவர்கள்.

*முற்பகல் 10-55*

**திரு. எஸ். முத்தையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் நிறுத்திய புரட்சித் தலைவி அம்மா, உங்களை கடற்கரையில் புதைக்கவில்லை, எங்கள் கண்களுக்குள் புதைத்து விட்டு, கனத்த இதயத்தோடு காத்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடல் அலைகள் இல்லையம்மா, கடல் அலைகள் இல்லை உங்களை தினமும் ஒட்டி உரசுவது, இரத்த அலைகள். காரணம், நீங்கள் ஒட்டிக்கிடப்பது எங்கள் இதய சுவர்களில். எங்கள் விழி சுமந்த தாயே! உங்களை விதி சுமந்து சென்றதோ! இதயம் சுமந்த உங்களை இறைவன் சுமந்தானோ! அம்மா! உங்களுக்குப் பின் வெடித்து சிதறுவோம் என்று விழி விரித்து காத்துக் கிடந்தனர் சிலர். ஆனால், விதையாக விழுந்து விருட்சமாக முளைத்திருக்கிறோம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஊதினால் உடைந்து போக முருங்கை மரமா நாங்கள்! ஒன்றரைக் கோடி விழுதுகளைக் கொண்ட ஆழமான ஆலமரம் அம்மா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) 33 ஆண்டு காலம், சிங்கத்தின் குகைக்குள் சிலந்திப் பூச்சியாக இருந்திருக்கும்; சீறும் சிங்கம் எங்கள் சின்னம்மா, பெரியோர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) சீறும் சிங்கம் வரப் போகிறார்கள். சீறி தமிழகத்தில் பாயப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமக்குடி நகர் பகுதியில் சௌராஷ்டிரா வகுப்பைச் சார்ந்த கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியான எமனேஸ்வரம் வாக்குச்



2017 பிப்ரவரி 1]

சாவடியில் இரட்டை இலை சின்னம் இல்லையென்றால் திரும்பி வந்துவிடும் தீவிர அம்மா விசுவாசிகள் வாழும் பகுதியாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, அந்தப் பகுதிக்கு நிச்சயமாக மீண்டும் ஒரு நல்ல, சிறந்த, ஏ.சி. வசதி கொண்ட ஒரு அல்லுக்கூடம் அமைத்துத் தரும்படி மிகப் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அல்லுக்கூடம் அமைப்பதற்கான ஓர் இடத்தைத் தேர்வு செய்து தருவாராயின், அவருடைய இந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா அவர்கள்.

**திரு. எஸ். முத்தையா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

### புற்றுநோய்ப் பிரிவு

***1051—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனையில் புற்றுநோய்ப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மருத்துவமனை 48 படுக்கைகள் கொண்ட ஒரு non-taluk hospital, வட்டம் சாரா அரசு மருத்துவமனை ஆகும். அங்கே கர்ப்பப் பை மற்றும் வாய் புற்றுநோய்க்கும், மார்பகப் புற்றுநோய்க்கும் screening செய்யக்கூடிய NCD corner என்று சொல்லக்கூடிய பிரிவு அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகையினால், மேற்கூறிய மருத்துவமனையில் பரிசோதிக்கப்படுபவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனையிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, குளச்சல் அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் அரசு மருத்துவமனை மிகவும் பழமைவாய்ந்த மருத்துவமனை ஆகும். அங்கே எந்த developments-ம் இல்லை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட மணவாளக்குறிச்சி I.R.E.L. மணல் ஆலையிலிருந்து waste ஆகப் போடக்கூடிய அந்த மணலிலிருந்து கதிர்வீச்சு அதிகமாக வருக்கிறது. அதன்காரணமாக அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகமான மக்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்கின்றனர். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் புற்றுநோய்தான் மிக முக்கியமான நோய். அதனால், மக்கள் அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நோயிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு, அந்த மக்களுக்கு நல்ல மருத்துவம் கொடுப்பதற்கு, தகுந்த மருத்துவமனை இல்லை. நோயாளிகள் கேரளாவிலுள்ள திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள கேன்சர் சென்டருக்குத்தான் போக வேண்டும். அங்கு போக வேண்டுமென்று சொன்னால், சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே இந்தப்



2017 பிப்ரவரி 1]

பிரச்சினை குறித்து நான் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். பல்வேறு கேள்விகள்கூட கேட்டிருக்கிறேன். மிகவும் மோசமான நிலையில், கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு அந்த மருத்துவம் கொடுக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிடுகிறேன். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தகுந்த இடம் குளச்சல். கடலோரப் பகுதி மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தப் பகுதியில் புற்றுநோய் தடுப்புப் பிரிவு ஒன்றை அமைத்தால் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுவார்கள். ஆகவேதான், இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அந்தப் பகுதியில் ஒரு கேன்சர் பிரிவினை அமைக்க வேண்டும். ஏனென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமை மருத்துவமனையாக இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அந்த treatment-க்கான வசதி இல்லை. திருநெல்வேலிக்குத்தான் போக வேண்டும். அந்தப் பகுதி மக்கள், சுமார் 120 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். ஆகவே, என்னுடைய கேள்விக்கு தக்க பதிலை நீங்கள் தர வேண்டும். நிச்சயமாக குளச்சல் அரசு மருத்துவமனையில் ஒரு கேன்சர் பிரிவு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புற்றுநோய் சிகிச்சை உயர்தர சிகிச்சை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக புற்றுநோய்க்கு கதிர்வீச்சு சிகிச்சை, அதாவது, Radiotherapy, Chemotherapy இவையெல்லாம் மற்ற நோயாளிகளுக்கோ அல்லது உடன் வருபவர்களுக்கோ பாதிப்பு ஏற்படாதவண்ணம் இந்த கதிர்வீச்சு வெளியே செல்லாத அளவிற்கு மிகவும் பாதுகாப்பான கட்டடத்தை ஏற்படுத்தி உயர்தர சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. குளச்சல் போன்ற இடங்களில் இதற்கான பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையங்களை மத்திய அரசு உதவியோடு

[2017 பிப்ரவரி 1

செயல்படுத்தி வருகிறது. அதனால்தான், இப்போது திருநெல்வேலியில் 15 கோடி ரூபாய் மதிப்பில் Regional Cancer Centre அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் தஞ்சாவூரில் ஒரு Regional Cancer Centre, மதுரையில் ஒரு Regional Cancer Centre, திருச்சியில் ஒரு Regional Cancer Centre என மண்டலவாரியாக அமைக்கப்பட்டுள்ளன. குளச்சல் அரசு மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியக்கூடிய வசதி இருக்கிறது. அப்படிக் கண்டறியப்பட்டவர்கள் மேல் சிகிச்சைக்காக அவர்கள் முறையாக மண்டல ஆராய்ச்சி மையத்திற்கு வந்தால்தான் முழுமையான சிகிச்சை வழங்கப்படும் என்பதற்காகத்தான் எப்போதுமே Referral Centre-ஐ பயன்படுத்தி வருகிறோம். அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கம். உங்களுடைய மாவட்டத்தில் எந்த நோயாளிக்கும் பாதிப்பு ஏற்படாதவண்ணம், தேவைப்படுகின்ற அத்தனை சிகிச்சைகளையும் மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையத்திற்கு வரவழைத்து, அங்கே சிகிச்சை வழங்கப்படுகின்றது. அடிப்படை வசதிகள் குளச்சல் அரசு மருத்துவமனையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. Screening வசதிகள் குளச்சல் அரசு மருத்துவமனையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையம் திருநெல்வேலியில் அமைத்து இருக்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தப் பிரிவு இல்லை. அதுதான் நீண்டநாள் கோரிக்கை. குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் தலைமையிலே ஆய்வு செய்தார்கள். அப்போது, சுமார் ஐநூறுக்கும் அதிகமான மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், சிகிச்சை தேவை என்று அறிக்கையும் கொடுத்துள்ளார்கள். அதை follow பண்ணவில்லை, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நேரத்தில் நான் உங்களிடம் வேண்டுவது, நீங்கள் உடனடியாக ஒரு குழு அமைத்து, மணல் ஆலைகளில் ஏற்படும் கழிவுகளால் புற்றுநோய் வருகிறதா, எப்படி அந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், அம்மக்களுக்கு எவ்விதமான treatment கொடுக்க முடியும், எவ்விதமான treatment-ஆல் அந்த நோயைத் தடுக்க முடியும், குணப்படுத்த முடியும், பாதிக்கப்பட்ட மக்களை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதைக் கண்டறிந்து, research செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்து, அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கேற்ப உரிய ஆய்வுகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***6834—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், சிறுப்பாக்கம் கிராமத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல், மக்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கின்ற எங்களுடைய இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மட்டுமல்லாமல் தேசியத் தலைவராக வாழ்ந்திருக்கிறார்கள். இந்திய நாட்டைக் காப்பதற்காக எல்லைப் பாதுகாப்புப் படையிலிருந்த இராணுவ வீரர்கள் பலர் பனிச் சரிவினால் இறந்திருக்கிறார்கள். அவர்களில் மூன்று பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டைச் சேர்ந்த திரு. இளவரசன் என்பவர். தேசியத் தலைவராக இருந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக எந்த மாநிலத்திலும் வழங்காத அளவிற்கு 20 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று அறிவித்ததன் அடிப்படையில், தற்போது அந்தக் குடும்பங்களுக்கு குடும்ப மறுவாழ்வு நிதி அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே அவர்களது இல்லத்திற்கு நேரடியாகச் சென்று அந்த நிதியை கொடுக்க வேண்டுமென்று சொல்லி, என்னையும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் உடனடியாக இரவோடு இரவாக அந்தக் காசோலையை வழங்குவதற்கு அனுப்பி வைத்தார்கள். அதேபோல் எங்களை வழிநடத்திச் செல்கின்ற மக்கள் தலைவி, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குடும்பத்திற்கு இரங்கலைத் தெரிவித்து, ஆறுதலைச் சொல்லி, அவர்கள் குடும்பம் பிற்காலத்தில் வாழ்வதற்கு அரசு வேலைவாய்ப்பை அளிப்பதாக உறுதியளித்து வாருங்கள் என்று சொல்லி எங்களை அனுப்பி வைத்தார்கள். அதனடிப்படையில், நேற்று இரவு நாங்கள் இரண்டுபேரும் சென்று வீர மரணம் அடைந்தவர்களுக்கு இதய அஞ்சலி செலுத்திவிட்டு வந்திருக்கிறோம். ஆக, என்றைக்குமே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழக மக்களை மட்டுமல்ல, இந்திய மக்களைக் காக்கின்ற அரசாக இருக்கிறது என்பதை நான் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள், திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியம், சிறுப்பாக்கம் கிராமத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்கிறார். தற்போது அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும்





நோக்கம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் 3-வது முறையாக திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மக்களுக்குப் பணியாற்றிட எனக்கு வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒரே தலைவர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய எனது பாசமிகு அண்ணன் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் எனது வெற்றிக்காக உழைத்திட்ட அனைத்து கழக நிருவாகிகளுக்கும், கழக முன்னோடிகளுக்கும், அனைத்துப் பொதுமக்களுக்கும், வாக்களித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் ஒன்றியத்தில், சிறுப்பாக்கம் ஊராட்சியைச் சுற்றி 60-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு பருத்தி, மக்காச்சோளம், மணிலா, மஞ்சள், எள் போன்ற விவசாயப் பயிர்களை விவசாயிகள் அதிகமான அளவில் பயிர் செய்து வருகின்றனர். உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருட்களை விற்பனை செய்ய 50 கிலோ மீட்டர் தூரமுள்ள விருத்தாசலம், 45 கிலோ மீட்டர் தூரமுள்ள திட்டக்குடி, 60 கிலோ மீட்டர் தூரமுள்ள ஆத்தூர், சேலம் போன்ற நகரங்களுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. இதனால், விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். விவசாயிகளின் நலன் கருதி, மங்களூர் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், 60-க்கும் மேற்பட்ட கிராமங்களின் மையப் பகுதியாக அமைந்துள்ள சிறுப்பாக்கம் ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றினை அமைத்துத் தந்து, விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றைக்குமே விவசாயிகளுடைய காவல் தெய்வமாய் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் முழுவதும் விவசாயிகள் பயிரிட்ட பயிர்களைப் பாதுகாப்பதற்காக ஆங்காங்கே குளிர்பதனக் கிடங்குகளையும், விற்பனைக் கூடங்களையும் அமைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் திட்டக்குடி தொகுதியில், சிறுப்பாக்கம் பகுதியில் 575 எக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு, 4,290 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் விற்பனை உபரி 2,700 மெட்ரிக் டன் ஆகும். பயறு வகைகள் 129 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 131 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் விற்பனை உபரி 110 மெட்ரிக் டன் ஆகும். மேலும், மக்காச்சோளம் 2,108 எக்டேரில் பயிரிடப்பட்டு, 16,170 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் விற்பனை உபரி 14,170 மெட்ரிக் டன் ஆகும். இவ்விற்பனை உபரி உள்ளூர் வியாபாரிகள்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், சிறுப்பாக்கம் கிராமத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் திட்டக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் மற்றும் 40 கிலோ மீட்டர் தொலைவில் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் செயல்பட்டு வருகிறது. எனவே, சிறுப்பாக்கம் பகுதி விவசாயிகள் திட்டக்குடி மற்றும் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமென்றால், அந்தப் பகுதிக்கு அவசியம் தேவைப்பட்டால் அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் பரிந்துரைக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திட்டக்குடி, விருத்தாசலம் பகுதியிலே சென்று விற்பனை



2017 பிப்ரவரி 1]

செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். திட்டக்குடியிலே இருக்கின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மஞ்சள், பருத்தி கொள்முதல் செய்யப்படுவதேயில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் சரியாக இயங்குவதில்லை. நான் சொல்வது சரியாக இல்லையென்றால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே ஆய்வு செய்து, அதன் உண்மை விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, பருத்தி, மக்காச்சோளம், மஞ்சள் போன்ற விவசாயப் பொருட்கள் திட்டக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எந்த வியாபாரிகளிடமும் கொள்முதல் செய்யப்படுவதில்லை என்ற நூற்றுக்கு நூறு சதவிகித உண்மையை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மேலும், இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் இந்த விவசாயப் பொருட்களை விற்க வேண்டுமென்றால் சேலத்துக்குத்தான் போக வேண்டும். இல்லையென்றால், ஆத்தூருக்குத்தான் போக வேண்டும். விவசாயிகளுக்கு வேறு வழி இல்லையென்பதால் விவசாயிகளிடம் உள்ளூரில் இருக்கக்கூடிய வியாபாரிகள் விலை குறைவாக, இடைத்தரகர்களை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கின்றார்கள். ஆகவே, இதைத் தவிர்க்கும்பொருட்டு சிறுப்பாக்கத்திலே ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அமைக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பருத்தி, மஞ்சள் மற்றும் இதர பொருட்கள் அங்கு கொள்முதல் செய்யப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே அங்கு பருத்தி கொள்முதல் செய்யப்பட்டு, திருப்பூர் மற்றும் மற்ற பகுதிகளுக்கு சென்று கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால், உரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி

உங்களுடைய கோரிக்கையை நான் நிவர்த்தி செய்வேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் நாயுடுமங்கலம் கிராமத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்திற்கு முன்பாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் துவங்குவதாக சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டும், இதுவரை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா, விவசாயிகளுடைய துயர் துடைக்கப்படுமா எனத் தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, தற்பொழுது பணி நடந்து கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் ஒப்பந்தப்புள்ளியைக் கோரவிருக்கிறோம். உங்களுடைய எண்ணப்படி, அங்கே விற்பனைக் கூடம் தொடங்கப்பட்டு செயல்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

### மணிமண்டபம்

*__4466—திரு. கே.எஸ். தென்னரசு:__

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகவரி ஏதுமின்றி தமிழகத்தின் கடைகோடி கரிசல் காட்டுப்பகுதியில் கண்ணுக்கு எட்டாமல் இருந்த எனக்கு, தமிழகத்தின் பொற்கால முதல்வராக கடந்த 5 ஆண்டுகள் நல்லாட்சி நடத்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த முறை 5 ஆண்டுகளாக எனக்கு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக பணியாற்ற நல்வாய்ப்பினையும், இந்த முறை தேர்தலிலே 32 ஆண்டுகால வரலாற்றிலே புதிய அத்தியாயத்தைப் படைத்து, மீண்டும் முதலமைச்சராக வெற்றி பெற்று, புதிய சரித்திரத்தைப் படைத்த மாண்புமிகு அம்மா அவர்கள், மீண்டும் போட்டியிடுகின்ற இந்த வாய்ப்பை, இந்த தேர்தலிலேயும் வழங்கி, கனவிலும் நான் கண்டிராத மாண்புமிகு என்னும் முகவரியை கருணை உள்ளத்தோடு எனக்கு அளித்த, நான் தினமும் வணங்கும் தெய்வத்தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை என் உள்ளத்தில் நிறுத்தி, அவர் மீளாத் துயில் கொண்டிருக்கும் வங்கக் கடல் திசை நோக்கி வணங்குகிறேன்.

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து மறைந்த அம்மா அவர்களுடன், 'தாய்க்காகவே நான், தாயால் நான்' என்று 32 ஆண்டுகாலம் தவ வாழ்க்கை வாழ்ந்து, எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கும் மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களை வணங்கி எனது பதிலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் இரயில் நிலையத்தின் எதிரே சுதந்திரப் போராட்ட தியாகி திருப்பூர் குமரனுக்கு நினைவகம் அமைக்கப்பட்டு, அன்னாரின் சிலை அந்த நினைவகத்திலே நிறுவப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை அனைத்திற்கும் மேலாக கடந்த ஆட்சிக் காலத்தில் 14-9-2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே, திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்தநாளான, அக்டோபர் 4 ஆம் நாளை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு தமிழகத்தின் பொற்கால

[2017 பிப்ரவரி 1

முதல்வர் மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி ஒவ்வொரு ஆண்டும் திருப்பூர் குமரன் அவர்களுடைய பிறந்த தினவிழா சிறப்போடு அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே, இந்த நிலையிலே சென்னிமலையிலே தியாகி திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கா துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நிழலாக அவர்கள் சுழற்றிய வாளாக, வாகைத் தாயின் வாழ்வில் வசந்தங்கள் யாவையும் பூத்துக்குலுங்கும் பூவாக விளங்கும் மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் சின்னம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு சரித்திரத்தில் தனக்கென்று முத்திரைப் பதித்த ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன் அவர்கள் 4-10-1904 ஆம் ஆண்டு பிறந்து, தேசபந்து வாலிபர்கள் சங்கத்தின் சார்பாக பி.எஸ். சுந்தரம் அவர்கள் தலைமையில் 10 பேர் கொண்ட குழுவில் பங்கேற்று 10-1-1932-ல் நடைபெற்ற ஊர்வலத்தின்போது ஆங்கிலேய அரசுக் காவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு, 11-1-1932-ல் வீர மரணமடைந்தம் உயர் சிறப்பு வாய்ந்த வீரர் திருப்பூர் குமரன் அவர்கள், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை, வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு சிலையமைத்து மணிமண்டபம் கட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** அதுபோல், மறைந்த கொடி காத்த திருப்பூர் குமரன் அவர்களுக்கு ஒரு மணிமண்டபத்தை அவர் பிறந்த ஊரான சென்னிமலையிலே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொற்கால முதல்வராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய மணிமண்டபங்கள் அமைத்திடவும், திருவுருவச் சிலைகளை நிறுவிடவும், கலையரங்கம் கட்டிடவும், மணிமண்டபங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் திருவுருவச் சிலைகளின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் கடந்த 5 ஆண்டு கால பொற்கால ஆட்சியிலே ரூ.101.34 கோடி நிதியொதுக்கீடு செய்து சரித்திர சாதனை படைத்தார்கள் என்பதை இந்தப் பேரவையிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளிலே சென்னையிலே சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுய மரியாதை சுடரொளி ஜீவரெத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபங்கள்; தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறிலே வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம்; விருதுநகரிலே தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு மணிமண்டபம்; சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்திலே வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம்; திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையிலே விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களுக்கு மணிமண்டபம்; சேலம் மாவட்டம் சங்கரியிலே தீரன் சின்னமலை அவர்களுக்கு நினைவுச் சின்னம்; சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்திலே அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டப வளாகத்திலே வீரத் தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம் ஆகியவற்றை அமைத்து விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்களின் புகழுக்குப் பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

மேலும், திருச்சியிலே கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையிலே சிதம்பரநாதன் அவர்களுக்கும், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கும், இராமநாதபுரத்திலே Rebel முத்துராமலிங்கம் அவர்களுக்கும் திருவுருவச் சிலைகள் அமைத்து, தன்னுடைய பொற்கரங்களால் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்தப் பேரவையிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, திருவாரூரிலே மனுநீதிச் சோழனுக்கு நினைவு மண்டபம், கடலூரிலே சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம், திண்டுக்கல்லிலே ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபம், சென்னையிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் மற்றும் கோயம்புத்தூரிலே நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் ஆகியவற்றை அமைத்திட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்; அவர்கள் புகழ் என்றும் நிலைக்க உத்தரவிட்டவர்கள் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த வழியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**38—**

### நல வாரியம்

***4481—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கண்ணியத்திற்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், *1972*-ன்கீழ் தோட்டத் தொழிலாளர்கள், தொழிலாளர் நல வாரியத்திற்கு உறுப்பினர்களுக்கான சந்தாத் தொகையை செலுத்தி இந்நல வாரியத்தால் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளைப் பெற்று வருகின்றனர். ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் தொழிலாளர் நல வாரியம் மூலமாகவும் நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைப்பது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் முன்னேறுகின்ற வகையிலே நல்ல திட்டங்களை அளித்து, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும் தமிழக மக்களின் மனதில் நீங்காமல் நிறைந்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவர் அவர்களுக்குப் பிறகு இந்தக் கழகத்தை இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய கட்சியாக உருவாக்கியவர்

அம்மா. அவர்களுக்குப் பிறகு கழகத்தை வழிநடத்தும் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி வால்பாறையில் சுமார் 64 எஸ்டேட்டுகளில் 50,000-க்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவும், மேம்பாடு அடையவும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடவும், தோட்டத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இத்தொழிலாளர்கள் அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் ஆவர். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின்கீழ் குடியிருப்பு வசதி, மின் வசதி, மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பகம், தொழிலாளர் குழந்தைகளுக்கு கல்வி வசதி மற்றும் உணவகம் ஆகிய வசதிகளை நிருவாகம் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதிச் சட்டம், பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களுக்குப் பொருந்தும். ஆகவே, சட்டரீதியாகவும் மற்றும் தொழிலாளர் நல வாரியம் மூலமாகவும் தோட்டத் தொழிலாளர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைப்பது தொடர்பான கருத்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.





**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்தப் பிரச்சினையை உடனடியாகப் பரிசீலனை செய்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

## பேருந்து வசதி

***3199—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, செய்யூரிலிருந்து கல்பாக்கம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய இமயம், தமிழர்கள் இதயம், அளவற்ற அருளாளர், நிகரற்ற அன்பாளர், பன்மொழி வித்தகர், பார்புகழ் தலைவர், பேரறிவு, பேராற்றல் இவை அனைத்தின் மொத்த வடிவம் ஒருவர், அவர்தான் 8 கோடி தமிழர்களின் மூலமந்திரம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மாவிற்காக தன்னையே தந்த தியாக தீபம், கருணைக் கடல், எங்கள் தியாகத் தலைவி, சின்னம்மா அவர்களை வணங்கி எனது பதிலைப் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) செய்யூர்-கல்பாக்கம், வழி வீரம்பாக்கம், கூவத்தூர், கடலூர் கிராமம் தடத்தின் நீளம் 34 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலத்திற்கு புதிய வழித்தடங்கள் ஒதுக்கீட்டின்போது, மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மாவின் அரசால் இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது செய்யூர் தொகுதிக்குட்பட்ட கல்பாக்கம், புதுப்பட்டினம், வாயலூர், வேப்பஞ்சேரி, காத்தான்கடை, கடலூர், கூவத்தூர், தென்பட்டினம், வடபட்டினம், முகையூர், பெருந்துறவு, சீக்கணாங்குப்பம், ஓதியூர், எல்லையம்மன் கோவில், செய்யூர், ஓணம்பாக்கம், காட்டுதேவாத்தூர், சித்தாமூர், கொளம்பாக்கம், மழுவங்கரணை, சோத்துப்பாக்கம் வழியாக மேல்மருவத்தூர் செல்வதற்காகவும், காத்தான்கடை, கடலூர், சீக்கணாங்குப்பம் பகுதியைச் சேர்ந்த மாணவ/மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாவதாலும், கல்பாக்கத்தில் பணிபுரியும் தென் தமிழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் செல்வதற்கு ஏதுவாகவும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் பணிபுரியும் தினக் கூலியாளர்கள் பயன்பெறும் விதமாகவும், சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையையும், தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் விதமாக ஒரு புதிய பேருந்து வழித்தடத்தினை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த வழித்தடத்திலே பயணம் செய்யும் பயணிகளின் அடர்வுக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. அரசு அவர்கள்.

**திரு. ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய, குறிப்பாக மாணவிகளின் சிரமத்தைக் கருத்தில்கொண்டும், பொதுமக்களின் சிரமத்தைக் கருத்தில்கொண்டும் குறைந்தபட்சம் சிற்றுந்தையாவது அந்தப் பகுதியில் இயக்க இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து என்பது சென்னை மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில் இயக்கப்படுவதாகும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அந்தப் பகுதியிலே பயணம் செய்யும் பயணிகளின் அடர்விற்கேற்ப, பேருந்துகளையோ அல்லது சிற்றுந்துகளையோ இயக்கத் தேவையேற்படுமாயின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜவ்வாதுமலை ஜமுனாமரத்தூரிலிருந்து திருவண்ணாமலைக்கு வரவேண்டுமென்று சொன்னால் தலைவர் கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு துணை முதல்வராக இருந்த தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலோடு, அன்றைய உணவுத் துறை அமைச்சர், அண்ணன் எ.வ. வேலு அவர்களால் ஒரேயொரு பேருந்து வழித் தடம்தான் தொடங்கி வைக்கப்பட்டது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஜவ்வாதுமலை ஒன்றியம், செங்கம் வட்டத்திற்கும், போளூர் வட்டத்திற்கும், கலசப்பாக்கம் வட்டத்திற்கும் உட்பட்ட

[2017 பிப்ரவரி 1

பகுதியாகும். அந்தப் பகுதியிலேயிருக்கும் 6 ஊராட்சிகளிலேயிருக்கின்ற மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்கள் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டும். அவர்களுக்குக் கடந்த காலங்களில் சாலை வசதியில்லாமல் இருந்தது. முன்பு மாண்புமிகு துணை முதல்வராக இருந்த தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலோடு சாலை அமைக்கப்பட்டு, எட்டு ஆண்டுக் காலம் ஆகின்றது. இன்னும் அந்தப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படவில்லை. எனவே, ஜவ்வாதுமலைப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மலைப் பகுதியில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதாகும். அந்தப் பகுதிகளில் இயக்கப்படுகின்ற பேருந்துகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படுமாயின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

## சமுதாயக் கூடம்

*__9868—திரு. ஆர். சுந்தரராஜ்:__

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2017 பிப்ரவரி 1]

ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பி குறிச்சி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோடம்பாக்கம் தொடங்கி கோட்டை வரை, தான் தொட்ட துறையெல்லாம் சாதனை செய்த ஒரே சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கரும்பு முதல் இரும்பு வரை, ஊசி முதல் ஏ.சி. வரை ஈசியாய் செய்ய தமிழகத்தை வழிவகுத்த தனிப்பெரும் தெய்வம், எங்கள் புரட்சித் தலைவி அம்மாவிற்கு என் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா எங்களுக்கு மூலவர், சின்னம்மா எங்களுக்கு உற்சவர். அம்மா எங்களுக்கு உயிர், சின்னம்மா எங்கள் உயிரைக் காத்த உயிர். அம்மா எங்களுக்கு வள்ளல், சின்னம்மா எங்கள் வள்ளலைக் காத்த வள்ளல். கழகப் பொதுச் செயலாளர் சின்னம்மாவின் மேன்மைமிகு ஆசியோடும், அன்பு, பண்பு, பணிவு இவற்றின் அடையாளச் சொல்லாய் விளங்கும் மாண்புமிகு முதல்வரையும் வணங்கி எனது பதிலை அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில், ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பி குறிச்சி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த கோரிக்கை, மக்கள் தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தரராஜ் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

*முற்பகல் 11-30*

**திரு. ஆர். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றிய ஒளிவிளக்கு, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த மகா சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முகவரி கொடுத்த மூகாம்பிகை, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குலசாமி, அன்னை சந்தியா தாய் தந்த தெய்வத் தாய், அம்மாவை வணங்குகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா, பேரறிஞர் அண்ணா ஆகிய மூவரின் மறு உருவமாக, கழகத்தின் பொதுச் செயலாளராக, மூலவராகத் திகழ்கின்ற எங்களுடைய சின்னம்மாவை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே அடிபிறழாமல், 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்பதற்கு நிகராக, இன்றையதினம், தமிழ்நாட்டின் பண்பாட்டு விளையாட்டான ஜல்லிக்கட்டிலே, தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மாவைப்போல் ஆட்சி செய்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், மணக்கரை ஊராட்சி, அனந்தநம்பிக் குறிச்சி பகுதியில் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. விவசாயம் மற்றும் கூலி வேலை செய்து வருகின்ற அந்தப் பகுதி மக்கள் மிகவும் குறுகலான தெருக்களிலே இருந்து வருகின்றார்கள். அவர்களுடைய வருமானம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள காரணத்தால், வணங்கிய கைகள் பிரியும் முன்னே வரம் தரும் நம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அந்தப் பகுதியில் வாழும் ஆதி திராவிட மக்களுக்கு திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஒரு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஆதி திராவிட இன மக்களுக்கு தன்னிடம் உள்ளதைத் தந்த தலைவர்கள் உண்டு. ஆனால்,



2017 பிப்ரவரி 1]

தன்னையே தந்த ஒரே தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், கடந்த ஐந்தாண்டுகளில் 50 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆவணங்களின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு, நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. முந்தைய நாள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளை நீக்கியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், நான் ஆற்றிய ஆளுநர் உரையிலிருந்து, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துவைத்த அந்தக் கருத்தின் அடிப்படையிலே, அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறீர்கள். நீக்கி இருப்பதிலிருந்து இங்கே நான் எடுத்துச்சொல்ல விரும்புவது, உங்களுடைய உரிமையிலே, நீங்கள் உத்தரவிட்டிருக்கக்கூடிய அந்த நிலையிலே, நான் குறுக்கிடுவதாக தயவுசெய்து நீங்கள் கருதிவிடக் கூடாது. நான் ஆற்றிய உரை என்னவென்று கேட்டால், தமிழகத்தைப் பொறுத்தவரை, நல்ல பொறுப்புள்ள ** என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆக, ** என்பது இந்த அவையிலே பயன்படுத்தக்கூடாத வார்த்தையா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் எதிர்க்கட்சித்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவராக இருந்தபோது, *2010* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *11* ஆம் தேதி இதே அவையில் அவர் பேசி, அவைக் குறிப்பிலும் இடம் பெற்றிருக்கிறது. அவர் சொல்கின்றபோது, 'தமிழ்நாட்டை அதலபாதாளத்திற்கு அழிவுப் பாதையில் அழைத்து சென்றுகொண்டிருக்கிறது' என்று சொல்லியது அவைக் குறிப்பிலும் பதிவாகி இருக்கின்றது. இதைவிட நான் வேறு எதுவும் உங்களுக்கு உதாரணம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. ஒருவேளை நீங்கள் எடுத்துத்தான் தீரவேண்டுமென்று முடிவெடுத்தால், நான் அதிலே தலையிட விரும்பவில்லை; அதைப்பற்றியும் கவலைப்படவில்லை. ஆனால், அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய அந்த வார்த்தையையும் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று சொன்ன அந்த வார்த்தையை நீக்கியதற்காக, நீங்கள் இந்த வார்த்தையையும் சேர்த்து நீக்கியிருக்கிறீர்கள். அதை நீக்க வேண்டுமென்று முடிவெடுத்து, அதற்குப் பிறகு இரண்டையும் சேர்த்து நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, ** என்ற அந்த வார்த்தை நிச்சயமாக அவைக் குறிப்பிலே இடம் பெறக் கூடாது என்ற நிலையில்லை. எனவே, அந்த வார்த்தை தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலே இடம்பெற வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளாக எடுத்து வைக்கிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைப்பற்றி ** என்று சொன்ன அந்த வார்த்தையைக்கூட நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. யார் என்ன பேசினார்கள் என்று நாட்டு மக்களுக்கு தெரியத்தான் போகின்றது. எனவே, தயவுகூர்ந்து ** என்ற அந்த வார்த்தை இந்த அவைக் குறிப்பிலே இடம்பெற வேண்டுமென்று நான் உங்களை மன்றாடி, விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். நேற்றையதினம், அதுகுறித்து அவையில் நீண்டதொரு விவாதம் ஏற்பட்டு, நீண்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிரச்சினைகளுக்கிடையே, பல உணர்ச்சிகளுக்கிடையே ஏற்பட்ட சூழ்நிலையின் அடிப்படையில், நான் அந்த இரண்டு பேர்களுடைய கருத்துகளும் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்று தீர்ப்பளித்து, என்னுடைய முடிவை நேற்றைக்கே தெரிவித்தேன். மீண்டும் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அது இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவருக்கு என்னுடைய விளக்கத்தை தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். நேற்றையதினம், நான் ஏதோ அவசரப்பட்டு எடுத்த முடிவு அல்ல அது. நான் யோசித்துத்தான் ஒரு முடிவை எடுத்தேன். அந்த முடிவினை நான் என்ன அடிப்படையிலே எடுத்திருக்கிறேன் என்பதனையும் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பொழுதுதான் நீங்களும் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நேற்றையதினம், அவையிலே உரையாற்றுகையில் தமிழகத்தைப் பொறுத்தவரை நல்ல பொறுப்புள்ள ** என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் Lexicon-ல் ** என்பதற்கு ** என பொருள் உள்ளது. அதுபோன்று பல அகராதிகளையும் நான் பார்த்தேன். அமங்கலமான பொருள்தான் அதில் வருகிறது. பொதுவாக ** என்று சொல்வது பொருத்தமாக இருக்குமா என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். ** அதுமாதிரி வந்தால் அது சரியாக இருக்காது. ** என்றால், தமிழகம் ** பொருள் கொள்ளக்கூடும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பெருமையுடைய தமிழகம், நீண்ட நெடிய வரலாற்றைக்கொண்ட தமிழகம், தமிழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட கரிகாலன், இளந்திரையன், பாண்டிய அரசர்கள், சேர அரசர்கள் நிருவாகத்தை சிறப்பாக நிருவகித்துள்ளார்கள். அதனால் ஜனநாயக முறையில் ** குறைகளைச் சொல்வதற்கு, அதுவும் ஆதாரப்பூர்வமாகச் சொல்வதற்கு நிறைய வழிகள் உள்ளன. எந்த நோக்கத்திற்காக எத்தனையோ பெருந்தலைவர்கள் பாடுபட்டார்களோ, எந்த இலட்சியத்தின் அடிப்படை கொண்டு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் இன்னுயிரை மாய்த்து, இந்தத் தமிழ் மண் உயர்வுபெற உழைத்தார்களோ, இந்தியாவில் தமிழகத்தை முதன்மை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாநிலமாக ஆக்கிக் காட்டுவேன் என்று அயராது உழைத்து, உடல் நலத்தைத் தொலைத்து இன்றைக்கு மறைந்தும் மறையாது, 10 கோடி தமிழ் நெஞ்சங்களில் வீற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* எதற்காகப் பாடுபட்டார்களோ, அந்த இலக்கினை எட்டிக்கொண்டிருக்கையில் ** என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லி, ஆதாரத்தோடு ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருந்தால் அந்தச் சொல் அவைக் குறிப்பிலே இருந்திருக்கும். நேற்றையதினம் அவர் சொன்னது பொதுவான குற்றச்சாட்டு. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு. ** சுணக்கத்தை ஏற்படுத்துகிற குற்றச்சாட்டு என்கிற காரணத்தினாலேதான் நான் நீக்கியிருக்கிறேன் என்பதை என்னுடைய தீர்ப்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்ன இந்த ** இப்பொழுது சொல்கிற இந்த வார்த்தையையும் சேர்த்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கிற இந்த வார்த்தையையும் சேர்த்து அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுகுறித்து நான் ஏற்கெனவே நேற்றே தீர்ப்பைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். இன்றைக்கும் என்னுடைய விளக்கத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு மேலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டாம் என்று தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இத்தோடு இந்தப் பிரச்சினையை விட்டு, அடுத்த பிரச்சினைக்குப் போகலாம் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள். என்னுடைய தீர்ப்புக்கு மேல் ஒன்றும் இல்லை. *(குறுக்கீடு)* இல்லை, அதில் விவாதம் இல்லை. வேண்டாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* தயவுசெய்து அமைச்சர் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இதோடு விட்டுவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* வேறு பிரச்சினை என்றால் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பு குறித்து அல்ல. ஆனால் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டசபையே ** என்று சொல்லிவிட்டார். அவைக் குறிப்பில் இருக்கிறது. ஆகையால். . . *(குறுக்கீடுகள்)*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . . *(குறுக்கீடுகள்)* ** சொல்லுங்கள். ஆதாரத்தோடு சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் ** குறையைச் சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, உட்காருங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு தி.மு.க. சட்டமன்றக் கொறடா அவர்களிடம் இந்த விளக்கத்தையே நேற்று நாங்கள் சொன்னோம். அவரும் அமைதியாகச் சென்றுவிட்டார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தக் காலகட்டத்தில் சொன்னது, அன்று இருந்த * திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கத்தைத்தான், சட்டமன்றத்தைத்தான் அவர் சொன்னாரேயொழிய, வேறு எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ** என்று சொல்கிறார். ** என்று சொன்னால், இந்தச் சட்டமன்றம் உருவான காலத்திலிருந்தா? அப்படியென்றால், இந்தச் சட்டமன்றம் உருவான காலத்திலிருந்து ** என்று சொன்னால், அது எந்த வகையில் அர்த்தம் கொள்வது? மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சரியான விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த வார்த்தை உள்ளபடியே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை நீக்கிவிட்டேன். தீர்ப்பு வழங்கிவிட்டேன். அதற்கு மேற்கொண்டு விவாதம் இல்லை. அதோடு விடுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2016–2017, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 28,942.69 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2. 2016 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21 ஆம் நாளன்று 2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு ‘புதுப் பணிகள்’ மற்றும் ‘புது துணைப் பணிகள்’ குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

3. “உதய்” திட்டத்தின்கீழ் 22,815 கோடி ரூபாய் அளவிற்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடனை அரசே ஏற்பதெனவும், இதற்கென அக்கழகத்திற்கு 22,815 கோடி ரூபாயை நிதியுதவியாக வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை” என்பதன்கீழ் இதற்கென 22,815 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் செலுத்த வேண்டிய 4,523.19 கோடி ரூபாய் அளவிலான கடன்கள் மற்றும் முன்பணங்கள், வழிவகை முன்பணங்கள் மற்றும் அவற்றின் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை பங்கு மூலதன உதவியாக மாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக,

---

@ 404 முதல் 408 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மூலதனக் கணக்கில் 4,123.19 கோடி ரூபாய் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை” என்பதன்கீழ் இதற்கென 3,958.19 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

முற்பகல் 11-45

5. ‘வர்தா’ புயலால் சேதமடைந்த மின் விநியோகக் கட்டமைப்பு வசதிகளை சரிசெய்வதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழிவகை முன்பணமாக 400 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை” என்பதன்கீழ் இதற்கென 400 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

6. மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் மானியம் வழங்குவதற்காக, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 200 கோடி ரூபாய்க்கும் கூடுதலாக, இதுவரை 261.69 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் இதற்கென 261.69 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

7. ‘வர்தா’ புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய, நிவாரண மற்றும் தற்காலிக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 585.45 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது நிலவிவரும் கடும் வறட்சியின் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தணிக்க, குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 105 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் இவற்றிற்காக 690.45 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

8. கூட்டுறவு வங்கிகளில் நிலுவையிலிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ், நபார்டு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு வழிவகை முன்பணமாக 171.69 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” என்பதன்கீழ் இதற்கென 171.69 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

9. காவேரி டெல்டா மாவட்டங்களில், 2016 ஆம் ஆண்டு சம்பா காலத்தில் பயிர் செய்வதை ஊக்குவிப்பதற்கான உதவித் தொகை வழங்கும் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, கூடுதலாக 46.31 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை” என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின்கீழும் ரூபாய் 1,000/- சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

10. 2015-2016 ஆம் ஆண்டு கரும்பு அரைவைக் காலத்திற்கான நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகையினை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, 10 கூட்டுறவு மற்றும் இரண்டு பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக 92.40 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- “மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

11. தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக 56 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- “மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

*முற்பகல் 11-50*

*12.* சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை இடம் மாற்றம் செய்து, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்குவதற்கான கட்டடங்கள் கட்டுவதற்காக 117.30 கோடி ரூபாய்க்கு அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- “மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

*13.* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2017 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

**2016-2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 1 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 3,31,99 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 1,32,41 | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 2,80,92 | 4 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 3 | .. | .. |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8,54,65 | 3 | .. |



2017 பிப்ரவரி 1]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 4 | 1 | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 3 | .. | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 5 | .. | .. |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 2 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | .. | .. | 171,69,81 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 5 | 3 | .. |
| 14 | எரிசக்தித் துறை | 1 | 3,958,19,00 | 23,215,00,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2 | .. | .. |
| 16 | நிதித் துறை | 12 | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 1,24,27 | .. | 172,19,94 |

[2017 பிப்ரவரி 1

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 4 | .. | 8,18,04 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 10,37,38 | 79,26 | .. |
| 20 | உயர் கல்வித் துறை | 24,19 | 1 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 1 | 13 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 16,40,60 | 4 | 1 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,27,55 | 1 | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 48,12 | 1 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | 1 | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 3 | .. | .. |



2017 பிப்ரவரி 1]

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 27 | தொழில் துறை | 2 | .. | 17,79,47 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1,67,88 | .. | .. |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 14 | 4 | .. |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1 | 2 | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 3 | .. | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 3,59,09 | 2 | .. |
| 33 | சட்டத் துறை | 2 | .. | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 9 | 5 | .. |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 1,56,22 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | .. | 69,67,57 | .. |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 3 | 45 | .. |
| 41 | வருவாய்த் துறை | 6 | .. | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 2,29,03 | 1 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 7,46,91 | 5 | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 7,60,09 | 2,46,51 | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 4,11 | .. | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 34,87 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 261,69,00 | .. | 198,44,50 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 703,29,42 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 4 | .. | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,52,58 | 10,07 | .. |
| | **பெருமொத்தம்** | 1,038,12,40 | 4,031,23,37 | 23,783,31,77 |



## 6. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, 2016-2017 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”*

*என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 7. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016-2017 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Thiru Ch. Vidyasagar Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2016-2017."

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2016–2017, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2016-2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1-2-2017 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2016-2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.*





### நிறைவேற்றப்பெற்ற 2016–2017 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 1 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 3,31,99 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 1,32,41 | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 2,80,92 | 4 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 3 | .. | .. |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8,54,65 | 3 | .. |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 4 | 1 | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 3 | .. | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 5 | .. | .. |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 2 | .. | .. |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | .. | .. | 171,69,81 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 5 | 3 | .. |
| 14 | எரிசக்தித் துறை | 1 | 3,958,19,00 | 23,215,00,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2 | .. | .. |
| 16 | நிதித் துறை | 12 | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 1,24,27 | .. | 172,19,94 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 4 | .. | 8,18,04 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 10,37,38 | 79,26 | .. |
| 20 | உயர் கல்வித் துறை | 24,19 | 1 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | 1 | 13 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 16,40,60 | 4 | 1 |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,27,55 | 1 | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 48,12 | 1 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | 1 | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 3 | .. | .. |
| 27 | தொழில் துறை | 2 | .. | 17,79,47 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1,67,88 | .. | .. |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 14 | 4 | .. |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1 | 2 | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 3 | .. | .. |

| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 3,59,09 | 2 | .. |
| 33 | சட்டத் துறை | 2 | .. | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 9 | 5 | .. |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 1,56,22 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | .. | 69,67,57 | .. |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 3 | 45 | .. |
| 41 | வருவாய்த் துறை | 6 | .. | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 2,29,03 | 1 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 7,46,91 | 5 | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 7,60,09 | 2,46,51 | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 4,11 | .. | .. |



| கோரிக்கை | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 34,87 | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | 261,69,00 | .. | 198,44,50 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 703,29,42 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 4 | .. | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,52,58 | 10,07 | .. |
| | **பெருமொத்தம்** | 1,038,12,40 | 4,031,23,37 | 23,783,31,77 |

## 7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 3. முந்தைய நாள் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் சில வார்த்தைகளை நீக்கியது—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களது பெயரைச் சொன்னேன் என்பதற்காக ** பேசினீர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ** என்று சொன்னாரே, அவருக்கு என்ன தண்டனை கொடுத்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நேற்றைக்கே அது முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அதனை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் என்று திருத்திக்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார், அது அவ்வாறே திருத்திக்கொள்ளப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அது அவ்வாறு திருத்திக்கொள்ளப்படுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து நின்றனர்.)

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள் (குறுக்கீடுகள்) நான்தான் பதிவு செய்து விட்டேன் அல்லவா? பிறகு என்ன பிரச்சினை? பேரவைத் தலைவர் பதிவு செய்துவிட்ட பிறகு என்ன பிரச்சினை இருக்கிறது? (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். பேரவைத் தலைவரின் இருக்கையின் அருகில் உறுப்பினர்கள் வருவதே தவறான செயலாகும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் உங்கள் இருக்கைக்குச்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எது பேசுவதாக இருந்தாலும் உங்கள் இருக்கைக்குச் சென்று பேசுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்கு செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குச் செல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். (குறுக்கீடுகள்) நீங்கள் இருக்கைக்குச் செல்கிறீர்களா அல்லது உங்கள்மேல் நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேரவையை நடத்துவதற்கு இவ்வாறு ஒத்துழைப்பு கொடுக்காமலிருந்தால் எப்படி அவையை நடத்த முடியும்? இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருடைய கோரிக்கையாக இங்கு ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு வேண்டும் என்ற தொனியில்தான் அதைச் சொன்னார்கள். மாற்று ஏற்பாட்டை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அவையில் Ruling ஆக சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் இதுகுறித்து இங்கு பிரச்சினை எழ வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) ஆகவே, தி.மு.க. உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதியாக அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் திருத்தியாயிற்றே, பிறகென்ன? (குறுக்கீடுகள்) உங்களுக்கு நடந்த விவரம் தெரிந்தால் பரவாயில்லை. தெரியாமலேதான் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) நான்தான், திருத்திவிட்டேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு என்ன இருக்கிறது? அவ்வளவுதான். நான்தான் அதனை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் என்று திருத்தி மாற்றிப் பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு statement-ஐ இந்த அவையின்முன் வைக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், statement வையுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இது வேறு பொருள் குறித்து.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை குறித்து. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பொருள் குறித்தது அல்ல. வேறு பொருள் குறித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை குறித்தது. இது இல்லை. வேறு பிரச்சினை. (குறுக்கீடுகள்)

## 9. பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன நீங்கள், உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு statement-ஐ இந்த அவையில் வைக்கிறார், உட்காருங்கள். எது பேசுவதாக இருந்தாலும் பிறகு வாய்ப்பு தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு statement-ஐ அவையின்முன் வைக்கிறார், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கு வருகின்ற நீர் வழித் தடத்தையும், அமராவதி அணைக்கு வருகின்ற நீர் வழித்தடத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கவலையினை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் தங்கள் கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து இங்கே எடுத்துக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றம் அதன் 5-2-2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையில்

பாம்பாறு உபபடுகைக்கென 3 டி.எம்.சி. அடி நீரை கேரளாவிற்கு ஒதுக்கீடு செய்தது. இதில் பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்ற இடத்தில் செங்கலாறு திட்டத்திற்கு 0.80 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கேரள அரசு 2 டி.எம்.சி. அடி கொள்ளளவு உள்ள ஓர் அணையைக் கட்டுவதற்கு கேரள முதலமைச்சர் 3-11-2014 அன்று, காணொலிகாட்சி வழியாக அடிக்கல் நாட்டியுள்ளதாக 6-11-2014 அன்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தவுடனேயே, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 8-11-2014 அன்று கேரளாவின் இத்தகைய திட்டம், காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணையை மீறும் செயலாகும் என்றும், எந்தவொரு புதிய திட்டமும் காவேரி மேலாண்மை வாரியத்தின் ஒப்புதலுடன் தமிழ்நாட்டின் முன்இசைவு பெற்ற பின்னரே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், பாரதப் பிரதமர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு, பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னும் இடத்தில் அணை கட்டும் பணிகளை கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும் கேரள அரசு பாம்பாறு உப படுகையில் கட்ட உத்தேசித்துள்ள அணைகள் பற்றிய அனைத்து விவரங்களையும் தமிழகத்திற்கு அளிக்க வேண்டுமெனவும் காவேரி மேலாண்மை வாரியம் ஏற்படுத்தப்படும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் இசைவு பெற்ற பின்னரே இத்தகைய திட்டங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டுமென கேரள அரசுக்கு அறிவுறுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை நிறுத்தி வைக்குமாறும், காவேரி நடுவர் மன்ற இறுதியாணை 19-2-2013-ல் மத்திய அரசிதழில் வெளியிட்டதன்படி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள சிவில் வழக்குகள் முடியும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டுமெனவும், நடுவர்மன்ற ஆணைக்கு முரணாக எந்தவொரு திட்டப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாமென கேரள அரசிற்கு உத்தரவிடுமாறு கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இடைக்கால மனு ஒன்றை 28-11-2014 அன்றே தாக்கல் செய்துள்ளது.



கேரள அரசு தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு 5-12-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் எந்தப் பணியையும் கேரள அரசு மேற்கொள்ளக்கூடாது எனவும், காவேரி மேலாண்மை வாரியம் செயலாக்கத்திற்கு வரும் வரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் அனுமதியின்றியும் எந்தவொரு திட்டத்தையும் கேரள அரசு செயல்படுத்த முனையக் கூடாதென்றும் கேரள அரசுக்கு உரிய அறிவுரைகளை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று அரசினர் தனித் தீர்மானம் நம்முடைய சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும், 12-12-2014 அன்று தமிழக சட்டமன்றத்தின் தீர்மானத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கும் வரை கேரள அரசு எந்தவொரு புதிய திட்டத்தையும் எடுக்கக்கூடாது என்று அவ்வரசுக்கு அறிவுறுத்துமாறு நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன்.

இந்நிலையில், தற்போது பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரியில் அணை கட்டும் பணிகளை கேரளா தொடங்கியுள்ளதாக பெறப்பட்ட செய்தியின் அடிப்படையில், நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கேரள அரசிற்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொண்டு, இன்று ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன்.

மேலும், தமிழ்நாட்டின் முன்னனுமதி பெறாமல் எந்தவொரு திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மற்றும் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்படும் வரையிலும் மற்றும் வழக்குகள் இறுதியாக்கம் பெறும் வரையிலும் கேரள அரசு எந்தவொரு திட்டத்தையும், பணிகளையும் மேற்கொள்ளக் கூடாதெனவும் கேட்டுக்கொண்டுள்ளேன்.

எனவே, பவானி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணைகள் கட்ட எடுக்கும் முயற்சிகளை உடனடியாக நிறுத்தக் கோரி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 24-1-2017 அன்று நான் கடிதம் எழுதியுள்ளேன். அதனைத் தொடர்ந்து, தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரி ஓர் இடைக்கால மனுவும் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 பிப்ரவரி 1

## 10. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—விவாதத்திற்கான பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள். திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய அன்பான வேண்டுகோள். நிறைய உறுப்பினர்கள் திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதற்கு நிறைய நேரமாகும். ஆகவே, திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்கள் "நான் கொடுத்துள்ள திருத்தங்களை முன்மொழிகின்றேன்" என்று சொன்னால் போதுமானது. நான் அதை பதிவு செய்துகொள்கின்றேன். அதற்கு பிறகு வழிமொழிகின்றவர்கள், "நான் அதை வழிமொழிகின்றேன்" என்று சொன்னால் போதும். இந்த முறையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. செய்யூர் தொகுதியில் மாம்பழச்சாறு மற்றும் தேங்காய் நார் தொழிற்சாலைகள் அமைப்பது குறித்தும்;

2. செய்யூர் தொகுதியிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் போதிய உபகரணங்கள் வழங்குதல், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்தும்;

3. செய்யூர் தொகுதியில் 3 கிராமங்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

4. செய்யூர் தொகுதியில் மற்றும் தொகுதியிலுள்ள அனைத்து கிராமங்களிலும் குடிநீர் வசதி மற்றும் பேருந்து வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [டாக்டர் ஆர்.டி. அரசு]

5. செய்யூர் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைப்பது, தீ விபத்திற்கான நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும்;

6. விவசாயப் பயிர்களுக்கு மட்டுமின்றி மா, பலா போன்ற மரங்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் வழங்குவது குறித்தும்;

7. செய்யூர் தொகுதியில் தென்னை கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

8. செய்யூர் தொகுதிக்கு சித்தாமூர் ஒன்றியத்தில் வெள்ளகொண்டகரத்தில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

9. செய்யூர் தொகுதியில் நீலமங்களம்—இடையாத்தூர் கிராமத்திற்கிடையில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைப்பது குறித்தும்;

10. புதுப்பட்டினம் ஊராட்சியில் பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

11. செய்யூர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும்;

12. செய்யூர் தொகுதியில் அனைத்து நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்கள் தடையின்றி வழங்குவது குறித்தும்;

13. செய்யூர் தொகுதியில் மீனவ கிராமங்களில் கடலரிப்பைத் தடுக்கும் விதமாக தூண்டில் வளைவுகள் அமைப்பது குறித்தும்;

14. செய்யூர் தொகுதியில் படகு நிறுத்துவதற்கு வசதியாக முகத்துவாரம் அமைத்துத் தருவது குறித்தும்;

15. செய்யூர் தொகுதியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நேரடி கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**திரு. எஸ். அம்பேத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வானிலுட்டு என்கிற இடத்தில் தடுப்பணை கட்டி வலது, இடது புறக் கால்வாய்கள் வெட்டி, ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட்டம் குறித்தும்;

2. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, போலுப்பள்ளி கடையிலிருந்து பிரித்து கெரிக்கல் நத்தம் கிராமத்தில் பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

3. கங்கசந்திரம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, பிச்சு கொண்டப்பள்ளி கிராமத்தில் பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

4. தொட்டபூவத்தி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, சிக்கப்பூவத்தி இருளர் காலனியில் பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

5. கொடுகூர், இட்டிக்கல் அகரம் ஆகிய நியாய விலைக் கடைகளிலிருந்து பிரித்து, உஸ்தலஅள்ளி கிராமத்தில் பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

6. சோக்கனடி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, கெடு வெங்கட்ராமன் கோயில் கிராமத்தில் பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

7. துரிஞ்சிப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, தின்னக்கழனி கிராமத்தில், பகுதி நேரக் கடை உருவாக்குவது குறித்தும்;

8. R. பூகாரிப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, பாஞ்சாலி நகர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை உருவாக்குவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. டி. செங்குட்டுவன்]

9. தண்டேகுப்பம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, திருமலை நகர்ப் பகுதியில் பகுதி நேர கடை உருவாக்குவது குறித்தும்;

10. அக்ரகாரம் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, பெரிய மோட்டூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை உருவாக்குவது குறித்தும்;

11. சப்பாணிப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, பொம்மசத்திரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை உருவாக்குவது குறித்தும்;

12. குட்டப்பட்டி நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து, கல்குட்டப்பட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை உருவாக்குவது குறித்தும்;

13. கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட பழைய பேட்டை பேருந்து நிலையத்தினைச் சீரமைப்பது குறித்தும்;

14. கட்டிகனைப்பள்ளி ஊராட்சிப்பகுதி முழுவதும், கழிவு நீர்க் கால்வாய்கள், தார்ச் சாலைகள், சிமென்ட் சாலைகள் போன்ற கட்டமைப்புத் திட்டங்கள் மேற்கொள்வது குறித்தும்;

15. வெலகலஅள்ளி ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில், பல்நோக்குக் கட்டடம் கட்டித் தருவது குறித்தும்;

16. கிருஷ்ணகிரி புதிய பஸ் நிலையத்தை ஒட்டியுள்ள, "சின்ன ஏரியை" அழகுபடுத்தும் திட்டம் குறித்தும், அனைத்து ஏரிகளையும் தூர் வாரி ஆழப்படுத்துதல் குறித்தும்;

17. காவேரிப்பட்டினம் நகரத்தையொட்டி ஓடும் தென்பெண்ணை ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

18. காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க தென்பெண்ணை ஆற்றில் இரண்டு பெரிய கிணறுகள் வெட்டும் திட்டம் குறித்தும்;

19. காட்டினாயனப்பள்ளி அருள்மிகு ஆஞ்சநேயா சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

20. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பையூர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை வளாகத்தில், விவசாயக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

[திரு. டி. செங்குட்டுவன்] [2017 பிப்ரவரி 1

21. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முழுமையாகச் செயல்படுத்துவது குறித்தும்;

22. காவேரிப்பட்டினம் பகுதியில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

23. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் மாம்பழக் கூழ் ஏற்றுமதி மையம் அமைப்பது குறித்தும்;

24. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவின் மேம்பாலம் அருகில் சேலம் பிரதான சாலை, ஆவின் மேம்பாலம் அருகில் சென்னை சாலை, ராயகோட்டை மேம்பாலம் அருகில் தருமபுரி மார்க்கம், காவேரிப்பட்டினம், பாலக்கோடு கூட்டு ரோடு பெரியார் சிலை அருகில் பயணிகள் நிழற்கூடங்கள் அமைப்பது குறித்தும்;

25. கிருஷ்ணகிரி நகரில் இயங்கி வரும், மோட்டார் பராமரிப்புப் பணிமனைகளை வெளியே கொண்டு செல்லும் வகையில் அரசு சார்பில், “ஆட்டோ நகர்” ஏற்படுத்துவது குறித்தும்;

26. கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்து நிரந்தர அருங்காட்சியகம் அமைப்பது குறித்தும்;

27. கிருஷ்ணகிரி—ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் அரசு சார்பில் மருத்துவக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

28. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், “வேளாண்மை தோட்டக்கலைப் பல்கலைக்கழகம்” அமைப்பது குறித்தும்;

29. போலுப்பள்ளி சிப்காட் வளாகத்தை உடனடியாகப் பயனாளிகளுக்கு வழங்குவது குறித்தும்;

30. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளை தரம் உயர்த்துவது குறித்தும்;

31. கிருஷ்ணகிரி நகராட்சியில் வளர்ச்சிப் பணிகளை சீர்படுத்துவது குறித்தும்;

32. மல்லிநாயனப்பள்ளியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. டி. செங்குட்டுவன்]

33. கம்மம் பள்ளியில் கால்நடை மருத்துவமனை தொடங்குவது குறித்தும்;

34. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி முழுவதிற்கும் போதுமான குடிநீர் வழங்குவது குறித்தும் மற்றும் தேவையான இடங்களில் மழைநீர்க் குட்டைகள் அமைப்பது குறித்தும்;

35. மாவட்டம் முழுவதும் காலியாகவுள்ள அங்கன்வாடி, சத்துணவு மையங்களுக்கு போதிய பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. சைதாப்பேட்டை தொகுதி, கிண்டி வட்டாட்சியர் அலுவலகத்தை திறப்பது குறித்தும்;

2. அரசுப் பொருட்காட்சியினை திறப்பது குறித்தும்;

3. அடையாற்றின் இருமருங்கிலும் மழைக்கால தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

4. சைதாப்பேட்டையில் கால்நடைப் பல்கலைக்கழகமும், ஒருங்கிணைந்த நீதித் துறை வளாகமும் திறக்கப்பட வேண்டியது குறித்தும்;

5. சென்னையிலுள்ள விளையாட்டுத் திடல்களிலும், பூங்காக்களிலும் உள்ள மரக் கழிவுகளை விரைந்து அப்புறப்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

***திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூர் அரசு பென்ட்லேன்ட் மருத்துவமனையை மேம்படுத்தி முழுமையாகச் செயல்படுத்துவது குறித்தும்;

2. வேலூர் புதிய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து புதுப்பிக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. போக்குவரத்து நெரிசல் உள்ள CMC மருத்துவமனை அருகிலும் வேலூர் மாநகர் மைய பகுதியில் உள்ள வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி அருகிலும்;

4. வேலூர் மாநகர் மையப் பகுதியில் அமைந்துள்ள நேதாஜி மார்க்கெட்டை புதுபிப்பது குறித்தும், சத்துவாச்சாரி பகுதியில் சுரங்கநடைபாதை அமைப்பது குறித்தும்;

5. வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அரசின் "சங்கீதா சபா" பொழுதுபோக்கு மன்றம் மற்றும் அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருவரங்குளம் ஒன்றியம் மற்றும் அறந்தாங்கி ஒன்றியங்களில் சில ஊராட்சிகளைப் பிரித்து கீரமங்கலத்தில் புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

2. ஆலங்குடி பேரூராட்சி பகுதியில் உள்ள வாரச் சந்தையை மேம்படுத்துவது குறித்தும்;

3. ஆலங்குடி அரசு மருத்துவமனையை புதுக்கோட்டை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

4. வில்லூரணி ஆறு மற்றும் அம்புலி ஆற்றைத் தூர்வாரி தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

5. ஆலங்குடி தொகுதி, குழந்தை வினாயகர் கோட்டை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

6. ஆலங்குடி தொகுதி, அரசு போக்குவரத்து பணிமனையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது குறித்தும்;

7. ஆலங்குடி பேரூராட்சி, செட்டிகுளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

8. கொத்தமங்கலம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

9. ஆலங்குடி தொகுதியில் வம்பன், வல்லத்திராக்கோட்டை, கொத்தமங்கலம், L.N. புரம் வல்லவாரி ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

10. மறமடக்கி, கொத்தமங்கலம், சிலட்டூர், பூவற்றக்குடி, வல்லத்திராக்கோட்டை ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

[திரு. வெ. கணேசன்] [2017 பிப்ரவரி 1

11. ஆவணத்தான்கோட்டை ஊராட்சிப் பகுதியில் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைப்பது குறித்தும்;

12. திருநாளூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் குலமங்கலம் வடக்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் குறித்தும்;

13. ஆலங்குடி தொகுதி ஆலங்குடியில் உதவி மின்பொறியாளர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

14. ஆலங்குடி தொகுதி, வெண்ணவால்குடி ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

15. ஆலங்குடி தொகுதி, மேற்பனைக்காடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

16. இராஜேந்திரபுரம் ஊராட்சி, குடியிருப்புகளுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

17. வெண்ணவால்குடி ஊராட்சி, பசுவயலில் நீர்த்தேக்க தொட்டி மற்றும் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பது குறித்தும்;

18. மறமடக்கி அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்புகளுக்கு ஆங்கில வழி ஆசிரியர்கள் நியமனம் செய்தல் குறித்தும்;

19. கீரமங்கலம் பேரூராட்சி, பெரியார் நகர் பகுதிக்கு நீர்த்தேக்க தொட்டி அமைப்பது குறித்தும்;

20. கொடிவயல் ஊராட்சி, மணிவிளான்வயல் பகுதிக்கு புதிய மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

21. தாந்தாணி ஊராட்சி, தோரடிமனை, திருக்கட்டளை ஊராட்சி மேட்டுப்பட்டி, திருவரங்குளம் ஊராட்சி நிம்பவனேஷ்புரம், வல்லத்திராக்கோட்டை ஊராட்சி பெரிய நாயகிபுரம், வெண்ணவால்குடி ஊராட்சி குருந்தடிமனை, கொடிவயல் ஊராட்சி மணிவிளான்வயல், மேற்பனைகாடு ஊராட்சி மேற்பனைகாடு கிழக்கு, கல்லாலங்குடி ஊராட்சி



2017 பிப்ரவரி 1] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

ஆதி திராவிடர் காலனி மற்றும் சிட்டங்காடு ஊராட்சி, சிட்டங்காடு வடக்கு ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியும், ஆழ்குழாய்க் கிணறும் அமைப்பது குறித்தும்;

22. ஆலங்குடியில் உரிமையியல் நீதிமன்றம் (Civil Court) அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

**திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஒன்றியத்தில் பாசனவசதி பெறும் வகையில் பாக்கம்பாடி அணையை உயத்துவது குறித்தும்;

2. பெலாந்துறை அணைக்கட்டு தொடர்புடைய அனைத்து பாசன வாய்க்கால்களைச் சீரமைப்பது குறித்தும்;

3. மங்களூர் ஒன்றியம், புல்லூர் மற்றும் ஏந்தல் ஊராட்சிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க திறந்தவெளிக் கிணறுகள் அமைப்பது குறித்தும்;

4. அடரி ஊராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

5. மங்களூர், கழுதூர் மற்றும் ஆவணங்குடி ஊராட்சிகளிலிருந்து சென்னைக்கு பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

6. ஒதங்கூர் ஊராட்சி மற்றும் பெண்ணாடம் பேரூராட்சியிலிருந்து பெங்களூருக்கு பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

[திரு. வெ. கணேசன்] [2017 பிப்ரவரி 1

7. திட்டக்குடி பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகள் இயக்க வேண்டியது குறித்தும்;

8. சிறுபாக்கம் மற்றும் பெண்ணாடம் ஊராட்சிகளில் தீயணைப்பு நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

9. கழுதூர் மற்றும் தொழுதூர் கூட்டு குடிநீர்த் திட்ட பழுது நீக்கல் பணிகளை மேற்கொள்வது குறித்தும்;

10. மங்களூரில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

11. கடலூரில் சித்த மருத்துவமனை செயல்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. பரமத்தி பேரூராட்சி பகுதிக்குட்பட்ட இடும்பன்குளத்தைத் தூர்வாரி கரைகளை பலப்படுத்துவது குறித்தும்;

2. காவேரி ஆற்றின் குறுக்கே நஞ்சை இடையாருக்கு அருகிலும் களிமேடு அருகிலும் தடுப்பணைகள் கட்டித்தருவது குறித்தும்;

3. கபிலர்மலை ஒன்றியம் ஜேடர்பாளையத்தில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

4. மேட்டூர் உபரிநீரை திருமணிமுத்தாறில் திருப்பிவிடுதல் குறித்தும்;

5. ராஜவாய்க்கால், பொய்யேரி வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் மற்றும் கொடுராபாளையம் வாய்க்கால்களை மறு சீரமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. கே.எஸ். மூர்த்தி]

6. மோகனூர் ஒன்றியம் குட்லாம்பாறை புதுப்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

7. எரிச்சிபாளையம் ஒன்றியம், மாவுருட்டிப்பட்டி மற்றும் பரமத்தி ஒன்றியம் கொண்டரசம்பாளையத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

8. வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட குப்புச்சிபாளையம் துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

9. பரமத்தி ஒன்றியம், நல்லூர், குன்னமலை, ராமதேவம், மணியனூர் கோலாரம் ஆகிய கிராமங்களுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

10. கபிலர்மலை ஒன்றியம் பெருங்குறிச்சி, சுள்ளிபாளையம் மற்றும் குப்பிரிகாபாளையம் பகுதிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

11. கபிலர்மலை ஒன்றியம், சோளசிராமணி கதவணை மின் திட்டம் அருகில் பூங்கா அமைப்பது குறித்தும்;

12. பரமத்தி ஒன்றியம், கொண்டரசம்பாளையம் மற்றும் எளச்சிபாளையம் ஒன்றியம் பொம்மம்பட்டி கிளை நூலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

13. கபிலர்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கண் மருத்துவம் தொடர்பான உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

14. திருச்செங்கோடு வட்டம், புத்தூர் மருக்கலாம்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் தனித்தனி கிராம நிருவாக அலுவலர்கள் நியமிப்பது குறித்தும்;

15. பரமத்திவேலூர் வட்டம், வடகரையாத்தூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து வடகரையாத்தூரைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் ஊராட்சியும், ஜேடர்பாளையத்தைத் தலைமையிடமாக கொண்ட ஒரு ஊராட்சியும் அமைப்பது குறித்தும்;

16. பரமத்திவேலூர் வட்டம், பெரியசோளிபாளையம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து பெரியசோளிபாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் ஊராட்சியும், சிறுகிணத்துப்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் ஊராட்சியும் அமைப்பது குறித்தும்;

[திரு. கே.எஸ். மூர்த்தி] [2017 பிப்ரவரி 1

17. பரமத்திவேலூர் தொகுதி, ஜேடர்பாளையம் அணைக்கட்டை சுற்றுலாத் தலமாக அறிவித்து படகு சவாரிக்கு ஏற்பாடு செய்து தருவது குறித்தும்;

18. வேலூரில் வேளாண்மை விற்பனை மையம் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

19. வேலூரில் வெற்றிலை குளிர்பதன சேமிப்புக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

20. பொத்தனூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 30 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

21. மரவள்ளி கிழங்கு, மஞ்சள் ஆகியவற்றிற்கு அரசு விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

22. காவிரியில் உபரிநீர் வரும் காலத்தில் சிறுநல்லக்கோயில் ஏரி, பள்ளம்பாளையம் ஏரி, இடும்பன்குளம் ஏரி மற்றும் வாழவந்தி ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி தண்ணீரைச் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்துவது குறித்தும்;

23. கபிலர் மலை ஒன்றியம், அருணகிரிமலையைச் சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும்;

24. வேலூர் அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் ரத்த வங்கி போன்ற வசதிகள் செய்வது குறித்தும்;

25. திருமணிமுத்தாறில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றி, தூர் வாரி கரைகளை அகலப்படுத்துவது குறித்தும்;

26. மோகனூர், கபிலர்மலை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. பரமத்தி வேலூர் வட்டம், மணப்பள்ளி ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, மணப்பள்ளி மற்றும் தீத்தாம்பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தனி ஊராட்சிகள் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. கே.எஸ். மூர்த்தி]

28. மணப்பள்ளியில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைப்பது குறித்தும்;

29. மணப்பள்ளி, பாலப்பட்டி, பாண்டமங்கலம், பிலிகல்பாளையம், ஜேடர்பாளையம், சோளசிராமணி, மணியனூர் கந்தம்பாளையம், நடந்தை, வேலூர் காவேரி பாலம், மாணிக்கம்பாளையம் இளநீர், எளச்சிப்பாளையம் மற்றும் பொம்மம்பட்டி ஆகிய இடங்களில் உயர் கோபுர மின் விளக்கு அமைப்பது குறித்தும்;

30. பரமத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

31. பரமத்தி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

32. வேலகவுண்டம்பட்டி, கந்தம்பாளையம் மற்றும் ஜேடர்பாளையம் ஆகிய ஊர்களிலிருந்து சென்னை மற்றும் கோவைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

33. விவசாயிகள் விண்ணப்பித்தவுடன் மூன்று மாத காலத்திற்குள் மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. ஒரத்தநாடு தொகுதியில் உள்ள பிள்ளையூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

[திரு. எம். இராமச்சந்திரன்] [2017 பிப்ரவரி 1

2. ஒரத்தநாடு வட்ட மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, அனைத்து உபகரணங்களும் வழங்குவது குறித்தும் மற்றும் திருவோணம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் இரத்த சுத்திகரிப்பு சாதனம் மற்றும் சுவாசக் கருவி (வெண்டிலேட்டர்) வழங்க வேண்டியது குறித்தும்;

4. ஒரத்தநாடு தொகுதி, பொய்யுண்டர் கோட்டை, பாச்சூர் ஆதிதிராவிட தெருவில் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

5. ஒரத்தநாடு தொகுதி, மகாராஜ சமுத்திரம் காட்டாற்றில் சில்லத்தூர் அருகில் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

6. ஒரத்தநாடு தொகுதியில் பிள்ளையார் ஊராட்சியில் செம்பன் ஏரி, பிள்ளை—ஆலோடை குளம், களங்காமடை ஏரி புதுக்குளம் ஆகியவைகளை தூர்வாரி செப்பனிடுதல் குறித்தும்;

7. ஒரத்தநாடு தொகுதி, புதூர் ஊராட்சி, காரி முத்து ஏரி மற்றும் தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வாரி செப்பனிடுவது குறித்தும்;

8. கல்யாண ஒடை கால்வாய் பிரிவு வாய்க்கால்கள் செப்பனிட்டு சுவர் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தமிழக வேளாண் பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் அங்கீகாரம் வழங்குவது குறித்தும்;

2. விவசாயிகள், விவசாயக் கூலிகளுக்கான ஊதியம் வழங்குதல் மற்றும் நிர்ணயம் செய்ய தனிக் குழு அமைத்தல் குறித்தும்;

3. வறட்சி பாதித்த மாவட்டங்களில் கூட்டுறவு வங்கிகள் வழியாக விவசாயிகள் பெற்ற முழுப் பயிர் கடன்களையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது குறித்தும்;

4. அரசு இயக்கும் தொலைதூர பேருந்துகளை நன்கு பராமரிப்புடன்கூடிய சொகுசு பேருந்துகளாக இயக்கப்படுவது குறித்தும்;

5. மனிதர்கள், கால்நடைகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் எண்டோசல்பான் போன்றவற்றைத் தடைசெய்வது குறித்தும்;

6. இயற்கை வேளாண்மைக் கொள்கை அறிவிக்கப்பட வேண்டியது குறித்தும்;

7. விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் புதிய குடிநீர் ஆதாரங்களை கண்டறிந்து செயல்படுத்தப்பட வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. ஆலந்தூர் பகுதியில் ஆதம்பாக்கம் தில்லை கங்கா நகர் கூடுதல் திறன் உறுதியுடன்கூடிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

2. போரூர் ஏரி உபரி நீர் அடையாற்றினை சென்றடையும் மணப்பாக்கத்தான் கால்வாய்ப் பணியைத் துரிதப்படுத்தி முடித்திட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. ஆலந்தூர் ஏ.ஜே.எஸ். நிதி மேல்நிலைப் பள்ளி அருகே இரயில்வே சுரங்கப்பாதை அமைப்பது குறித்தும்;

4. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட நந்தம்பாக்கம், முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

5. சென்னை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட முகலிவாக்கம், மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் METRO குடிநீர் வழங்குவது குறித்தும்;

6. பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஆதம்பாக்கம் ஏரியைத் தூர்வாரி, நீர் ஆதாரத்தை பெருக்குவது குறித்தும்;

7. மூவரசம்பட்டு ஊராட்சியில் மூவரசம்பட்டு ஏரிக்குப் பதிலாக மாற்று இடத்தில் குப்பைகளைக் கொட்ட ஏற்பாடுகள் செய்வது குறித்தும்;

8. நங்கநல்லூர் எஸ்.ஐ.பி. காலனியில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

9. ஆலந்தூர் அனைத்துப் பகுதிகளிலும் மெட்ரோ குடிநீர் வழங்குவது குறித்தும்;

10. நங்கநல்லூர்—மணப்பாக்கம்—கெருகம்பாக்கம்—கோவூர் ஆகிய இடங்களில் மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்குமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

**திரு. ப. சிவக்குமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திரு.வி.க. நகர் தொகுதியில் பழுதடைந்த குழாய்களை மாற்றி சுத்தமான குடிநீர் கிடைக்க வழி செய்தல் குறித்தும்;

2. திரு.வி.க. நகர் தொகுதியில் உள்ள, பழைய தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய பகுதி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

3. திரு.வி.க. நகர் தொகுதியில் தர்கா, தாசமகான் 3,4,5-வது தெரு, நேரு ஜோதி நகர், நியு பேரக்ஸ் சாலை, பழைய வாழை மாநகர் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு இலவச பட்டா வழங்குவது குறித்தும்;

4. திரு.வி.க. நகர் தொகுதி முழுவதும் புதிய மழைநீர் வடிகால் கால்வாய் ஏற்படுத்துவது குறித்தும்;

5. திரு.வி.க. நகரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துதல் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் குறித்தும்;

6. திரு.வி.க. நகரில் அமைந்துள்ள தாய்—சேய் நல மையங்களைத் தரம் உயர்த்தி 10 படுக்கை கொண்ட தாய்-சேய் நல மருத்துவமனையாக அமைப்பது குறித்தும்;

7. திரு.வி.க. நகர் தொகுதி சாலையோரங்களில் உள்ள மின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றியமைத்தல் குறித்தும்;

[திரு. ப. சிவக்குமார் என்கிற தாயகம் கவி] [2017 பிப்ரவரி 1

8. திரு.வி.க. நகர் தொகுதியில் பொது நூலகங்களை ஏற்படுத்தி தருதல் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலை கடலோர பகுதியான கொட்டிவாக்கம் முதல் நைனார் குப்பம் வரை தடுப்புசுவர் பூங்கா மற்றும் வலைகளை உலரவைத்து பாதுகாக்க கட்டடம் கட்டி தருவது குறித்தும்;

2. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் குடிமைப் பொருட்கள் வழங்குவது குறித்தும்;

3. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பக்கிங்ஹாம் கால்வாயில் கழிவுநீரைக் கலக்கச் செய்யும் தனியார் நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

4. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைப்பது குறித்தும்;

5. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

6. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

7. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தாழம்பூர், DLF செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், செம்மொழிப் பூங்கா வழியாக ஒக்கியம் மடுவிற்கு மழைநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

8. சோழிங்கநல்லூரில் புதியதாக அரசு மருத்துவக் கல்லூரி கட்டுவதன் அவசியம் குறித்தும்;

9. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15, 200–வது வார்டு சுனாமி குடியிருப்பு பகுதியில் சுகாதார மையத்தில் தரம் உயர்த்தும் வகையில் C.T. Scan, MRI Scan, இரத்த வங்கி அமைப்பது குறித்தும்;

10. சோழிங்கநல்லூரில் உயர்தர சிகிச்சை அளிக்கும் அரசு உயர்தர பொது மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

11. சோழிங்கநல்லூரில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்தும்;

12. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அரசுக்குச் சொந்தமான இடத்தில் புதிய நுகர்வோர் உணவு பொருள் பாதுகாப்பு அலுவலகம் அமைப்பது குறித்தும்;

13. மடிப்பாக்கம் ஐய்யப்பன் நகர் ஏரியைத் தூர்வாரி. அழகுபடுத்தி. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவது குறித்தும்;

14. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட காரப்பாக்கம் சர்வே எண் 123/9, 160/b, 161/b, 165, 170, 121/1, 122, செம்மஞ்சேரி கற்பக விநாயகர் நகர், ராஜீவ்நகர் சர்வே எண் 337, ஈஞ்சம்பாக்கம் சர்வே எண் 282/2 ஆகிய அனைத்து சர்வே எண்ணிற்கும் நிரந்தரமாக குடியிருப்பதற்கு இலவச பட்டா வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**டாக்டர் ஆர்.டி.அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

2. செங்கல்பட்டு நகராட்சியில் தினமும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. செங்கல்பட்டு பேருந்து பணிமனையை நகருக்கு வெளியே அமைப்பது குறித்தும்;

4. செங்கல்பட்டு நகராட்சியைத் தூய்மையாக பராமரிப்பது குறித்தும்;

5. சென்னையில் இருந்து செங்கல்பட்டு வழியாக நான்கு வழிச் சாலையில் செல்லும் பேருந்துகள் நகருக்குள் வந்து செல்ல நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

6. செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு ஒரு வார காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

7. செங்கல்பட்டு தொகுதியில் விண்ணப்பித்த அனைவருக்கும் குடும்ப அட்டை வழங்குவது குறித்தும்;

8. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள 60 வயதிற்கும் மேற்பட்ட அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

9. செங்கல்பட்டு தொகுதியில், குண்ணவாக்கம், அஞ்சூர், கீரப்பாக்கம் ஊராட்சிகளில் உள்ள மேய்க்கால், கல்லாங்குத்து பகுதி மக்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திருமதி ம. வரலட்சுமி]

10. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள கொளவாய் ஏரியைத் தூர்வாருவது குறித்தும்;

11. செங்கல்பட்டு தொகுதி, தென்மேல்பாக்கம், அஞ்சூர், குண்ணவாக்கம், வீராபுரம் ஊராட்சிகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், கொளவாய் ஏரியில் கலப்பதை தடுப்பது குறித்தும்;

12. மறைமலைநகர் இரயில் நிலையம் எதிரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சமிக்ஞை விளக்கு அமைப்பது குறித்தும்;

13. கூடுவாஞ்சேரி, மறைமலைநகர் ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலையில், நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

14. அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்குவது குறித்தும்;

15. விவசாயிகளே விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

16. நியாய விலைக் கடைகளில் பாமாயில் எண்ணெய்க்குப் பதிலாகத் தேங்காய் எண்ணெய் வழங்குவது குறித்தும்;

17. செங்கல்பட்டு பழவேலி–மாமண்டூர் இடையே உள்ள பாலாற்றில் தடுப்பணை கட்டி, குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;

18. செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பயணிகள் இரயில்வே நிலையம் செல்ல நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

19. மறைமலைநகர் நகராட்சி, நின்னகரை ஏரியில் தனியார் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரால் ஏரி மாசுபடுவதைத் தடுப்பது குறித்தும்;

20. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஆப்பூர் ஊராட்சியில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

[திருமதி ம. வரலட்சுமி] [2017 பிப்ரவரி 1

21. தாம்பரம் முதல் நல்லம்பாக்கம் ஊராட்சி வழியாக, கீரப்பாக்கம் வரை அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

22. செங்கல்பட்டு முதல் பட்டரவாக்கம், குண்ணவாக்கம் வழியாக, அஞ்சூர் வரை பேருந்து இயக்குவது குறித்தும்;

23. கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீன வசதிகளுடன்கூடிய அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

24. நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் மற்றும் புதிய பாலங்கள் கட்டும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்று நிலம் வழங்குவது குறித்தும்;

25. செங்கல்பட்டு தொகுதி, ஊரப்பாக்கத்தில் குடிசைமாற்று வாரியத்தால் வழங்கப்பட்ட வீடுகளுக்கு விற்பனை பத்திரம் வழங்க வேண்டியது குறித்தும்;

26. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் 650 கூடுதல் படுக்கைகளுக்கு ஏற்ப கூடுதல் மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

27. செங்கல்பட்டு மருத்துவமனையில் தலைக் காய சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவது குறித்தும் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

28. செங்கல்பட்டு தொகுதியில் உள்ள ஏரிகளில் மண் எடுப்பதைத் தடுப்பது குறித்தும்,

29. மறைமலைநகரில் உள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகத்தில் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் கூடுதல் படுக்கைகளை ஏற்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

**டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் முகப்பு பகுதியில் திருவள்ளுவரின் சிலை அமைப்பது குறித்தும்;

2. சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை காரப்பேட்டையில், நவீன உபகரணங்களுடன்கூடிய புதிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

3. காஞ்சிபுரத்தில், அடிப்படை வசதிகள் கொண்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

4. காஞ்சிபுரம்–செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் பெரியார் நகருக்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் அரசு தங்கும் விடுதிகள் கட்டுவது குறித்தும்;

5. காஞ்சிபுரத்தில் நவீன வசதி கொண்ட வாகன நிறுத்த வசதி, ஓய்வு அறை உணவகங்கள், மத்திய அரசின் ஜவுளித் துறையோடு இணைந்து வணிக வளாகம் அமைப்பது குறித்தும்;

6. காஞ்சிபுரத்தில் மன்னர் நரசிம்ம பல்லவரின் சிலையினை அமைப்பது குறித்தும்;

7. சட்டப்படிப்பு சேர்க்கைக்கு மொழிப்பாடத்தின் மதிப்பெண்ணையும் சேர்த்து தரவரிசை வழங்கிட நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

8. காஞ்சிபுரத்திலுள்ள அனைத்துக் கால்வாய்களையும் புனரமைத்து நீர்நிலைகளைத் தூர்வாருதல் குறித்தும்;

9. காஞ்சிபுரம் புதிய பேருந்து நிலையத்தினை சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் அமைப்பது குறித்தும்;

10. காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காரைப்பேட்டை கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் புறவழி பஸ் நிறுத்தம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. இராணிப்பேட்டை நகராட்சியில் குடிநீர் ஊற்று நிலையங்களில் மின் மோட்டாரை புதுப்பிப்பது குறித்தும்;

2. இராணிப்பேட்டை நகராட்சி, பிஞ்சி ஏரியைத் தூர்வாரி வடிகால் மற்றும் நீர்போக்கு கால்வாய் செப்பனிட்டு, ஏரியை சமன்படுத்தி, மக்களின் பொழுதுபோக்கு பூங்காவும், நவீன பேருந்து நிலையமும் அமைப்பது குறித்தும்;

3. இராணிப்பேட்டை I.V.P.M. கால்நடை தொற்று தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

4. இராணிப்பேட்டை தொகுதியில், நவ்லாக் விவசாய பண்ணை பகுதியில் விவசாயக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. இராணிப்பேட்டை தொகுதியில் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இரண்டாம் கட்ட திட்டத்தில் செயல்படுத்துவது குறித்தும்;

6. இராணிப்பேட்டை தொகுதி, செட்டிந்தாங்கல்—வாணாபாடி சாலையில் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

7. இராணிப்பேட்டை தொகுதி, அம்மூர்—சோளிங்கர் சாலையில் எல்.எப்.சி பள்ளி அருகில் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. ஆர். காந்தி]

8. இராணிப்பேட்டை தொகுதி, நவ்லாக் பகுதி குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

9. இராணிப்பேட்டை தொகுதி, அருங்குன்றம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு (மகப்பேறு மருத்துவமனையை) கூடுதல் படுக்கைகளுடன் தரம் உயர்த்துவது குறித்தும்;

10. இராணிப்பேட்டை தொகுதி, சிப்காட் பகுதியில் இயங்கி வரும் ESI மருத்துவமனையில் (தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை) உள்நோயாளிகள் சிகிச்சை பிரிவு ஏற்படுத்துவது குறித்தும்;

11. இராணிப்பேட்டை தொகுதி, பாலாற்று கரையோரம் உள்ள கிராமங்கள் பயன்பாட்டிலிருந்த நீர் ஊற்றுகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரி செப்பனிடுவது குறித்தும்;

12. இராணிப்பேட்டை தொகுதியில், கத்தியவாடி—அருங்குன்றம் நெடுஞ்சாலையில், கத்தியவாடி ஆதி திராவிடர் காலனி பகுதியில், கழிவுநீர் கால்வாய் அமைப்பது குறித்தும்;

13. இராணிப்பேட்டை தொகுதி, வாலாஜாப்பேட்டை, இராணிப்பேட்டை ஆகிய நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

[திரு. கு. பிச்சாண்டி] [2017 பிப்ரவரி 1

"1. திருவண்ணாமலை ஒன்றியம், வெறையூர்–தி. வாளவெட்டி இடையே உள்ள 10 மீட்டர் நீளமுள்ள ஓடைமீது மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

2. கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியம், செல்லங்குப்பம் ஊராட்சியிலிருந்து நா. கெங்குப்பட்டு மற்றும் ஆராஞ்சி புதூர் கிராமத்திலிருந்து நல்லாண்பிள்ளைபெற்றாள் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் வழியில் துரிஞ்சலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1 தாளக்குடி, அன்பில், நத்தம், ஆலம்பாடி ஆகிய இடங்களில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவது குறித்தும்;

2. லால்குடி மற்றும் புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகளுக்கு புதிய கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

3. லால்குடியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

4. லால்குடியில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

5. லால்குடி ஊராட்சி ஒன்றியம், D. கல்விகுடியில் நெல் கொள்முதல் நிலையத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

6. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், நம்புகுறிச்சி ஊராட்சியில் உள்ள நக்கம்பாடி ஏரியை தூர்வாருவது குறித்தும்;

7. புள்ளம்பாடி ஊராட்சி நத்தை ஆறு (கருத்தை ஓடை) தலைப்பு முதல் முடியும் வரை தூர்வாரி முட்புதர்களை அகற்றுவது குறித்தும்;

8. ஆண்டி ஓடையைத் தூர்வாருவது குறித்தும்;

9. மேலவாளாடி, கொளக்குடி, எம்.கண்ணனூர், கீழரசூர், கருடமங்கலம் ஊராட்சி அழுந்தலைப்பூர் ஆகிய ஊராட்சிகளில் சமுதாயக்கூட கட்டடங்களைக் கட்டுவது குறித்தும்;

10. லால்குடி ஊராட்சி ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சியில் குறிச்சி கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தொடங்குவது குறித்தும்;

11. லால்குடி ஊராட்சி ஒன்றியம், திண்ணியம் ஊராட்சி ஆதி திராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

12. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், வந்தலை கூடலூர் ஊராட்சியில், வந்தலை கூடலூரில், புதிய மேல்மட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர வேண்டியது குறித்தும்;

13. அனைத்து விவசாயிகளுக்கும் விவசாய தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின்மூலம் வாங்கிய கடன் அனைத்தையும், தள்ளுபடி செய்ய வேண்டியது குறித்தும்;

14. R. வளவனூர் ஊராட்சியில் ரெத்தினங்குடி–R. வளவனூர் சாலையில் உள்ள உப்பாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் உள்ளாட்சித் துறையின்மூலம் கட்டுவது குறித்தும்;

15. கீழ்அன்பில் கிராமத்தில், கொள்ளிடம் ஆற்றில், கடுவாய் வாய்க்கால் இணையும் இடத்தில் சேதம் அடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

16. லால்குடி தொகுதி, இடையாற்றுமங்கலம்–தண்ணீர் பந்தல் ஸ்ரீரங்கம் தொகுதி கிளிகூடு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவது குறித்தும்;

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [2017 பிப்ரவரி 1

*17. லால்குடியில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியது குறித்தும்;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தாலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

**திரு. கே.வி. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

**திரு. பி. முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

*“1. எண்ணேகொல் அணைக்கட்டின் இடது புறத்திலிருந்து புதிய கால்வாய் அமைத்து தென்பெண்ணையாற்றிலிருந்து மழைக்காலங்களில் வரும் உபரி நீரை குருபரப்பள்ளி வழியாக மாரசந்திரம் தடுப்பணையில் இணைத்து, வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஏரிகளுக்கும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 12 ஏரிகளுக்கும் நீர் வழங்குவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;*

*2. அலியாளம் அணைக்கட்டின் வலது புறக்கால்வாய் நெடுகை 8.80 கி. மீட்டரிலிருந்து புதிய கால்வாய் அமைத்து, தென் பெண்ணையாற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரை ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள 12 ஏரிகள் மற்றும் தூள்செட்டி ஏரிக்கும் நீர் வழங்கும் திட்டம் குறித்தும்;*

*3. கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாணிஒட்டு அருகே சாமல்பள்ளம் மற்றும் சூளகிரி, சின்னாறு ஆறுகள் தென்பெண்ணையாற்றுடன் கூடும் இடத்தில் ஒரு புதிய அணை கட்டுவது குறித்தும்;*

*4. வேப்பனஹள்ளி ஒன்றியம், எண்ணேகொல்—தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, படேதலாவ் ஏரிக்கு*



2017 பிப்ரவரி 1] [திரு. பி. முருகன்]

*குப்பச்சிப்பாறை, மாரசந்திரம் வழியாக தண்ணீர் கொண்டு சென்று விவசாயத்திற்குப் பயன்படும் வகையிலான திட்டம் குறித்தும்;*

*5. கெலமங்கலம் ஒன்றியம் அலியாளம் தடுப்பணை தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தடுப்பணையில் இருந்து நாகமங்கலம் ஏரி மற்றும் கொப்பகரை ஏரி, தருமபுரி மாவட்டம் தூள்செட்டி ஏரி வரை விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டுசென்று கால்வாய் வெட்டி பயன்படுகின்ற வகையிலான திட்டம் குறித்தும்;*

*6. வேப்பனஹள்ளியில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை நவீன வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*7. சூளகிரி ஒன்றியம், கெலவரப்பள்ளி அணை கால்வாய் திட்டம் குறித்தும்;*

*8. வேப்பனஹள்ளி ஒன்றியம், சிங்கிரிப்பள்ளி அணைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;*

*9. சூளகிரி துரை ஏரியிலிருந்து வேம்பள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லுகின்ற திட்டம் குறித்தும்;*

*10. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் தீயணைப்பு நிலையம் மற்றும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;*

*11. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி இராயக்கோட்டை மற்றும் சூளகிரி ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;*

*12. வேப்பனஹள்ளி தொகுதி, இராயக்கோட்டையில் காய்கறிகளைப் பதப்படுத்த குளிர்பதன கிடங்கு அமைப்பது குறித்தும்;*

*13. வேப்பனஹள்ளி தொகுதி, புவியியல் ரீதியாக நீர் வழங்க சாத்தியமில்லாத ஏரிகளுக்கு நீரேற்று முறையில் பாசன வசதி ஏற்படுத்தித் தருவது குறித்தும்;*

[திரு. பி. முருகன்] [2017 பிப்ரவரி 1

14. வேப்பனஹள்ளி தொகுதி, நாகமங்கலம் ஊராட்சி, தேன்கனிக்கோட்டை வட்டம், கவுண்டர்குண்டா கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

15. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட கடூர் கிராமத்திற்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அமைப்பது குறித்தும்;

16. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட வரகானப்பள்ளியிலிருந்து கோனேகானப்பளி, பெரியதாண்டரகுண்டா, சின்ன தாண்டரகுண்டா, உப்புபள்ளம், கடூர் கிராமம் வரையில் சாலை மற்றும் பேருந்து வசதி செய்வது குறித்தும்;

17. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட கடூர் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

18. சூளகிரி ஊராட்சி ஒன்றியம், அயர்னப்பள்ளி மற்றும் பங்கனப்பள்ளி ஊராட்சிக்கு அடங்கிய கொத்துகுறுக்கை கிராமங்களுக்கு இடையில் தென்பெண்ணை ஆற்றுக்கு குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

19. இம்டிநாயக்கனப்பள்ளி ஊராட்சி, சாமல்பள்ளம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

20. சூளகிரி ஒன்றியம், பெத்தசிகரலப்பள்ளி ஊராட்சி, ஆலுசோனை கிராமத்திற்கு நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவது குறித்தும்;

21. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனப்பள்ளி ஒன்றியம், சாமந்தமலை ஊராட்சிக்குட்பட்ட சாமந்தமலை கிராமத்திற்கும் உனிபுளிகான்கொட்டாய் எனும் இடத்திற்கும் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

22. வேப்பனப்பள்ளி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, சாதனப்பள்ளி கிராமத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி அமைத்து தருவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. பி. முருகன்]

23 வேப்பனப்பள்ளி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, பல்லேரிப்பள்ளி கிராமத்திற்கு புதிய மயான சாலை அமைத்து தருவது குறித்தும்;

24 வேப்பனப்பள்ளி ஒன்றியம், நேரலகிரி ஊராட்சி, சீரனப்பள்ளி மற்றும் கொத்தகிருஷ்ணப்பள்ளி ஆகிய கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்து தருவது குறித்தும்;

25 சூளகிரிக்கு புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்தும்;

26. கிருஷ்ணகிரி ஒன்றியம், நாரலப்பள்ளி ஊராட்சி, ஏக்கல்நத்தம் மலை கிராமத்திற்கு புதியதாக நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

27. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், மேலுமலை ஊராட்சி, எர்ரண்டபள்ளியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

28. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி மருதாண்டபள்ளி ஏரியிலிருந்து சின்னார் அணைக்கு பாசன கால்வாய் அமைத்து தருவது குறித்தும்;

29. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், முத்தாலியிலிருந்து அத்தட்டி, அத்திமுகம் வரை பாசன கால்வாய் அமைப்பது குறித்தும்;

30. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், பாத்தகோட்டை, காமன்தொட்டி சாலையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

31. காமன்தொட்டி ஊராட்சி, கோபசந்திரம் தேர் வீதி அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மற்றும் பங்கனஹள்ளி ஊராட்சி, கொத்துகுறுக்கி அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலங்கள் அமைப்பது குறித்தும்;

32. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பெத்த சிகரலப்பள்ளி ஊராட்சி, கொட்டாயூர் கிராமத்தில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

[திரு. பி. முருகன்] [2017 பிப்ரவரி 1

33. வேப்பனஹள்ளியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து தருவது குறித்தும்;

34. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், பெத்த சிகரலப்பள்ளி ஊராட்சி, கங்கசந்திரம் கிராமத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் வேப்பனப்பள்ளியிலும் புதிய அங்கன்வாடி மையம் அமைப்பது குறித்தும்;

35. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சின்னாரன்தொட்டி ஊராட்சி, கெத்தலன்தொட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கட்டடம் மற்றும் நெரிகம் ஊராட்சி, கொல்லப்பள்ளியில் புதிய அங்கன்வாடி கட்டடம் மற்றும் பகுதி நேர கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

36. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், அங்கொண்டப்பள்ளி ஊராட்சி, ஆலுசாதனப்பள்ளி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கட்டடம் அமைப்பது குறித்தும்;

37. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், அத்திமுகம் ஊராட்சி, அத்திபட்டி கிராமத்தில் கதிரடிக்கும் களம் மற்றும் அத்திமுகம் ஊராட்சி, நரசிபுரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை கட்டடம் அமைப்பது குறித்தும்;

38. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம் வெங்கடேசபுரம் கிராமம், கொம்மேபள்ளி கிராமம் மற்றும் பெள்ளிக்கல கிராமம், தும்மனப்பள்ளி கிராமம் ஆகியவற்றில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

39. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், அளேசீபம் ஊராட்சி, கரடிகுட்டை கிராமத்தில் பயணியர் நிழற்கூடம் அமைப்பது குறித்தும்;

40. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், நஞ்சாபைட்டி கிராமம் மற்றும் தும்மனப்பள்ளி கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையங்கள் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. பி. முருகன்]

41. வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், கோபசந்திரம் கிராமத்தில் தொடக்கப் பள்ளியை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல் குறித்தும்;

42. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி, கூத்தனப்பள்ளி மற்றும் திம்ஜேப்பள்ளி ஊராட்சி, சின்ன உள்ளுகுறிக்கை கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவது குறித்தும்;

43. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், ஊடேதுர்கம், திம்ஜேப்பள்ளி ஆகிய ஊராட்சிக்குட்பட்ட கிராமங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வன விலங்குகள் ஊருக்குள் புகுந்து சேதம் ஏற்படுத்துவதைத் தடுப்பது குறித்தும்;

44. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சி, நீலகிரி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் மற்றும் அங்கன்வாடி மைய கட்டடம் அமைப்பது குறித்தும்;

45. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், தொட்டதிம்மனஹள்ளி ஊராட்சி, கோனம்பட்டி கிராமத்திற்கு புதிய அங்கன்வாடி மைய கட்டடம் மற்றும் கோமைபட்டி, கடவரப்பள்ளி கிராமங்களில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

46. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், பிள்ளையார் அக்ரஹாரம் ஊராட்சி, கோனேரி அக்ரஹாரம் கிராமத்தில் புதிய நியாய விலை கட்டடம் அமைப்பது குறித்தும்;

47. வேப்பனஹள்ளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், தொட்டதிம்மனஹள்ளி ஊராட்சி, டி. கொல்லப்பட்டி கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் மற்றும் புதிய பயணியர் நிழற்கூடம் அமைப்பது குறித்தும்;

48. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், பீமாண்டிப்பள்ளி ஊராட்சி, பாறையூர் மற்றும் கொல்லப்பட்டி, பொன்னுசாமி கொட்டாய் ஆகிய கிராம விவசாயிகளுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும்;

49. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், பீமாண்டப்பள்ளி ஊராட்சி, கொல்லப்பள்ளி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கட்டடம் அமைப்பது குறித்தும்;

50. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், சென்னசந்திரம் ஊராட்சி, கீழ்கொண்டப்பட்டி கிராமத்திலும் அலேகிருஷ்ணாபுரம் கிராமத்திலும் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

51. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், சென்னசந்திரம் ஊராட்சி, ஆவல்நத்தம் கிராமத்திற்கு புதிய சீல் பள்ளம் ஏரி திட்டத்தை செயல்படுத்த வேண்டியது குறித்தும்;

52. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், குரியனப்பள்ளி ஊராட்சி, கரியசந்திரம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மைய கட்டடம் அமைப்பது குறித்தும்;

53. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், வேப்பனஹள்ளி ஊராட்சி, கோனேகவுண்டனூர் கிராமத்தில் மாணவ, மாணவியருக்கு காலை மற்றும் மாலை நேரத்தில் பேருந்து வசதி ஏற்படுத்த வேண்டியது குறித்தும்;

54. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், வேப்பனஹள்ளி ஊராட்சி, கோனேகவுண்டனூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியது குறித்தும்;

55. வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், மாரசந்திரம் ஊராட்சி, நெடுமருதி கிராம ஏரிக்கு தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;





56. வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டை ஒன்றியம், கொப்பகரை ஊராட்சி, பட்டிப்பாறை கிராமத்திற்கு புதிய நியாய விலைக் கட்டடம் அமைப்பது குறித்தும்;

57. வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டை ஒன்றியம், மேடு அக்ரஹாரம் ஊராட்சி, முகலூர் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில் அருகில் ஆழ்துளை கிணறு மற்றும் சிறுவிசை பம்பு அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. பேளகொண்டப்பள்ளி, ஜவளகிரி, அஞ்செட்டி, தளி, கக்கதாசம், அந்தேவனப்பள்ளி ஆகிய கிராமங்களில் துணை சுகாதார நிலையம் அமைத்து தர வேண்டியது குறித்தும்;

2. அந்தேவனப்பள்ளி, கக்கதாசம், நாட்ராம்பாளையம் கிராமங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் குறித்தும்;

3. தளி ஒன்றியம், மதகொண்டப்பள்ளியில் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

4. தளி மற்றும் கெலமங்கலம் தொகுதியில் உள்ள அனைத்து பொதுப் பணித் துறை ஏரிகளும் தூர் வாருதல் குறித்தும்;

5. தளி தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் ஒகேனக்கல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்தல் குறித்தும்;

[திரு. ஒய். பிரகாஷ்] [2017 பிப்ரவரி 1

6. கோலட்டி ஒன்றியம், தளி தொகுதியில் உள்ள தமிழ்நாடு அரசுகோலட்டி பட்டுப் பண்ணை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

7. தேன்கனிக்கோட்டையில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அரசு கட்டடம் கட்டுவது குறித்தும்;

8. வன விலங்குகள் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் விளை நிலங்களில் புகாவண்ணம் அகழி மற்றும் மின்வேலி அமைக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. துறையூர் தொகுதியில் உள்ள மங்கப்பட்டியில் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்த 19 பேரின் குடும்பங்களுக்கு அரசு நிவாரண உதவி உயர்த்தி வழங்குவதும், அவர்களது குடும்பங்களில் உள்ளவர்களுக்கு அரசு வேலை வழங்குவது குறித்தும்;

2. துறையூர் சின்ன ஏரியைப் புனரமைப்பதற்கு NPCA திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும், பெரிய ஏரி உட்பட அனைத்து ஏரிகளிலும் சீமைக் கருவேல மரங்களை அகற்ற தூர்வாரி புனரமைப்பது குறித்தும்;

3. துறையூர் நகரில் நகர கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, குடிநீர், தெருவிளக்கு ஆகியவற்றை செயல்படுத்துவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

4. திடக் கழிவு மேலாண்மை திட்டத்தில் துறையூர் விநாயகர் தெருவில் உள்ள குப்பைக் கிடங்கை நவீன முறையில் பிரித்து வெங்கடேசபுரத்தில் செயல்படுத்துவது குறித்தும்;

5. துறையூரில் உள்ள தாலுகா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும் மற்றும் துறையூர் நகராட்சியில் பூங்கா அமைப்பது குறித்தும்;

6. துறையூர் நகரில் உள்ள காவலர் குடியிருப்புப் பகுதிக்கு புதிய குடியிருப்புக் கட்டடம் கட்டுதல் குறித்தும்;

7. உப்பிலியாபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

8. துறையூர் நகராட்சிப் பகுதி முழுவதும் காவேரி கூட்டுக் குடிநீர் அனைத்துப் பகுதி மக்களுக்கும் சென்றடைய தனிக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும்;

9. உப்பிலியாபுரத்தில் தீயணைப்பு நிலையம் மற்றும் துறையூர், உப்பிலியாபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

10. துறையூர் தொகுதியிலுள்ள பச்சமலையில் பழங்குடியினர் மக்கள் வாழும் கோம்பை, வண்ணாடு ஆகிய பஞ்சாயத்துகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதுடன், புதிய பேருந்துகள் இயக்க வேண்டியது குறித்தும்;

11. துறையூரில் உள்ள தாலுகா அரசு மருத்துவமனையின் தரத்தை உயர்த்தி நவீன வசதி கொண்ட மருத்துவமனையாக அமைப்பது குறித்தும்;

12. துறையூர் தொகுதியில் உள்ள சுற்றுலாத்தலமான புளியஞ்சோலையை புனரமைப்பது குறித்தும்;

13. துறையூர், உப்பிலியாபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி ஒன்றியங்களுக்கு புதிதாக பூங்கா, விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

[திரு. செ. ஸ்டாலின் குமார்] [2017 பிப்ரவரி 1

14. துறையூர் தொகுதியிலுள்ள துறையூர் ஒன்றியம், உப்பிலியாபுரம் ஒன்றியம், துறையூர் நகராட்சி, புத்தனாம்பட்டி, கோட்டாத்தூர் ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

15. உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சபெருமாள்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

16. துறையூர் தாலுகா உடன் கோட்டாத்தூர், புத்தனாம்பட்டி, அபினிமங்கலம், வெள்ளகல்பட்டி ஆகிய ஊர்களை இணைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்களில் 1969 ஆம் ஆண்டு கொண்டு வந்த கூடலூர் ஜென்மி ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி பட்டா வழங்க சட்டப்பிரிவு 17–ன்கீழ் உள்ள பூமிக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

2. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில், நீலகிரி மாவட்டத்தில், வன விலங்குகளால் மனிதர்களுக்கு ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும்;

3. முதுமலை புலிகள் காப்பகத்தில் பெருகி வரும் உன்னிபார்த்தியன் செடிகளை அழிப்பதற்கான திட்டம் வகுப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. மு. திராவிடமணி]

4. முதுமலை புலிகள் காப்பகத்தில் வன விலங்குகள் விரும்பி உண்ண தாவரங்கள் வளர்ப்பது குறித்தும்;

5. முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ளவர்களுக்கு மாற்று குடியிருப்புத் திட்டத்தை நிறைவேற்றி அவர்களுக்கு மாநில அரசின் பங்குத்தொகையை வழங்குவது குறித்தும்;

6. முதுமலை புலிகள் காப்பகத்தில் குடியிருக்கும் ஆதிவாசிகளுக்கு குடியிருப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது குறித்தும்;

7. விவசாய பூமிக்குள் யானைகள் வராமல் தடுப்பதற்கு தொலைநோக்குத் திட்டம் குறித்தும்;

8. நீலகிரி மாவட்டம், மசினகுடியில் நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்தது மற்றும் அதற்கான இழப்பீடு வழங்குவது குறித்தும்;

9. நீலகிரி மாவட்டம், மசினகுடியில் கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவதற்கு சிறப்பு திட்டம் அமைப்பது குறித்தும்;

10. நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் உள்ள பெரிய குடிநீர்த் திட்டங்களாகிய சோலாடி, அம்மலமூலா ஆகிய திட்டங்கள் மறு சீரமைப்பு செய்வது குறித்தும்;

11. நீலகிரி மாவட்டத்தில், நெல்லியாலம், கூடலூர் நகராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணிகளை ஊராட்சிமூலம் செயல்படுத்துவது குறித்தும்;

12. நீலகிரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள தேயிலை விவசாயத்திற்கு இழப்பீடு தருவது குறித்தும்;

13. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக 350/– ரூபாய் வழங்குவது குறித்தும்;

14. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள் வழங்குவது குறித்தும்;

15. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தை மறுசீரமைப்பு செய்வதுடன், தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீட்டுமனையும், வீடும் கொடுப்பது குறித்தும்;

[திரு. மு. திராவிடமணி] [2017 பிப்ரவரி 1

16. நீலகிரி மாவட்டம், கூடலூரில் இயங்கிக் கொண்டு இருக்கின்ற பாரதியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

17. பாரதியார் பல்கலைக்கழகத்தின் கூடலூர் உறுப்புக் கல்லூரியில் முதுகலை பயிலும் பெண்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் இதர சலுகைகள் வழங்குவது குறித்தும்;

18. பாரதியார் பல்கலைக்கழகத்தின் கூடலூர் உறுப்புக் கல்லூரியில் அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புதல் குறித்தும்;

19. நீலகிரி மாவட்டத்தில் உள்ள பந்தலூர், கூடலூர் மற்றும் நெல்கோட்டை வட்டத்தில் உள்ள தலைமை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நியமித்தல் குறித்தும்;

20. நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட பகுதியில் போதிய பேருந்து இயக்குவது குறித்தும்;

21. நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

22. நீலகிரி மாவட்டம், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட ஆரோட்டு பாறைக்கு செல்லும் சுண்ணாம்பு பாலத்தைச் சரி செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே. எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:



2017 பிப்ரவரி 1] [திரு. சு. புகழேந்தி]

"1. மதுராந்தகம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைப்பது குறித்தும்;

2. புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில், தங்கும் விடுதியோடு சேர்ந்த வணிக வளாகமும் பறவை ஆராய்ச்சி மையமும் அமைத்தல் குறித்தும்;

3. மதுராந்தகம் மற்றும் அச்சிறுபாக்கத்தில் அமைந்துள்ள அரசுப் பொது மருத்துவமனையின் தரம் உயர்த்தி நவீன அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

4. தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள மதுராந்தகம் ஏரியை அழகுபடுத்தி படகுக் குழாம் அமைத்து சுற்றுலாத்தலம் ஏற்படுத்துதல் குறித்தும்;

5. கருங்குழி பேரூராட்சியில், ஜி.என். பேட்டையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவாக்கம் செய்து மருத்துவர்களை நியமித்து, உயிர்காக்கும் உபகரணங்கள் வழங்கி மேம்படுத்துவது குறித்தும்;

6. தோட்ட நாவல் நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவது குறித்தும்;

7. மதுராந்தகம் ஒன்றியத்தில் அமைந்துள்ள விவசாய விதை விற்பனை மையத்தில் குளிர்சாதன வசதியுடன்கூடிய குளிர்சாதனக் கிடங்கு மற்றும் தரமான விதைகள் விவசாயிகளுக்கு தர ஏற்பாடு செய்தல் குறித்தும்;

8. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செல்லும் பாலாற்றின் குறுக்கே புக்கத்துறை மற்றும் புதூர் கிராமம் ஆகிய இடங்களில் தடுப்பணை ஏற்படுத்தி விவசாயத்திற்கு நீராதாரம் கிடைக்க ஏற்பாடு செய்தல் குறித்தும்;

9. முருக்கஞ்சேரி கிராமத்திலிருந்து இருசாமநல்லூர் செல்லும் வழியில் கிளியாற்றில் தரைவழிப் பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

**திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நாகர்கோவில் தொகுதியில் உள்ள வல்லன்குமாரவிளை குப்பை கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றுதல் குறித்தும்;

2. சுப்பையார்குளம் சீர்செய்து மேம்பாடு செய்தல் குறித்தும்;

3. முத்து தியேட்டர் எதிரே உள்ள உப மங்குநேரி குளத்தை கழிவுநீர் கலக்காமல் சீர்படுத்துதல் குறித்தும்;

4. நாகர்கோவில் தொகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணையைத் தூர்வாரி நீர் கொள்ளளவு அதிகப்படுத்துதல் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தருமபுரி தொகுதி, பாளையம்புதூர் ஊராட்சி, ஜகனதன் கோம்பை அணைக்கட்டுத் திட்டம் துவங்கப்படுவது குறித்தும்;

2. தருமபுரி நகராட்சியில் தகன மேடை ஏற்படுத்துவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. பெ. சுப்ரமணி]

3. தருமபுரி தொகுதியில் ஒரு மலர் அங்காடி அமைப்பது மற்றும் ஏரிகளைத் தூர் வாருவது குறித்தும்;

4. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், வட்டாட்சியர் அலுவலகப் பணி துவங்கப்படுவது குறித்தும்;

5. தருமபுரி தொகுதி, சிப்காட் பணி துவங்கப்படுவது குறித்தும்;

6. தருமபுரி தொகுதி, கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

7. தருமபுரி நகராட்சியில் உள்ள 14 வார்டுகளில் சாக்கடைப் பணிகள் துவங்குவது குறித்தும்;

8. தருமபுரி தொகுதி, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் அமைத்துக் கிராமங்களுக்கு சென்றடைவது குறித்தும்;

9. தருமபுரி தொகுதி, தடங்கம் கிராமத்தில் நகராட்சி குப்பைகளை, மக்கிய குப்பை, மக்காத குப்பை என தனியாகப் பிரிக்கும் பணி துவங்கப்படுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. பொன்னமராவதி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. பொன்னமராவதியில் மின் மயானம் அமைக்கப்படுவது குறித்தும்;

3. பொன்னமராவதி வட்டத்தை புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தோடு இணைக்க வேண்டியது குறித்தும்;

4. பொன்னமராவதியில் குப்பைகளை அகற்ற வேண்டியது குறித்தும்;

5. பொன்னமராவதி அமரகண்டான் ஊரணியைச் சுற்றி பூங்கா அபிவிருத்தி திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் தரைத்தளம் அமைப்பது குறித்தும்;

6. பொன்னமராவதியில் அரசு பாப்பா ஆச்சி மருத்துவமனையைத் தரம் உயர்த்தப்பட வேண்டுவது குறித்தும்;

7. பொன்னமராவதி வட்டம், திருக்களம்பூர், நகரப்பட்டி ஆகிய உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட வேண்டுவது குறித்தும்;

8. பொன்னமராவதி மற்றும் திருமயம் பேருந்து நிலையங்களை விரிவுபடுத்த வேண்டுவது குறித்தும்;

9. காரையூர் மற்றும் அரிமளத்தில் பேருந்து நிலையங்கள் அமைப்பது குறித்தும்;

10. திருமயம் வட்ட அரசு பொது சிறப்பு மருத்துவமனைக்கு, சிறப்பு மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டிய குறித்தும்;

.11 திருமயத்திலுள்ள சத்தியகிரீஸ்வரர் சத்தியமூர்த்தி ஆலயத்திற்கு திருக்குடமுழுக்கு நடத்த வேண்டுவது குறித்தும்;

12. அரிமளம் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் உருவாக்குவது குறித்தும்;

13. திருமயம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து அரிமளத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய அரிமளம் வட்டம் உருவாக்குவது குறித்தும்;

14. திருமயம்—சென்னை அரசு விரைவு பேருந்தினை இயக்க வேண்டியது குறித்தும்;

15. அரிமளத்தில் புதிய பேருந்து நிலையம் உருவாக்கித் தரப்பட வேண்டுவது குறித்தும்;





16. திருமயம் வட்டம், லெம்பலக்குடியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

17. திருமயம் தொகுதியில், முக்கிய இடங்களில் பொது சுகாதாரக் கழிப்பறைகள் உருவாக்குவது குறித்தும்;

18. ராங்கியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சிறப்பு மருத்துவ வசதியோடு தரம் உயர்த்துவது குறித்தும்;

19. திருமயத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடியிருப்பு வசதிகள் உருவாக்கித் தருவது குறித்தும்;

20. திருமயம் தொகுதி, கடையக்குடியில் அமைந்துள்ள ஹோல்ஸ் ஓர்த் அணைக்கட்டில் பூங்கா அமைத்து தருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் ஒரே ஒரு திருத்தம்தான் கொடுத்துள்ளேன். இப்பொழுதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘அதைக் கொடுத்துவிடுகிறேன்’ என்றால் அதை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இப்பொழுது கொடுத்ததற்கு முன்மொழியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அது டெல் கம்பெனியை பற்றியது. அதைச் சொல்லிவிட்டால் நான் எதற்கு முன்மொழிய வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இதற்கு மட்டும் முன்மொழியுங்கள்.

[2017 பிப்ரவரி 1

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“காட்பாடி டெல் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகையை வழங்குவதுடன், அவர்களது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

**முனைவர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதி, சின்னசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு ஆலைக்கு கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு உரிய தொகையை வழங்குவது குறித்து;*

*ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

**திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.*

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*



2017 பிப்ரவரி 1]

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:*

*“1. திருவண்ணாமலை, செங்கம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை செயல்படுத்துவது குறித்தும்;*

*2. திருவண்ணாமலை மாவட்ட கரும்பு விவசாயிகளுக்கு, தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்புத் தொகையை முழுமையாக வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

*3. திருவண்ணாமலை டான்காப் எண்ணெய் ஆலையைச் செயல்படுத்துவது குறித்தும்;*

*4. திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு போதிய தண்ணீர் வசதி, மருத்துவர்கள் மற்றும் இதர பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;*

*5. திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிய துறை சார்ந்த டாக்டர்கள் மற்றும் இதர பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்தும்;*

*6. திருவண்ணாமலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுவது குறித்தும்;*

*7. திருவண்ணாமலையில் நகராட்சி குப்பைக் கிடங்கினை இடமாற்றம் செய்யப்படுவது குறித்தும்;*

*8. திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு ஆதாரமான சாத்தனூர் அணையைத் தூர்வாருவது குறித்தும்;*

*9. திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள குருமன்ஸ் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டியது குறித்தும்;*

*10. ஓட்டர், பண்டி, கொட்டா இன மக்கள் அனைவருக்கும் SC சான்றிதழ் வழங்குவது குறித்தும்;*

*11. திருவண்ணாமலை மாவட்டத்திற்கு என்று தனியாக பால் கூட்டுறவு ஒன்றியம் தொடங்கப்படுவது குறித்தும்;*

[திரு. எ.வ. வேலு] [2017 பிப்ரவரி 1

12. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் பட்டு நெசவுப் பூங்கா அமைக்க வேண்டியது குறித்தும்;

13. திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகில் உள்ள அரசு விதைப் பண்ணையைச் செயல்பட வைப்பது குறித்தும்;

14. கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மூங்கில் துறைப்பட்டு ஆலைகளில் இணை மின் உற்பத்தித் திட்டம் தொடங்கப்படுவது குறித்தும்;

15. திருவண்ணாமலை நகரம், தாமரைக்குளம் தூர்வாரப்பட்டு பொழுதுபோக்குத் தலமாக மாற்றப்படுவது குறித்தும்;

16. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

17. பொதுப் பணித் துறையில் பணிபுரியும் தினக்கூலிப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. அணைக்கட்டு தொகுதி, அப்துல்லாபுரம் ஊராட்சி திருவள்ளூர் தெரு வழியாகச் செல்லும் சதுப்பேரி ஏரி கால்வாய்மீது சிறுபாலம் அமைப்பது குறித்தும்;

2. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை, பாலம்பட்டு, ஜார்தான் கொள்ளை ஆகிய மலைவாழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உயர் மின்னழுத்த பாதை அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

3. அணைக்கட்டு தொகுதி, பள்ளிக்கொண்ட பேரூர் வேப்பாய்கால் பகுதியில் மேல்நிலை குடிநீர் தேக்கதொட்டி அமைப்பது குறித்தும்;

4. அணைக்கட்டு தொகுதி, பள்ளிகொண்டா பேரூர் தேசிய நெடுஞ்சாலையில் கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

5. அணைக்கட்டு தொகுதியில் கொய்யா சாறு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவது குறித்தும்;

6. அணைக்கட்டு தொகுதி, வேலூரிலிருந்து (வழி) பொய்கை சத்தியமங்கலம், இராமபுரம், M.V. பாளையம் வழியாக அணைக்கட்டுக்கு எண் 13 B பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

7. அணைக்கட்டு தொகுதி, குடியாத்தம் முதல் அணைக்கட்டு பேருந்தை இயக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

8. அணைக்கட்டு தொகுதி, ஒடுக்காத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

9. அணைக்கட்டு தொகுதி, ஏரி கொள்ளை கிராமத்திலிருந்து அணைக்கட்டு பள்ளி மாணவர்கள் நலன் கருதி காலை 8.30 மணி, மாலை 4.30 மணிக்கு அரசு நகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

10. அணைக்கட்டு தொகுதி, வேப்பாங்கால் பகுதி சுடுகாட்டை விரிவுப்படுத்தி எரிமேடை அமைப்பது குறித்தும்;

11. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், திருவள்ளுவர் குடியிருப்பு பகுதியில் சமுதாயக் கூடம், தெரு மின்விளக்கு, கழிவுநீர்க் கால்வாய், ஆரம்ப பள்ளி, வீட்டு மனைப் பட்டா உட்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது குறித்தும்;

12. அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், பாகாயம் பேருந்து நிலையத்தில் பேருந்து நிழற்குடை அமைப்பது குறித்தும்;

13. அணைக்கட்டு தொகுதி, பொய்கை மாட்டு சந்தைக்கு விற்பனைக்கு வரும் கால்நடைகள் நலன் கருதி ஏற்றிஇறக்கும் வசதி செய்து தருவது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2017 பிப்ரவரி 1

14. அணைக்கட்டு தொகுதி, தேவி செட்டிகுப்பம் ஊராட்சி திப்பசமுத்திரம் ஏரிக்கு செல்லும் கால்வாயில் சுமார் 200 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

15. அணைக்கட்டு தொகுதி, மேலரசன்பட்டு ஊராட்சியின் ஆதி திராவிடர் காலனி முதல் பங்களாமேடு வரை கழிவுநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;

16. அணைக்கட்டு தொகுதி, திப்பசமுத்திரம் ஊராட்சி, மங்களம் மற்றும் தட்டாக்குட்டை கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

17. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை, ஜார்தான் கொள்ளை, பாலமட்டு ஊராட்சியில் மலைவாழ் மக்களின் நலன் கருதி புதிய நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

18. அணைக்கட்டு தொகுதி, மேலரசுபட்டு ஊராட்சியில் வசிக்கும் பொதுமக்கள் நலன் கருதி அரசு சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

19. அணைக்கட்டு தொகுதி, மேலரசுபட்டு ஊராட்சியில் இருளர் இன மக்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

20. அணைக்கட்டு தொகுதி, புத்தூர் ஊராட்சி மற்றும் கீழ்கிருஷ்ணாபுரம் மேற்கு ஊராட்சி ஆதிதிராவிடர் காலனிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து பைப்-லைன் அமைப்பது குறித்தும்;

21. அணைக்கட்டு தொகுதி, கிராமங்கள் ஊராட்சி ஆதி திராவிடர் காலனிக்கு பாலாற்றில் இருந்து கிணறு குழாய் மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

22. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சிக்கு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

23. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சி, ஜார்தான்கொல்லை ஊராட்சி, பாலம்பட்டு ஊராட்சி பகுதியில் வசிக்கும் 15 ஆயிரம் மலைவாழ் மக்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்குவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

24. அணைக்கட்டு தொகுதி, இலவம்பாடி, ஒதியத்தூர், மேலரசுப்பட்டு, வல்லண்டராமம் ஊராட்சிகளில் ஆழ்துளை குழாய்மூலம் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

25. அணைக்கட்டு தொகுதியில் விண்ணப்பித்த அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் இலவச மோட்டார் சைக்கிள்கள் வழங்குவது குறித்தும்;

26. அணைக்கட்டு தொகுதி, மேலரசுப்பட்டு ஊராட்சி, மடையம்பட்டு ஊராட்சி, ஊனை வாணியம்பாடி ஊராட்சி மற்றும் வண்ணந்தாங்கல் ஊராட்சி, கொட்டாவூர் கிராமத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு உலர்களம் அமைப்பது குறித்தும்;

27. அணைக்கட்டு தொகுதி, கருங்காலி ஊராட்சி பசுவநாயினிகுப்பம் கிராமத்திற்கு கருங்காலி ஆற்றிலிருந்து ஆழ்துளை கிணறுமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

28. அணைக்கட்டு தொகுதி, ஒங்கம்பாடி ஊராட்சிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி தருவது குறித்தும்;

29. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சி, சந்தைப்பேட்டையில் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

30. அணைக்கட்டு தொகுதி, கெங்கநல்லூர் ஊராட்சி, மலைசந்து கிராமத்திற்கு பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

31. அணைக்கட்டு தொகுதி, வசந்தநடை ஊராட்சி, ஒக்கனாவரம் காலனிக்கு ஆழ்துளை கிணறு வெட்டி சின்டெக்ஸ் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

32. அணைக்கட்டு தொகுதி, விரிஞ்சிபுரம் ஊராட்சி, ஜாப்ராப்பேட்டை முஸ்லிம் காலனிக்கு பாலாற்றின் குறுக்கே ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் வழங்குவது குறித்தும்;

33. அணைக்கட்டு தொகுதி, பிஞ்சமந்தை ஊராட்சியில் பண்ணைக்குட்டை அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2017 பிப்ரவரி 1

34. அணைக்கட்டு தொகுதி, வேப்பங்குப்பம் கிராமத்தில் உள்ள துணை மின் நிலையத்தை 110 கிலோ வாட் உயர் மின் அழுத்த நிலையமாக மாற்றுவது குறித்தும்;

35. அணைக்கட்டு தொகுதி, செதுவாலை ஊராட்சி நரிக்குறவர்கள் தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்தல் குறித்தும்;

36. அணைக்கட்டு தொகுதி, மேலரசம்பட்டு முதல் வேலூர் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;

37. அணைக்கட்டு தொகுதி, கும்பல்கொட்டாயில் இருந்து வேலூர் வரை பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

38. அணைக்கட்டு தொகுதி, வேலூர் முதல் அமிர்தி வரை செல்லும் சாலையின் குறுக்கே நாகநதி ஆறு மற்றும் வேலூர் முதல் ஒடுக்காத்தூர் செல்லும் சாலையில் வரதலாம்பட்டு ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைப்பது குறித்தும்;

39. அணைக்கட்டு தொகுதி, பென்னாத்தூர் பேரூர், வார்டு எண் 2, மேட்டுப்பாளையம், விநாயகர் கோயில் தெருவில் மற்றும் அருந்ததியர் சாலை விநாயகர் கோயில் அருகில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து சின்டெக்ஸ் தொட்டிமூலம் தண்ணீர் வழங்குவது குறித்தும்;

40. அணைக்கட்டு தொகுதி, பென்னாத்தூர் பேரூர், வார்டு 3 மற்றும் 4 சப்தலிபுரம் பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி பால் உற்பத்தியாளர் சங்கம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. புன்னக்காயல் எனும் மீனவ கிராமத்தில் வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

2. திருச்செந்தூரில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

3. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

4. திருச்செந்தூரில் உள்ள ஆவுடையார்குளம், எல்லப்பநாயக்கன்குளம் வடிகால் ஓடையைச் சீரமைத்து கான்கிரீட் ஸ்லாப் அமைப்பது குறித்தும்;

5. திருச்செந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்றுவது குறித்தும்;

6. திருச்செந்தூர் தொகுதியில் முதியோர் உதவித்தொகை விரைந்து வழங்குவது குறித்தும்;

7. உடன்குடி பகுதியில் குளம் அமைப்பது குறித்தும்;

8. அங்கமங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

9. உடன்குடி சுற்று வட்டாரப் பகுதியில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்குவது குறித்தும்;

10. திருச்செந்தூர் பேரூராட்சி, அமலி நகரில் சமுதாய நலக் கூடம் அமைப்பது குறித்தும்;

11. திருச்செந்தூர் பேரூராட்சி, ஆலந்தலையில் மற்றும் ஜீவா நகரில் மீன் வலைக் கூடங்கள் அமைப்பது குறித்தும்;

12. திருச்செந்தூர் பேரூராட்சி, தோப்பூரில் நியாய விலைக் கடை கட்டடம் அமைப்பது குறித்தும்;

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 பிப்ரவரி 1

13. ஆத்தூர் பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக்குவது குறித்தும்;

14. திருச்செந்தூரில் உள்ள தினசரி காய்கறி அங்காடிக்கு கட்டடம் கட்டித் தருவது குறித்தும்;

15. காயல்பட்டணம் அரசு மருத்துவமனையில் கூடுதலாக முதுகலை மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்தும்;

16. திருச்செந்தூர் தொகுதியில் சீரான குடிநீர் வழங்க வேண்டிய திட்டங்கள் குறித்தும்;

17. உடன்குடி அனல் மின் நிலையப் பணிகள் தொடங்குவது குறித்தும்;

18. திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் பேருந்து வசதியில்லாத கிராமங்களில் பேருந்து வசதி ஏற்படுத்தித் தருவது மற்றும் உடன்குடி பகுதியில் சிற்றுந்து இயக்குவது குறித்தும்;

19. கடம்பா குளம் மற்றும் அதன் கீழ் உள்ள பல்வேறு குளங்களை தூர்வாரி பயன்பாட்டிற்குக் கொண்டுவருவது குறித்தும்;

20. திருச்செந்தூர் தொகுதியில் உள்ள மீனவ கிராமங்களான மணப்பாடு, கல்லாமொழி, ஆலந்தலை, அமலிநகர் மற்றும் வீரபாண்டியன்பட்டணம் ஆகிய இடங்களில் தூண்டில் வளைவு அமைப்பது குறித்தும்;

21. திருச்செந்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

22. திருச்செந்தூரில் அனைத்து விளையாட்டு வீரர்களும் பயன்பெறும் வகையில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

23. காயல்பட்டணம் நகராட்சியில் 2–வது (குழாய் வழி) திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்படுவது குறித்தும்;

24. கடம்பா வடிகாலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]

25. திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி நாசரேத்தில் உள்ள நூற்பாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்தும்;

26. உடன்குடி பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

27. குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயிலில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

28. ஆத்தூர் பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சோமசுந்தரி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள தெப்பக்குளத்தைச் சீர் செய்து பக்தர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது குறித்தும்;

29. தென்திருப்பேரை பேரூராட்சி, கீழக்கல்லாம்பாறையில் ஒரு சமுதாய நலக் கூடம் அமைப்பது குறித்தும்;

30. திருச்செந்தூர் பேரூராட்சி ஆலத்தலையில் நியாயவிலைக் கடை கட்டடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தேயிலை விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கிடைக்க செய்ய வேண்டியது குறித்தும்;

2. நீலகிரி மாவட்டத்தில் வேலி கருவேலா அக்கேசா மற்றும் கற்பூர மரங்களை வேருடன் அகற்ற வேண்டியது குறித்தும்;

3. உதகை நகராட்சிக்கு உட்பட்ட சுற்றுலா தலங்களில் வரும் வருமானத்தில் துப்புரவுப் பணிகளை மேம்படுத்துவது போதிய நிதியினை நகராட்சிக்கு ஒதுக்க வேண்டியது குறித்தும்;

4. உதகை நகராட்சிக்கு உட்பட்ட மார்கெட் கடைகளின் உயர்த்தப்பட்ட வாடகை சதவீதத்தை குறைக்க கமிட்டி அமைத்து வியாபாரிகளுக்கு உதவுவது குறித்தும்;

5. உதகை நகரத்திற்கு இரண்டடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைப்பதுடன் கோடமந்து கால்வாயை சுகாதாரத்துடன் பாராமரிப்பது குறித்தும்;

6. உதகையின் 3–வது குடிநீர்த் திட்டம் முழுமையாகச் செயல்பட கூடுதல் நிதி ஒதுக்குவது குறித்தும்;

7. உதகை நகரத்தில் அதிக அளவில் நவீன கழிப்பிடங்கள் அமைப்பது குறித்தும்;

8. நீலகிரி மாவட்டம், உதகையில் மருத்துவ கல்லூரியுடன்கூடிய Super Speciality மருத்துவமனை அமைக்க வேண்டியது குறித்தும்;

9. உதகை நகராட்சிக்கு உட்பட்ட காந்தல் கழிவுநீர்க் கால்வாயை தூர்வாரி சீர் செய்வது குறித்தும்;

10. உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஊராட்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் இடங்களில் ஆழ்துளை கிணறுடன் மோட்டார் பம்ப், மோட்டார் ரூம், குடிநீர் குழாய்கள் அமைக்க வேண்டியது குறித்தும்;

11. உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இத்தலார் ஊராட்சி எமரால்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

12. உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட கல்லட்டி தட்டனேரி கிராமத்தில் வசிக்கும் மலைவேடர் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டியது குறித்தும்;



13. நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் ஈழுவதியா இன மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்க வேண்டியது குறித்தும்;

14. கேத்தி பேரூராட்சிக்கு உட்பட்ட தேனயை கிராமத்தில் குடிநீர் தடுப்பு அணை அமைப்பது குறித்தும்;

15. கேத்தி பேரூராட்சிக்கு உட்பட்ட காமராஜ் நகர், குடிநீர் ஆதார தடுப்பணை அமைப்பது குறித்தும்;

16. கீழ்குந்தா பேரூராட்சியின் ஊசிமலை குடிநீர் ஆதாரம் கட்லாடா தடுப்பணை முதல் மஞ்சூர் பிரதான குடிநீர் தொட்டி வரை 3 கி.மீ. குடிநீர்க் குழாய் பாதை அமைத்தல் குறித்தும்;

17. கீழ்குந்தா பேரூராட்சி, அம்மகல்லு குடிநீர் ஆதாரம் முதல் மஞ்சூர் பிரதான குடிநீர் தொட்டி வரை மீதம் உள்ள 1 கீ.மீ. குடிநீர்க் குழாய் பாதை அமைப்பது குறித்தும்;

18. சோலூர் பேரூராட்சி, பதன்கோட் மந்து அருகில் தடுப்பணை கட்டி சோலூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு குடிநீர்க் குழாய் பாதை அமைப்பது குறித்தும்;

19. பிக்கட்டி பேரூராட்சி, எடக்காடு தலையட்டி கிராமத்தில் நீர் ஆதாரம் உட்புகும் தடுப்பணை கட்டி 2 குடிநீர்க் குழாய் அமைப்பது குறித்தும்;

20. நஞ்சநாடு ஊராட்சி, மேல் கௌஹட்டி கிராமத்திற்கு கோல்கிரின் பாம் பக்கத்தில் உள்ள தடுப்பு அணையை புதுப்பித்து 6 கி.மீ. குடிநீர்க் குழாய் பாதை அமைப்பது குறித்தும்;

21. மேல்குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரை கிராமத்தில் குடிநீர் தேவையை போக்க கேராகுந்து வராக பள்ளம் ஆற்று நீர் வீணாக செல்வதை தடுக்க தடுப்பணை கட்டி குடிநீர்க் குழாய் அமைப்பது குறித்தும்;

22. மேல்குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரை கிராமம் மஞ்சூரில் ஆரம்ப சுகாதார மையம் படுக்கை வசதியுடன் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

[திரு. ஆர். கணேஷ்] [2017 பிப்ரவரி 1

23. உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குந்தா தாலுகாவில் மஞ்சூரில் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைப்பது குறித்தும்;

24. உதகை அரசு பொது மருத்துவமனையில் ஆழ்துளை கிணறுடன் மோட்டார் பம்பு குடிநீர்க் குழாய்கள் அமைப்பது குறித்தும்;

25. உதகை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மஞ்சூர் அரசு பொது மருத்துவமனையில் X–RAY வசதி செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

***திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திண்டிவனம் அரசு மருத்துவமனையில் குறைந்த செலவில் முழு உடல் பரிசோதனை வசதி ஆவன செய்தல் குறித்தும்;

2. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஆவணிப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுவது குறித்தும்;

3. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட முருக்கேரியில் அரசு நெல் கொள்முதல் மற்றும் சேமிப்பு கிடங்கு நிலையம் அமைப்பது குறித்தும்;

4. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட நடுக்குப்பம், ஒமிப்பேர் மற்றும் கந்தாடு பகுதிகளில் சாகோ தொழிற்சாலை அமைத்தல் குறித்தும்;

5. புதியதாக ஏற்படுத்தியுள்ள மரக்காணம் வட்டத்திற்கென புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சார்நிலைக் கருவூலம் கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திருமதி பெ. சீத்தாபதி]

6. மரக்காணம் பகுதியில் தயாராகும் உப்பினை அரசே கொள்முதல் செய்து அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல் குறித்தும்;

7. திண்டிவனம் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சியிலும் உள்ள தொகுப்பு வீடுகளை இடித்துவிட்டு புதியதாக கட்டுதல் குறித்தும்;

8. மரக்காணம் வட்டத்தில் அனல் மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

9. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட இராயநல்லூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இடுகாடு மற்றும் சுடுகாட்டிற்குச் செல்ல போதிய பாதை வசதி இல்லாததினால் ஆதி திராவிட மக்களுக்கு சுடுகாடு பாதை அமைத்தல் குறித்தும்;

10. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட கடவம்பாக்கம் ஊராட்சியில் உள்ள ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவது குறித்தும்;

11. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதியதாக கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட பனையூர் ஊராட்சிக்கு புதியதாக அங்கன்வாடி கட்டடம் கட்டுவது குறித்தும்;

13. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் வட்டத்தில் புதியதாக அரசு பொது மருத்துவமனை அமைத்துத் தருவது குறித்தும்;

14. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணத்தை மையமாகக் கொண்டு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

15. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர், கீழ்புத்துப்பட்டு மற்றும் கந்தாடு ஊராட்சிகளை இரண்டாகப் பிரிப்பது குறித்தும்;

16. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஆவணிப்பூர் ஊராட்சியில் கால்நடை பட்டி அமைப்பது குறித்தும்;

[திருமதி பெ. சீத்தாபதி] [2017 பிப்ரவரி 1

17. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஆவணிப்பூரில் மாணவர்களின் நலன் கருதி கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டியது குறித்தும்;

18. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட பனையூர் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர்வாருதல் குறித்தும்;

19. விழுப்புரம் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் இணைக்கும் எல்லையான கடவம்பாக்கம்–வயலூர் நெற்குணம் ஊராட்சிகளை இணைக்கும் சாலையின் குறுக்கே செல்லும் ஆற்றின்மீது பாலம் அமைத்தல் குறித்தும்;

20. திண்டிவனம் தொகுதி, மானூர் ஊராட்சி, மன்னார்சாமி கோயில் அருகில் கட்டடப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் குடியிருப்பினை பழுதுநீக்கம் செய்வது குறித்தும்;

21. திண்டிவனம் நகரத்தில் அமைந்துள்ள நவாப் நகர், காந்தி நகர் பகுதிகளில் வெள்ள நீரை வெளியேற்ற வடிநீர் வாய்க்கால் அமைப்பது குறித்தும்;

22. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட ஒலக்கூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பாண்டி செல்லும் அனைத்து வாகனங்களின் பயண நேரத்தை குறைப்பது குறித்தும்;

23 திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட கடவம்பாக்கம் கிராமத்திற்கு திண்டிவனம்–சாரம்–ஒலக்கூர்–ஓங்கூர்–கம்பூர் அன்னம்பாக்கம் வழியாக அரசு பேருந்து இயக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. செஞ்சி சட்டமன்ற தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 15 அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

2. செஞ்சி–மேல்மலையனூர் வட்ட நியாய விலைக் கடைகளில் குடிமைப்பொருட்கள் முழுமையாக வழங்குவது குறித்தும்;

3. செஞ்சி அரசு பொது மருத்துவமனையை நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல் குறித்தும்;

4. செஞ்சி சட்டமன்ற தொகுதி, அனந்தபுரம் மற்றும் மேல்மலையனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை சுமார் 30 படுக்கை அறைகள் கொண்ட அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டியது குறித்தும்;

5. செஞ்சி சட்டமன்ற தொகுதி, நந்தன் வாய்க்கால் முழுவதும் கான்கிரீட் வாய்க்காலாக மாற்றி அமைக்கப்பட வேண்டியது குறித்தும்;

6. செஞ்சி தொகுதிக்கு உட்பட்ட சீயப்பூண்டி அணைக்கட்டினைச் சீரமைப்பது குறித்தும்;

7. செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொது பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளின் மதகுகளை கான்கிரீட் மதகுகளாக மாற்றி அமைக்க வேண்டியது குறித்தும்;

8. செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நந்தன் கால்வாய், சோ. குப்பம்–தேவதானம்பேட்டை ஊராட்சிப் பகுதியை இணைக்கின்ற இடத்தில் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியது குறித்தும்;

9. செஞ்சி தொகுதிக்கு உட்பட்ட செக்கடிக்குப்பம் அணைக்கட்டு சீரமைக்கப்பட வேண்டியது குறித்தும்;

10. மேல்மலையனூர் வட்டம், கடலி–மேலச்சேரி கிராமத்தில் அணை கட்டுவது குறித்தும்;

[திரு. கே.எஸ். மஸ்தான்] [2017 பிப்ரவரி 1

11. செஞ்சி, சங்கராபரணி மேகளவாய் அருகில் தடுப்பணை கட்ட வேண்டியது குறித்தும்;

12. செஞ்சி–மேல்மலையனூர்–ஆரணி–வேலூர் வழித்தடத்தில் திருப்பதி செல்ல புதிய பேருந்து இயக்க வேண்டியது குறித்தும்;

13. செஞ்சி பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்க வேண்டியது குறித்தும்;

14. செஞ்சி–சென்னை வழித்தடத்தில் விடுமுறை நாட்களில் அதிக பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

15. செஞ்சி–புதுவை, செஞ்சி–தஞ்சாவூர், செஞ்சி–வந்தவாசி, செஞ்சி–கும்பகோணம் ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டியது குறித்தும்;

16. செஞ்சிக்கோட்டையில் கம்பி வட ஊர்தி (ரோப்கார்), அகழியை தூர்வாருதல், சக்கரை குளம் மற்றும் செட்டிகுளத்தை தூர்வாரி படகு சவாரி ஏற்படுத்த வேண்டியது குறித்தும்;

17. செஞ்சிக்கோட்டையை ஆண்ட மாவீரன் ராஜா தேசிங்கு–தளபதி முகமத்கான் இருவருக்கும் நீலாம்பூண்டியில் அரசு சார்பில் நினைவு மணிமண்டபம் அமைக்க வேண்டியது குறித்தும்;

18. செஞ்சி நகரத்தில் உள்ள அருணாசலேஸ்வரர் குளம், நவாப் குளம், சக்கராபுரம் குளம், ஈஸ்வரன் கோயில் குளம் மற்றும் ஏரியைத் தூர்வாரி படகு குழாம் அமைத்தல் குறித்தும்;

19. செஞ்சி தொகுதியில் மாவீரன் ராஜா தேசிங்கிற்கு முழு உருவ சிலை அமைப்பது குறித்தும்;

20. செஞ்சி சட்டமன்ற தொகுதியில் புதிய சார் ஆட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

21. செஞ்சி நகரில் கூடுதலாக ஒரு குற்றவியல் நீதிமன்றம், ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் ஒரு மாவட்ட விரைவு நீதிமன்றம் அமைத்திட வேண்டியது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. கே.எஸ். மஸ்தான்]

22. வறட்சி காரணமாக விவசாயிகள் பெற்ற கூட்டுறவு வங்கிக் கடன்களை ரத்து செய்வதுடன் புதிய வங்கி கடன் வழங்குதல் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்குவது குறித்தும்;

23. செஞ்சியில் தரச்சான்று பெற்ற அரசு விதை பண்ணை அமைத்திட வேண்டியது குறித்தும்;

24. விவசாயிகளுக்கு அனைத்து வகையான நவீன உழவு இயந்திரங்களையும், குறைந்த வாடகைக் கட்டணத்தில் கிடைத்திட அரசே, நவீன வேளாண் இயந்திரங்கள் அடங்கிய வேளாண் பண்ணை அமைக்க வேண்டியது குறித்தும்;

25. விவசாயிகளின் நலன் கருதி செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி மற்றும் அவலூர்பேட்டை பகுதியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தானிய சேமிப்பு தளம் அமைத்திட வேண்டியது குறித்தும்;

26. மேல்மலையனூர், வளத்தி ஊராட்சியில் உள்ள நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு பயணியர் விடுதி அமைத்திட வேண்டியது குறித்தும்;

27. மேல்மலையனூர் ஏரி நீர்ப்பிடிப்பை அதிகப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் படகு குழாம் (Boating House) ஏற்படுத்த வேண்டியது குறித்தும்;

28. செஞ்சி, சிங்கவரம் ஸ்ரீ ரங்கநாதசுவாமிகள் ஆலயத்திற்கு வாகனங்கள் செல்ல இந்து அறநிலை துறையின்கீழ் சாலை வசதி ஏற்படுத்த வேண்டியது குறித்தும்;

29. அகில இந்திய அளவிலாள (IIT-JEE) நுழைவு தேர்வுகளுக்கு அரசு மேல்நிலை–உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் தயார்படுத்தும் டேன்எக்ஸெல் (TANEXCEL) என்ற புதிய திட்டத்தின்மூலம் கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை செஞ்சி தொகுதியைச் சேர்ந்த அரசு மேல்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்திட வேண்டியது குறித்தும்;

30. செஞ்சியில் புதிய நூலகம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும்;

[திரு. கே.எஸ். மஸ்தான்] [2017 பிப்ரவரி 1

31. செஞ்சி தொகுதியில் கால்நடை மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை வழங்கிட ஆவன செய்ய வேண்டியது குறித்தும்;

32. செஞ்சி தொகுதியில் கால்நடை மருத்துவமனைகளில் உள்ள 4 காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

**டாக்டர் இரா. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. மைலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் ஆம்புலன்ஸ் வசதியுடன் ஓர் அவசர சிகிச்சை மையமும், ஒரு தீயணைப்பு நிலையமும் அமைப்பது குறித்தும்;

2. மைலம் ஒன்றியம், மைலம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

3. மைலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், நெடிமொழியனூர் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனையும் அமைத்துக் கொடுப்பது குறித்தும்;

4. மைலம் ஒன்றியம், கீழையூர் மணியம்பட்டில் இருந்து கொங்கரப்பட்டு செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தருவது குறித்தும்;

5. வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமத்தில் பழுதடைந்து பயன்பாடு இல்லாத பால்வாடி கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்டி தருவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1][டாக்டர் இரா. மாசிலாமணி]

6. வல்லம் ஒன்றியம், சேர்விளாகம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட காந்தி நகர் பகுதியில் ஒரு திறந்தவெளி கிணறு வெட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தருவது குறித்தும்;

7. வல்லம் ஒன்றியம், தென்புத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஏரியில் உள்ள மதகினை பழுது நீக்கம் செய்வது குறித்தும்;

8. வல்லம் ஒன்றியம், கடுக்குப்பட்டு மேல்சித்தாமூர் செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டித் தருவது குறித்தும்;

9. வல்லம் ஒன்றியம், அவியூர் கிராமத்தில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறு வெட்டித் தருவது குறித்தும்;

10. வல்லம் ஒன்றியம், திருவெம்பட்டு கிராமத்தில் வேளாண்மை விற்பனை மையம் அமைத்துத் தருவது குறித்தும்;

11. மைலம் ஒன்றியம், நெடிமொழியனூர் கிராமத்தையும், வல்லம் ஒன்றியம், நெகனூர், புதூர் கிராமத்தையும் தனித்தனி பஞ்சாயத்தாக பிரிப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

**திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. கீழ்வேளூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் அமைப்பது குறித்தும்;

2. கீழ்வேளூர் ஒன்றியத்தில் வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

[திரு. உ. மதிவாணன்] [2017 பிப்ரவரி 1

3. கீழ்வேளூர் தொகுதி, ஆந்தக்குடி ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்தும்;

4. கீழ்வேளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சியில் நீர்தேக்க மேல்நிலைத் தொட்டி அமைப்பது குறித்தும்;

5. கீழ்வேளூர் ஒன்றியத்தில் கிள்ளிக்குடி ஊராட்சியில் உள்ள ஆற்றங்கரை பகுதியில் அகற்றப்பட்ட வீடுகளுக்கு மாற்று இடம் அளிப்பது குறித்தும்;

6. கீழையூர் ஒன்றியத்தில் காமேஸ்வரம் மற்றும் விழுந்தமாவடி ஊராட்சியில் மீன்பிடி கடல் பகுதியில் தூண்டில் வளைவுகள் அமைப்பது குறித்தும்;

7. கீழ்வேளூர் தொகுதி, செருதூர் வெள்ளையாற்றில் முகத்துவாரத்தைத் தூர் வாருதல் குறித்தும்;

8. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், காமேஸ்வரம் ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, நீர்த்தேக்கம் அமைப்பது பற்றி குறிப்பிடாதது குறித்தும்;

9. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழ்பிடாகை ஊராட்சி, சிந்தாமணி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்தும்;

10. கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஒன்றியம், வடுகச்சேரி மற்றும் வடிவூர் ஊராட்சிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

**திரு. த. மனோ தங்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

***திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சேலம் மாநகராட்சிக்குட்பட்ட செட்டிச்சாவடி பகுதியில் புதிய திடக் கழிவு மேலாண்மை நிலையம் அமைப்பது குறித்தும்;

2. சேலம் மாவட்டத்தில் ஜவுளிப் பூங்கா ஒன்று அமைப்பது குறித்தும்;

3. சேலம்–திருமணிமுத்தாறு சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைச் சீரமைத்து தூர்வாரிட வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

**திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தூத்துக்குடி மாநகராட்சியின் 3–வது வார்டு பகுதியான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் பகுதியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

2. தூத்துக்குடி மாநகராட்சியில் 2–வது வார்டு மாடன்குளம் மற்றும் 34–வது வார்டு P&T காலனியில் உள்ள உபரி நீர் வெளியேற மழைநீர் வடிகால் அமைப்பது குறித்தும்;

3. தூத்துக்குடி தொகுதியில் வீரநாயக்கன்தட்டு பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

4. தூத்துக்குடி தொகுதியில் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

[திருமதி பி. கீதா ஜீவன்] [2017 பிப்ரவரி 1

5. தூத்துக்குடி தொகுதியில் ஹவுசிங் போர்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் சீரமைப்பது குறித்தும்;

6. தூத்துக்குடி புறநகரில் வசிக்கும் மக்களின் நலனுக்காக பேருந்து அல்லது சிற்றுந்து வசதி செய்வது குறித்தும்;

7. தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் கட்டணக் கழிப்பிடங்களை இலவச கழிப்பிடங்களாக மாற்றுவது குறித்தும்;

8. தூத்துக்குடி தொகுதியில் உப்பாற்று ஓடையில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

9. தூத்துக்குடியில் உள்ள பக்கிள் ஓடையைத் தூர்வாரி, கழிவுநீரைச் சுத்திகரிக்க நிலையம் அமைப்பது குறித்தும்;

10. தூத்துக்குடி தொகுதியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

11. தூத்துக்குடி தொகுதியில் சிப்காட் வளாகத்திலுள்ள நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுப்பது குறித்தும்;

12. தூத்துக்குடி, கோரம்பள்ளம் பொதுப் பணித் துறை குளம் மற்றும் மதகுகளைத் தூர்வார நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

13. தூத்துக்குடி தொகுதி, நியாய விலைக் கடைகளில் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் குடிமைப் பொருட்கள் வழங்குவது குறித்தும்;

14. தூத்துக்குடியில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி நிலையத்தில் (தெர்மல்) பணிபுரிந்து வரும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவது மற்றும் அனைத்து சலுகைகளும் வழங்குவது குறித்தும்;

15. தூத்துக்குடி மாநகராட்சி 18–வது வார்டு விவேகானந்தர் காலனியில் உள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

16. மீனவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திருமதி பி. கீதா ஜீவன்]

17. உப்பளத் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கப்படுவது குறித்தும்;

18. உப்பளத் தொழிலுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கப்படுவது குறித்தும்;

19. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள அமைச்சுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்புவது குறித்தும்;

20. தூத்துக்குடி மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட 7 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவப் பணியாளர்களின் பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்தும்;

21. தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலக்காதபடி நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

22. தூத்துக்குடி மாநகராட்சியில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது குறித்தும்;

23. தூத்துக்குடி மாநகரில் பழைய பேருந்து நிலையத்தில் அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் மருந்துகளுக்கான இரவு நேரக் கடைகள் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

24. தூத்துக்குடி மாநகராட்சி 3–வது வார்டு ஹவுசிங் போர்டு மற்றும் 34–வது வார்டு மடத்தூர் பகுதிகளில் உள்ள நூலகங்கள் செயல்படுத்துவது குறித்தும்;

25. உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது குறித்தும்;

26. தூத்துக்குடி மாநகரத்தில் லாரி டெர்மினல் அமைக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. புவனகிரி அருகே வெள்ளாற்றில் தடுப்பணை கட்ட வேண்டியது குறித்தும்;

2. புவனகிரி நகரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியது குறித்தும்;

3. புவனகிரி தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் அமைக்க வேண்டியது குறித்தும்;

4. புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியது குறித்தும்;

5. புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு MRK கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை மேம்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் ஆறும், கடலும் சந்திக்கின்ற அனைத்து முகத்துவாரப் பகுதிகளை ஆழப்படுத்தித் தூர்வாருவது குறித்தும்;

2. திருவொற்றியூர் கடல் பகுதியில் அமைந்துள்ள தூண்டில் வளைவுகளில் ஏற்பட்டுள்ள சரிவுகளைச் சீரமைப்பது குறித்தும்;

3. திருவொற்றியூர் அரசு பொது மருத்துவமனையில் போதுமான பணியாளர்கள் நியமனம் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்குதல் குறித்தும்;

4. திருவொற்றியூரில் இருந்து இயக்கப்பட்ட தொலைதூர விரைவுப் பேருந்துகளை தொடர்ந்து இயக்க வேண்டுவது குறித்தும்;

5. திருவொற்றியூர் தொகுதியில் உள்ள நெடுஞ்சாலைகளில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

பிற்பகல் 12—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. பாளையங் கால்வாயில் சிமெண்ட் லைனிங் செய்வது குறித்தும்;

2. பாளையங் கால்வாய் நகரப் பகுதிகளில் சாக்கடைக் கழிவுகள் மற்றும் குப்பைகளை அகற்றுவது குறித்தும்;

[திரு. டி.பி.எம். மைதீன்கான் [2017 பிப்ரவரி 1

3. அண்ணா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல் குளத்தை நவீனப்படுத்துவது, நடைப் பயிற்சி பாதை அமைப்பது குறித்தும்;

4. அண்ணா விளையாட்டு மைதானத்தில் உள்ள மாணவர்கள் தங்கும் விடுதி விரிவாக்கம் செய்வது குறித்தும்;

5. மேலப்பாளையம் கால்நடை சந்தையை தூய்மையாக வைத்து அடிப்படை வசதிகளைச் செய்வது குறித்தும்;

6. ஒண்டிவீரன் நினைவிடத்தில் பூங்கா அமைப்பது குறித்தும்;

7. மாநகராட்சியில் உள்ள பூங்காக்களைச் சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்வது குறித்தும்;

8. பாளை மற்றும் மேலப்பாளையம் உழவர் சந்தையைச் சீரமைத்து விவசாயிகள், பயனாளிகள் பயன்பெற வசதிகள் செய்வது குறித்தும்;

9. மாநகராட்சி சாலைகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

10. அரியநாயகபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

11. அனைத்துப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

12. தென்காசி தொகுதி, சுரண்டையில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

13. தென்காசியில் இரட்டை குளம் கால்வாய்த் திட்டப் பணிகள் துவக்குவது குறித்தும்;

14. சங்கர் நகரில் மான் பூங்கா அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. எழும்பூர் தொகுதி, 107—வது வார்டில் பள்ளி தெருவில் உள்ள டோபிகானா சலவைத் தொழிலாளர்களுக்கு, தனித்தனி துணை மின் இணைப்பு தர வேண்டியது குறித்தும்;

2. எழும்பூர் தொகுதி, 104—வது வார்டில் எம்.எஸ். நகரில் வசிக்கும் பயனாளிகளுக்கும், 77—வது வார்டில் போகிபாளையம் மற்றும் கார்ப்பரேஷன் லைனில் வசிக்கும் பயனாளிகளுக்கும் மற்றும் சாஸ்திரி நகர் பயனாளிகளுக்கும் இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டுவது குறித்தும்;

3. எழும்பூர் தொகுதியில் உள்ள 78—வது வார்டில் சச்சிதானந்தம் இரண்டாவது தெருவிலும், 61—வது வார்டு வீராசாமி தெருவிலும், 61—வது வார்டு வீராசாமி தெருவில் மற்றும் அய்யாசாமி குடிசைப் பகுதியிலும் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நவீன குளிர்சாதன வசதிகளுடன்கூடிய சமூக நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

4. எழும்பூர் தொகுதி, 58—வது வார்டு, கண்ணப்பர் திடலில் மீன் விற்பனை அங்காடி கட்டுவது குறித்தும்;

5. எழும்பூர் தொகுதி, 58—வது வார்டு, அவதான பாப்பையா சாலையில் நவீன வசதிகளுடன்கூடிய மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

6. எழும்பூர் தொகுதி, 61—வது வார்டில் உள்ள வரதராஜபுரம் பகுதியை எழும்பூர் வட்டாட்சியரின் எல்லைக்குள் சேர்ப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. ஒட்டன்சத்திரம் தொகுதி, வேடசந்தூர் காவேரி மற்றும் நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அனைத்துப் பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;

2. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சி, கீரனூர் பேரூராட்சிக்கும் தனி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர் திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்தும்;

3. ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சி, பரப்பலாறு அணை அருகே ஒரு சமுதாயக் கிணறு அமைப்பது குறித்தும்;

4. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 3 இடங்களில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைப்பது குறித்தும்;

5. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

6. ஒட்டன்சத்திரம் தொகுதி, சண்முகநதி, அமராவதி ஆறுகளில் கலக்கும் ஆலைக் கழிவுகளை தடுத்து மாசற்ற குடிநீர் வழங்குவது குறித்தும்;

7. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

8. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் இயங்கிவரும் சத்யா நகர் நியாய விலைக் கடையிலிருந்து, லட்சுமிபுரத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடையும், 14–வது வார்டு தும்மிச்சம்பட்டியிலிருந்து மேற்படி அதே வார்டு வடக்குத் தெருவிற்கு நியாய விலைக் கடையை பிரித்தமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. அர. சக்கரபாணி]

9. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஐவ்வாதுபட்டி புதூரிலும், வேலம்பட்டியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள வேலூர் கிராமத்திலும் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

10. நியாய விலைக் கடைகளில் குடிமைப்பொருட்கள் முழுமையாகக் கிடைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

11. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம், கேதையுறம்பு ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

12. விவசாயிகளின் நலன்கருதி Commercial மின் இணைப்பு பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்கவும், 2009 ஆம் ஆண்டு சுயநிதித் திட்டத்தில் ரூ.25,000/– ரூ.50,000/– என பணம் செலுத்திய அனைவருக்கும் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

13. ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

14. தமிழகம் முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

15. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, தும்மிச்சம்பட்டி பிரிவு சி.எஸ்.ஐ. பள்ளி மற்றும் கிறிஸ்தவ தேவாலயம் அருகில் இயங்கிவரும் அரசு மதுபானக் கடையை அகற்றுவது குறித்தும்;

16. ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையம் ஊராட்சி, கள்ளிமந்தையம் சி.எஸ்.ஐ. தொடக்கப் பள்ளி, பட்டாளம்மன் கோயில், கிறிஸ்தவ தேவாலயம் அருகில் உள்ள அரசு மதுபானக் கடையை அகற்றுவது குறித்தும்;

17. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழனி, நரிக்கல்பட்டி வழியாக பெரிய மொட்டனூத்து, போதுபட்டி, தாளையூத்து, மடத்துக்குளம் வரையிலும் திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, தாளையூத்து வழியாக பொள்ளாச்சி வரையிலும் ஒட்டன்சத்திரம்—தாசரிபட்டி வழித்தடத்திலும் அரசுப் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2017 பிப்ரவரி 1

18. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி பள்ளி, கல்லூரி நேரங்களில் போதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

19. ஒட்டன்சத்திரம் பகுதியில் அரசு பேருந்து பணிமனை அமைப்பது குறித்தும்;

20. 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

21. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. ஒட்டன்சத்திரம் தொகுதி, வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

23. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொத்தயம் கிராமத்தில் நல்லதங்காள் அணை திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்றுவது குறித்தும்;

24. வரதமாநதி, சண்முகநதி, அமராவதி, நல்லதங்காள், நங்காஞ்சியாறு ஆகிய ஆறுகளை இணைப்பது குறித்தும்;

25. பழனியில் பாலாறு–பொருந்தலாறு இடது பிரதான கால்வாயைச் சீரமைத்து, சிலாப் லயனிங் மடைகள் மற்றும் பொருளூர் கரிசல் குளம், பாலப்பன்பட்டிபுதூர் கருங்குளம், மஞ்சநாயக்கன்பட்டி, காளிபட்டி குளம் ஆகிய குளங்களின் வாய்க்கால்களில் சிமென்ட் சிலாப் அமைப்பது குறித்தும்;

26. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மானூர், வில்வாதம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கிடையே சண்முகநதி ஆற்றில் பாலம் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும்;

27. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணையைத் தூர்வாருவது குறித்தும்;

28. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பரப்பலாறு அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் முத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், முத்து சமுத்திரம், காவேரியம்மாபட்டி குளம், ஒட்டடை குளம், பாப்பாகுளம், நடையன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாதுபட்டி குளம் ஆகிய குளங்களுக்குச் செல்கின்ற நீர் வீணாகாமல் இருக்க லைனிங்கில் சிமென்ட் கற்கள் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. அர. சக்கரபாணி]

29. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பரப்பலாறு அரசு உயர்நிலைப் பள்ளியை, வண்டிப் பாதையில் உள்ள கல்வித் துறைக்கு சொந்தமான இடத்தில் இடமாற்றம் செய்வது குறித்தும்;

30. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள கல்வி பயிலும் மாணவர்கள் பெற்ற கல்விக் கடனை இரத்து செய்வது குறித்தும்;

31. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசுப் பணியாளர் தேர்வுக்கு பயிலும் மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க உதவும் வகையில் அரசுப் பணியாளர் தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்தும்;

32. ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, புதிதாக கள்ளிமந்தையத்தைத் தனி வட்டமாக அமைப்பது குறித்தும்;

33. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு நிறுத்தம் செய்யப்பட்ட முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

34. ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

35. ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கைப் பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

36. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டு வருவது குறித்தும்;

37. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் காய்கனி அங்காடிக் கழிவுகளை கொட்டுவதற்கு குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

38. ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பன்றிகளால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டைத் தடுப்பது குறித்தும்;

39. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சின்னக்குளத்தைத் தூர்வாரி, பொழுதுபோக்குப் பூங்கா அமைப்பது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2017 பிப்ரவரி 1

40. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

41. ஒட்டன்சத்திரம் தொகுதியில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டியது குறித்தும்;

42. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராமப்புறச் சாலைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நட அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

43. தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பழுது நீக்கி பராமரித்தல் குறித்தும்;

44. ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு ஊராட்சி மாட்டுப்பட்டிக்காடு கிராமத்தில் வசிப்பிடமின்றி உள்ள மக்களுக்கு, அரசு இலவச வீடுகள் கட்டித் தருவதுடன் வன விலங்குகளிடமிருந்து மனித உயிர்களையும் விளைநிலங்களையும் பாதுகாப்பது குறித்தும்;

45. மாநில, மாவட்ட அளவில் விளையாட்டுத் துறையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்தும்;

46. இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஸ்கூட்டர், 40% குறைபாடு உள்ள அனைத்து நபர்களுக்கும் அரசு உதவித் தொகை வழங்குவது குறித்தும்;

47. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டி, மானூர், கோரிக்கடவு, தும்பலப்பட்டி மற்றும் அக்கரைப்பட்டி ஆகிய பகுதிகளில் அதிகளவில் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

48. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரிடப்படும் மருத்துவ குணம் கொண்ட கண்வல்லி கிழங்கு (Gloriosa Superba) விதைகளை அரசே கொள்முதல் செய்யவதோடு அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. அர. சக்கரபாணி]

49. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

50. ஒட்டன்சத்திரம் தொகுதியில், விவசாய விளைபொருட்களை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

51. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பயிர்களுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.25,000/– இழப்பீடு வழங்குவது குறித்தும்;

52. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு வேளாண் கல்லூரி அமைப்பது குறித்தும்;

53. ஒட்டன்சத்திரம் தொகுதி, அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் சுகாதார வளாகம் கட்டுவது குறித்தும்;

54. ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தையம், இடையகோட்டை, நரிக்கல்பட்டி மற்றும் மிடாப்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

55. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

56. ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எக்ஸ்ரே கருவி வழங்குவது மற்றும் போதுமான அவசர ஊர்தி வழங்குவது குறித்தும்;

57. ஒட்டன்சத்திரம் தொகுதி, தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை மற்றும் கீரனூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா பிரிவு அமைப்பது குறித்தும்;

58. ஒட்டன்சத்திரம் தொகுதி, கீரனூர் பேரூராட்சி, தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை மற்றும் கள்ளிமந்தையம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக நுட்புநர் (Lab Technician) பணியிடம் நிரப்புவது குறித்தும்;

[திரு. அர. சக்கரபாணி] [2017 பிப்ரவரி 1

59. ஒட்டன்சத்திரம் தொகுதியில், மிடாப்பாடி ஊராட்சி, வன்னியர்வலசு கிராமத்தில், தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் தங்கி பிரார்த்தனை செய்த புனித இடத்தை காந்தி நினைவு மண்டபமாகக் கட்டுவது குறித்தும்;

60. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியில் தாளையூற்று மற்றும் சின்ன தாளையூற்று நீர்வீழ்ச்சிகளை சுற்றுலாத்தலமாக மாற்றுவது குறித்தும்;

61. ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொழுமங்கொண்டான், சந்தன்செட்டி வலசு, நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யும் பட்டுச் சேலையினை அரசே கொள்முதல் செய்து, அரசு விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;

62. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய்யும் மல்பரியை திண்டுக்கல் மாவட்டத்திலேயே விற்பனை செய்ய அரசு கொள்முதல் விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;

63. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி கிராமத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்து, அவரது உருவம் பொறித்த தபால் தலை வெளியிட்டும், அவரது வீர வாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்வது குறித்தும்;

64. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பால் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்தும்;

65. விவசாயிகள் கால்நடையின்மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தையே நம்பி இருப்பதால், கால்நடைகளுக்கான உலர் தீவனம், கலப்புத் தீவனத்தை ஆவின் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கின்ற 21 திருத்தங்களை நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. துறைமுகம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாக அன்னை சத்யாநகர், பல்லவன் நகர் போன்ற இடங்களில் போதிய குடிநீர் வசதி செய்து தருவது குறித்தும்;

2. துறைமுகம் தொகுதியிலுள்ள மாநகராட்சி மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களும், தேவையான மருந்துகளும் இருக்கும் வசதியை ஏற்படுத்தித் தருவது குறித்தும்;

3. துறைமுகம் தொகுதியிலுள்ள திருவள்ளுவர் பேருந்து நிலையத்தையும், பிராட்வே பேருந்து நிலையத்தையும் நவீன பேருந்து நிறுத்துமிடமாக மாற்றுவது குறித்தும்;

4. துறைமுகம் தொகுதியிலுள்ள ஜட்காபுரம், சத்தியவாணிமுத்து நகர் பகுதிகளில் அமைந்துள்ள கழிவு நீரேற்று நிலையத்தைப் புதுப்பித்துத் தருவது குறித்தும்;

5. துறைமுகம் தொகுதியிலுள்ள சத்தியவாணிமுத்துநகர், பல்லவன் நகர் மற்றும் காந்திநகர் பகுதிகளுக்கு மின்சாரம், தெருவிளக்கு கழிப்பறை வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருவது குறித்தும்;

6. சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாற்று இடத்தில் அமைப்பது குறித்தும்;

7. துறைமுகம் தொகுதியிலுள்ள அனைத்துச் சாலைகளிலும் L.E.D. விளக்குகள் அமைப்பது குறித்தும்;

8. துறைமுகம் தொகுதி, 54—வது வட்டத்தில் உள்ள மாநகராட்சி தாய்—சேய் நல மருத்துவமனையைப் புதுப்பிப்பது குறித்தும்;

9. துறைமுகம் தொகுதி, அனைத்து வட்டங்களிலும் ஆவின் பால் பூத் மையங்கள் அமைப்பது குறித்தும்;

[திரு. பி.கே. சேகர்பாபு] [2017 பிப்ரவரி 1

10. துறைமுகம் தொகுதியிலுள்ள வ.உ.சி. சாலையில் மழைநீர், பக்கிங்காம் கால்வாயில் சென்றடைவதற்கு பூமிக்கடியிலுள்ள பாக்ஸ் வடிவிலான கல்வெட்டுகளைச் சீர்படுத்துவது குறித்தும்;

11. துறைமுகம் தொகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாயில் மழை நேரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைப்பது குறித்தும்;

12. துறைமுகம் தொகுதியிலுள்ள பொதுக் கழிப்பிடங்களை மேம்படுத்துவது குறித்தும்;

13. துறைமுகம் தொகுதி முழுவதும் கொசுக்களை ஒழித்து சுகாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;

14. துறைமுகம் தொகுதியிலுள்ள அனைத்து மசூதிகளிலும் தொழுகை நேரத்தில் போக்குவரத்தினை முறைப்படுத்துவது குறித்தும்;

15. துறைமுகம் தொகுதியிலுள்ள ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு போதிய வசதி ஏற்படுத்துவதுடன் போக்குவரத்தினை முறைப்படுத்துவது குறித்தும்;

16. துறைமுகம் தொகுதி, மாநகராட்சி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் நியமிப்பது குறித்தும்;

17. துறைமுகம் தொகுதியிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்துப் பூங்காக்களையும் புதுப்பிப்பது குறித்தும்;

18. துறைமுகம் தொகுதியில் பழைய மின்மாற்றிகளை நவீன மின்மாற்றிகளாக அமைப்பது குறித்தும்;

19. துறைமுகம் தொகுதி 60–வது வட்டத்தில் உள்ள அன்னை சத்யா நகர் பகுதியில் காவல் உதவி மையம் அமைப்பது குறித்தும்;

20. துறைமுகம் தொகுதியில் C–5 காவல் நிலையத்தைச் சீரமைப்பது குறித்தும்;

21. துறைமுகம் தொகுதியிலுள்ள அம்மன் கோவில் தெரு, அண்ணா பிள்ளை தெரு மற்றும் ஆதியப்பா தெருக்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் சீர்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன் அவர்கள்.

**திரு. சௌ. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. செங்கம் நகரில் புதிய போக்குவரத்து காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

2. மேல் செங்கத்தில் மத்திய, மாநில பண்ணை வேளாண்மை பல்கலைக்கழகம் அமைப்பது குறித்தும்;

3. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் செங்கம் தொகுதி நீப்பத்துறையை மையமாகக் கொண்டு புதிய திட்டம் அமைப்பது குறித்தும்;

4. ஜவ்வாது மலைக்கு பரமனந்தல், மேல்பட்டு மற்றும் புலியூர் வழியாகப் பேருந்து வசதி செய்வது குறித்தும்;

5. குப்பனத்தம் அணையில் இருந்து பரமனந்தல், குயிலம் போன்ற ஊராட்சிகளுக்கு பாசனக் கால்வாய் அமைப்பது குறித்தும்;

6. செங்கம் தொகுதி, தென்பெண்ணையாறு, செய்யாறு ஆகிய இரண்டு ஆறுகளையும் இணைப்பது மற்றும் செய்யாற்றின் ஓரம் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

7. தாணிப்பாடி அரசு மருத்துவமனைக்கு புதிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை நியமிக்க வேண்டியது குறித்தும்;

8. செங்கம் அரசு மருத்துவமனைக்கு புதிய அவசர ஊர்தி வழங்க வேண்டுவது குறித்தும்;

9. செங்கம் நகரில் உள்ள அருள்மிகு அறும்பாம்பிகை நிதிபேஸ்வர் ஆலயத்தினைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வது குறித்தும்;

[திரு. மு.பெ. கிரி] [2017 பிப்ரவரி 1

10. ஜவ்வாது மலையை புதிய தனி வட்டமாக அமைக்க வேண்டியது குறித்தும்;

11. செங்கம் நகரில் நிலுவையில் உள்ள பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்துவது குறித்தும்;

12. ஜவ்வாது மலை சாலை–செங்கம் பரமனந்தல் மலைச்சாலையில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

13. செங்கம் தொகுதியில் பெரிய கொளாப்பாடி மற்றும் மேல்பெண்ணாத்தூர் பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்தும்;

14. செங்கம் வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

15. செங்கம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது மற்றும் தண்டராம்பட்டில் புதிய நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

16. செங்கம் நகரில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் புதிய பயணியர் இல்லம் கட்ட வேண்டியது குறித்தும்;

17. செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும் தண்டராம்பட்டில் புதிய நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

18. செங்கம் கிளைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்து புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. ப. ஆடலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையை தனி தாலுகாவாக அறிவிப்பது குறித்தும்;

2. திருத்துறைப்பூண்டி தொகுதியில் நீர்நிலைகளைத் தூர்வாருதல் குறித்தும்;

3. திருத்துறைப்பூண்டி தொகுதி, இடையூர் ஊராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

4. திருத்துறைப்பூண்டி தொகுதியில் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கும் ஆலை அமைப்பது குறித்தும்;

5. திருத்துறைப்பூண்டி தொகுதியில் பெருகவாழ்ந்தான் ஊராட்சியில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;

6. திருத்துறைப்பூண்டி தொகுதியில் கொத்தமங்கலம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

2. தமிழக விவசாயிகளின் நலனைக் கருதி, அனைத்து வங்கிகளிலும் கடன் பெற்றுள்ள விவசாயிகளின் கடன்களை தமிழக அரசு முழுவதுமாக இரத்து செய்திட வேண்டியும், அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் புதிய கடன் உதவி வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருவள்ளூர் தொகுதி, மாவட்டத்தின் தலைநகராக உள்ளதால் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவது குறித்தும்;

2. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பூண்டியில் சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் பாலம் அருகில் ஒரு மேம்பாலம் அமைத்திட வேண்டுவது குறித்தும்;

3. திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூரிலிருந்து ரயிலடி வரையிலும், பேரம்பாக்கத்திலிருந்து திருவள்ளூர் வரையிலுள்ள வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

4. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பட்டறை பெரும்புதூரில் 250 KVA துணை மின் நிலையம் ஏற்படுத்துவது குறித்தும்;

5. திருவள்ளூரில் மாவட்ட பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

6. திருவள்ளூர் தொகுதியில் அனைத்து நீர்நிலைகளையும் தூர்வாருதல் குறித்தும்;

7. திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் வெள்ளியூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் பயன்பாட்டில் உள்ள குடிநீர்க் குழாய்களை உடனடியாக சீர்செய்து குடிநீர் வழங்குவது குறித்தும்;

8. திருவள்ளூர் தொகுதி, பூண்டி நீர்த்தேக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் காக்களூர் ஏரியில் படகுக் குழாம் அமைத்துத் தருவது குறித்தும்;

9. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் சார்ந்த, திருவாலங்காட்டில் அமைந்துள்ள அருள்மிகு வடாரண்ய ஈஸ்வரர் கோயிலுக்குச் செல்ல போக்குவரத்தை அதிகரிப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. வி.ஜி. ராஜேந்திரன்]

10. திருவள்ளூர் தொகுதியில், கோயம்பேடு முதல் திருத்தணி (வழி–திருவள்ளூர்), பூந்தமல்லி முதல் கனகம்மாசத்திரம், பூந்தமல்லி முதல் திருவள்ளூர் ஆகிய வழித்தடங்களில் மாநகரப் பேருந்துகளை இயக்க வேண்டியது குறித்தும்;

11. திருவள்ளூர் நகராட்சியை சிறப்புநிலை நகராட்சியாக மாற்றியமைப்பது குறித்தும்;

12. திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் ஒன்றியம், முத்துக்கொண்டாபுரம்–கூளூர் இடையே ஒரு தடுப்பணை கட்டவும் (கொசஸ்தலை ஆற்றின்) சத்தரை–கொண்டஞ்சேரி கூவம் ஆற்றின் இடையே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

13. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி 40 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

**திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. திருவெறும்பூர் தொகுதியில் தாலுகா நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

2. திருவெறும்பூரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துவது குறித்தும்;

[திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி] [2017 பிப்ரவரி 1

3. திருவெறும்பூர் தொகுதி முழுவதும் பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

4. திருவெறும்பூர் உட்பட, திருச்சி மாநகராட்சியோடு புதியதாக இணைக்கப்பட்டுள்ள 5—வது வார்டு பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டியது குறித்தும்;

5. திருவெறும்பூர் தொகுதியில் சுகாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும்;

6. திருவெறும்பூர் புறநகர் பகுதிகளில் பேருந்து வசதி அல்லது சிற்றுந்து வசதி செய்வது குறித்தும்;

7. திருவெறும்பூர் தொகுதியில் குடிநீர் வசதி செய்து தருவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள்.

***திரு. கு.க. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட கூவம் நதியின் முகத்துவாரத்திலிருந்து சேத்துப்பட்டு ரெயில்வே மேம்பாலம் வரை பசுமை மீட்புத் திட்டத்தை விரைவில் துவங்குவது குறித்தும்;

2. ஆயிரம் விளக்கு தொகுதியில் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்வது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு 2016 ஆம் ஆண்டு விவசாயிகள் வழங்கிய கரும்புக்கு நிலுவைத் தொகையை வழங்குவது குறித்தும்;

2. அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

3. பொது விநியோகத் திட்டத்திற்காக சேமிப்புக் கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைக்கு எடுத்துச் செல்லும் சரக்குந்துகளின் ஒப்பந்தமுறையை மீண்டும் கடைபிடிக்க வேண்டியது குறித்தும்;

4 மடத்துக்குளம் தொகுதி, புதிய குடிநீர்த் திட்டப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டியது குறித்தும்;

5. திருப்பூர் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து உடுமலையை தனி கல்வி மாவட்டமாக அறிவித்தல் குறித்தும்;

6. ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் 10 ஏக்கர் பரப்பில் ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

7. மடத்துக்குளம் தொகுதியில் உள்ள அமராவதி மற்றும் திருமூர்த்தி அணைகளைத் தூர்வாருதல் குறித்தும்;

8. திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் தேவையான இடத்தில் தடுப்பணை கட்டுதல் குறித்தும்;

9. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பது மற்றும் மலைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்த அறிவிப்புகள் இல்லாதது குறித்தும்;

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்][2017 பிப்ரவரி 1

10. தமிழகத்தில் விவசாயிகள் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் பெற்ற கடன்களை முழுமையாக இரத்து செய்வது குறித்தும்;

11. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட முதியோர்களின் ஓய்வூதியத்தை முறையாக வழங்குதல் குறித்தும்;

12. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பணிக்கான சம்பளம் வாரம் ஒரு முறை வழங்க வேண்டியது குறித்தும்;

13. உடுமலை நகராட்சிப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள கணக்கம்பாளையம் ஊராட்சி, பெரியகோட்டை ஊராட்சி, போடிபட்டி ஊராட்சி, சின்னவீரம்பட்டி ஊராட்சி, குறிஞ்சேரி ஊராட்சிகளை உடுமலை நகராட்சியுடன் இணைப்பது குறித்தும்;

14. ஒவ்வொரு பேரூராட்சிகள், ஊராட்சிகளில் குறைந்தபட்சம் ஒரு சமுதாயக் கூடம் அமைப்பது குறித்தும்;

15 மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

16. மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:



2017 பிப்ரவரி 1] [திரு. இ. கருணாநிதி]

"1. பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட பம்மல் நகராட்சி, அனகாபுத்தூர் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி மற்றும் பொழிச்சலூர் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும்;

2. பல்லாவரம் தொகுதி, கீழ்க்கட்டளை ஏரி, ஜமீன் பல்லாவரம் ஏரி, திருநீர்மலை பெரிய ஏரி ஆகியவை தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு நடைபாதைகள் அமைக்கும் திட்டம் குறித்தும்;

3. பல்லாவரம் தொகுதியில் அனகாபுத்தூர், பொழிச்சலூர் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளுக்கு மாநகர குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவது குறித்தும்;

4. கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தினை பல்லாவரம் நகராட்சிப் பகுதிக்கும் விரிவாக்கம் செய்வது குறித்தும்;

5. பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர், பொழிச்சலூர் மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் அடையாறு ஆற்றின் ஓரம் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் குறித்தும்;

6. பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூர் நகராட்சியில் பெண்களுக்குத் தனியாக அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்குவது குறித்தும்;

7. பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியில் அடையாறு ஆற்றின் குறுக்கே கெருகம்பாக்கம் வழியாக போரூர், பூந்தமல்லி செல்வதற்கு பொதுப் பணித் துறையின்மூலம் பாலம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

8. பல்லாவரம் தொகுதி, பொதுமக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க குரோம்பேட்டை, வைஷ்ணவ கல்லூரி, இரயில்வே கேட் (LC 26), இரு சக்கர வாகனம் செல்லும் வகையில் சுரங்கப்பாதை அமைப்பது குறித்தும்;

9. பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை, வைஷ்ணவ கல்லூரி சிக்னலில் பொதுமக்கள் GST சாலையைக் கடக்க வசதியாக நகரும் படிக்கட்டுகளுடன் நடை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

[திரு. இ. கருணாநிதி] [2017 பிப்ரவரி 1

10. பல்லாவரம் தொகுதி, குரோம்பேட்டை குமரன்குன்றம் முருகன் கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய வசதியாக மலைமீது செல்ல சாலை அமைப்பது குறித்தும்;

11. பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சியில் மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான கல்குவாரியை மீண்டும் துவக்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. பீளமேடு ரங்கவிலாஸ் ஆலை அவினாசி சாலையிலிருந்து அண்ணா நகர் வழியாகச் செல்லும் திட்டச் சாலையின் மேற்குப் பகுதி நீர்வழித்தடத்தின் கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு மாற்று வீடுகள் வழங்குவது குறித்தும்;

2. பீளமேடு, நவ இந்திய திட்ட சாலையில் வசித்து வரும் குடிசைப் பகுதி மக்களுக்கு மாற்று வீடுகள் தருவது குறித்தும்;

3. சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஏரிமேடு, மதுரை வீரன் திட்டு, குளத்து வாய்க்கால் பகுதியில் நீண்ட காலமாக வசித்து வரும் ஏழை மக்களுக்கு இலவசப் பட்டா வழங்குவது குறித்தும்;

4. கோவை, சித்தாபுதூர் தனலட்சுமி நகர் மக்களுக்கு இலவசப் பட்டா வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. அருப்புக்கோட்டை தொகுதியில், தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெறும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும்—மழைக்காலம் மற்றும் மின்தடை நேரங்களில் நீரேற்று நிலையங்களில் ஜெனரேட்டர் அமைக்கவோ அல்லது வாடகை அடிப்படையிலோ பயன்படுத்திக்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உத்தரவிடுதல் குறித்தும்;

2. அருப்புக்கோட்டை தொகுதியில், அருப்புக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகத்திற்கு, “சாயல்குடி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திலிருந்து” உபரியாக உள்ள நீரினை வழங்குவது குறித்தும்;

3. அருப்புக்கோட்டை தொகுதியில் தனியே தாமிரபரணி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் அமைக்க ஆவன செய்வது குறித்தும்;

4. அருப்புக்கோட்டை தொகுதியில் கோல்வார்பட்டி அணையிலிருந்து கோல்வார்பட்டி கண்மாய்க்கு பிரிவு வாய்க்கால் அமைப்பது குறித்தும்;

5. அருப்புக்கோட்டை தொகுதியில் அருப்புக்கோட்டை ஒன்றியம், குறிஞ்சாக்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, விருதுநகர் கல்வி மாவட்டம், விருதுநகர் ஒன்றியம், பொம்மையாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகியவற்றை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

6. அருப்புக்கோட்டை தொகுதி, சாத்தூர் ஒன்றியம், போத்திரெட்டிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

**திரு. கு. இராதாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. விக்கிரவாண்டி பேரூராட்சியில் ஒரு இலட்சம் லிட்டர் குடிநீர் நீர்தேக்கத் தொட்டி அமைத்தல் குறித்தும்;

2. விக்கிரவாண்டி பெரிய ஏரியைத் தூர்வாரி, வேலிகாத்தான் செடிகளை அழித்தல் குறித்தும்;

3. விக்கிரவாண்டி பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

4. கொள்ளிடம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் (Phase II) நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

5. விக்கிரவாண்டியிலிருந்து மேல்மலையனூர் செல்ல அரசுப் பேருந்து இயக்குவது குறித்தும்;

6. விக்கிரவாண்டியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

7. விக்கிரவாண்டி தொகுதி, காணை ஒன்றியத்தில் பனமலை ஏரிக்கு நீர்வரத்து வரும் நந்தன் கால்வாய் செப்பனிடும் திட்டம் குறித்தும்;

8. விக்கிரவாண்டி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருவது குறித்தும்;

9. மூங்கில்பட்டு ஊராட்சியில் இடுகாட்டுப் பாதை அமைப்பது குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. கு. இராதாமணி]

10. ஆரியூர் ஊராட்சி, சாணிமேடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி புதிதாக அமைத்தல் குறித்தும்;

11. கக்கனூர் ஊராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது குறித்தும்;

12. சோழாம்பூண்டி ஊராட்சி, கோலியனூர் ஒன்றியம், தென்னமாதேவி ஊராட்சி, பூத்தமேடு கிராமத்தில் குடிநீர் ஆதாரத்திற்கு திறந்தவெளிக் கிணறு அமைத்தல் குறித்தும்;

13. ஆலாத்தூர் ஊராட்சி, புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல் குறித்தும்;

14. திருவாமாத்தூர் ஊராட்சி, ஏரிக்கரையின்மீது வயல்வெளி சாலை அமைத்தல் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சங்கராபுரம் தொகுதி, பாப்பாத்திமுலை கிராமத்தின் குறுக்கே ஓடும் ஆற்றில் மேம்பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்தும்;

2. சங்கராபுரம் தொகுதி, மோட்டாம்பட்டி–கூடலூர் ஆற்றின் குறுக்கிலும், கல்படை ஆற்றின் குறுக்கிலும், தொரடிபட்டு ஆற்றின் குறுக்கிலும் மேம்பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

[திரு. தா. உதயசூரியன்] [2017 பிப்ரவரி 1

3. சங்கராபுரம் தொகுதி, அடுத்த வாய்நத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

4. சின்னசேலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு உட்பட்ட சின்னசேலம் அண்ணாநகர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

5. சங்கராபுரம் தொகுதி, எடுத்தவாய்நத்தம், அம்பேத்கர் காலனியில் பகுதி நேர நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

6. சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் கடுக்காய் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்தும்;

7. சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கல்லாநத்தம் அருகே உள்ள அடிபெருமாள் கோயிலுக்கும், கோயம்புத்துறை கோயிலுக்கும் பக்தர்கள் சென்றுவர வனத் துறை மூலமாக தார்ச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

8. சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலை பழங்குடியினர் மக்கள் விவசாயம் செய்யும் நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

9. சங்கராபுரம் தொகுதி, மாதவச்சேரி ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

10. சங்கராபுரம் தொகுதி, சின்ன சேலம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தையும், சங்கராபுரம் விளையாட்டு மைதானத்தையும் செம்மைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

11. கள்ளக்குறிச்சியில் செயல்படும் கிளை சிறைச்சாலையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

12. சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;



2017 பிப்ரவரி 1] [திரு. தா. உதயசூரியன்]

13. சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், மோகூர் ஊராட்சியில் உள்ள நத்தமேடு கிராமத்தில் கிணறு அமைத்து குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

14. சங்கராபுரம் தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட பரிகம், க. செல்லம்பட்டு ஊராட்சியில் திறந்தவெளிக் கிணறு அமைத்து குழாய் மூலமாகக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

15. சங்கராபுரம் தொகுதி, சங்கராபுரம், சின்னசேலம் வடக்கனந்தல் ஆகிய பேரூராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்களை விரிவுபடுத்திட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

16. சங்கராபுரம் தொகுதி, பூட்டை ஊராட்சிக்குட்பட்ட பாவளம் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

17. கள்ளக்குறிச்சிக்கு புதிய பேருந்து நிலையத்தை கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்தும்;

18. சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலை, கிளாக்காடு என்ற இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தா. உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. அழகியபாண்டியபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றுவது குறித்தும்;

2. கன்னியாகுமரி தொகுதியில் உள்ள 300–க்கும் மேற்பட்ட குளங்கள் மற்றும் பேச்சிப்பாறை அணையைத் தூர்வாருதல் குறித்தும்;

[திரு. எஸ். ஆஸ்டின்] [2017 பிப்ரவரி 1

3. N.P. சாலை, அனந்தனார் சானல், தோவாளை சானல், அத்திக்கடை சானல் மற்றும் சம்பக்குளம் சானல்களை கடைமடைப் பகுதி வரை தூர்வாருதல் குறித்தும்;

4. கன்னியாகுமரி இரட்சகர் தெருவில் சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தும் கழிவு நீர்க் குட்டைக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஏற்படுத்துவது குறித்தும்;

5. கீரிப்பாறை பேருந்து நிலையத்தைச் சீரமைப்பது குறித்தும்;

6. பெரியகாடு மற்றும் கோவளம் மீனவர் கிராமத்தில் உள்ள தூண்டில் வளைவை நீட்டிப்பது குறித்தும்;

7. கன்னியாகுமரி அழகியநாயகி தெருவில் புதிய தூண்டில் வளைவு அமைப்பது குறித்தும்;

8. பள்ளம் சங்கு துறை கடற்கரைச் சாலையில் பழுதாகி போக்குவரத்து இரத்து செய்யப்பட்ட பாலத்தைச் சீரமைப்பது குறித்தும்;

9. கன்னியாகுமரி சர்வதேச சுற்றுலாத் தலத்தை தரம் உயர்த்தும் வகையில் மேம்பாடு செய்வது குறித்தும்;

10. வட்டக்கோட்டை, மணக்குடி, சொத்தவிளை, சங்கு துறை ஆகிய கடற்கரை சுற்றுலா தலங்களையும் காளிகேசம், வட்டப்பாறை போன்ற இயற்கை சுற்றுலா தலங்களையும் மேம்பாடு செய்து புதிய சுற்றுலா தலங்களாக உருவாக்குவது குறித்தும்;

11. மைலாடி, காமராஜ் நகரில் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்கும் வகையில் வடிகால் அமைப்பது குறித்தும்;

12. கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

“1. தாம்பரம் பெருநகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. செம்பாக்கம் நகராட்சி, மாடம்பாக்கம் பேரூராட்சி, சிட்லபாக்கம் பேரூராட்சி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, பெருங்களத்தூர் பேரூராட்சி மற்றும் முடிச்சூர் ஊராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவது குறித்தும்;

3. தாம்பரம் கிழக்கையும், மேற்கையும் இணைக்கும்படியாக நடைபாதை மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

4. தாம்பரம் பகுதியில் புதைவட மின்சார கேபிள்கள் பொருத்துவது குறித்தும்;

5. சேலையூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

6. மேற்கு தாம்பரம் மற்றும் கிழக்கு தாம்பரம் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தருவது குறித்தும்;

7. தாம்பரம் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரைகள் அமைத்து பராமரிப்பது குறித்தும்;

8. கன்னடர் பாளையத்தில் உள்ள குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றுவது குறித்தும்;

9. மாடம்பாக்கம், சிட்லபாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்கரணை பேரூராட்சி மற்றும் செம்பாக்கம் நகராட்சி மற்றும் தாம்பரம் பெருநகராட்சிப் பகுதிகளுக்கு மெட்ரோ குடிநீர் வசதி செய்து தருவது குறித்தும்;

[திரு. எஸ்.ஆர். இராஜா] [2017 பிப்ரவரி 1

10. தாம்பரம் பெருநகராட்சிப் பகுதியில் நீச்சல் குளம் அமைப்பது குறித்தும்;

11. அகரம் பஞ்சாயத்து, அன்னை சத்யா நகர் பகுதியில் அகரம் தென் ஓடையின் மீது பாலம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கொடுத்த 13 திருத்தங்களையும், கொறடா திரு. சக்கரபாணி அவர்கள் கொடுத்த 65 திருத்தங்களையும், பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்ட தாங்கள் நான் கொடுத்த 6 திருத்தங்களில் நான்கை நீக்கி இரண்டை எடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

I move the following amendment to the Motion of Thanks for the Governor's Address—

"Add at the end, the following:

but regret to note that no mention is made about

1. As part of the goal of 'a functional toilet per house', a new scheme for the monitoring and maintenance of all public toilets by a committee comprising of local government officials as well as residents be established where public toilets exist or will be built;

2. The schemes to improve the employability of graduates, the Government will undertake a review with regard to—

i. The projected job opportunities likely to arise from the growth of the economy over the next decade; and

ii. The capacity of all existing institutions providing post–higher secondary education in the State to generate graduates with the relevant skills to fill these projected job opportunities."



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

**திரு. ஒய். பிரகாஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சாத்தனூர் மற்றும் கோவிலடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

2. வடவாற்றில் சக்கரசாமந்தம், வெண்ணாற்றில் ஒரத்தூர், குடமுருட்டி ஆற்றில் கண்டியூர், கொள்ளிடம் ஆற்றில் அணைக்குடி மற்றும் காவேரி ஆற்றில் சாத்தனூர் அருகே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

3. கல்லணைக் கால்வாய் கல்விராயன் பேட்டை அருகே மற்றும் வெட்டாற்றில் காட்டுக்கோட்டை, நாகத்தி தடுப்பணை கட்டுவது குறித்தும்;

4. புதிய கட்டளை மேட்டு வாய்க்காலில் பாசனம் பெறும் ஏரிகள் மற்றும் உய்யக்கொண்டான் விஸ்தரிப்பு வாய்க்காலில் பாசனம் பெறும் ஏரிகளை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்தி சீரமைப்பு செய்வது குறித்தும்;

5. அக்கினி ஆறு கோட்டத்தில் உள்ள ஏரிகள் மற்றும் கல்லணைக் கால்வாய்ப் பாசனத்தில் 6 ஏரிகளை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்தி சீரமைப்பு செய்வது குறித்தும்;

6. கள்ளப்பெரமூர் ஏரி மற்றும் அள்ளூர் ஏரியை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்தி சீரமைப்பு செய்வது குறித்தும்;

[திரு. துரை. சந்திரசேகரன்] [2017 பிப்ரவரி 1

7. திருவையாறு தமிழிசை மன்றத்திற்கு மானியம் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

**திரு. மு.பெ. கிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர், அவருடைய தீர்மானத்தை முன்மொழியும்போது ரொம்ப ரொம்பப் பணிவு காண்பித்தார். அவர் பால பருவத்தில் பள்ளியில் படிக்கும்போது உள்ள பணிவை இப்பொழுது காண்பித்தார். பணிவுக்கே பணிவு காட்டும் என்னையும் மிஞ்சிவிட்டார் திரு. புகழேந்தி அவர்கள். *(சிரிப்பு)* ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் அப்படியே தொடர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவைக் காட்டி சோறூட்டி, வாழ்ந்த நிலத்தைக் காட்டி சீராட்டி, பிறந்த இனத்தைக் காட்டி பாராட்டி, அஞ்சாத நன்னெறிகளோடு துணிவு எனும் தேரோட்டி, பொங்குமணி மார்பெங்கே? பொரு தடக்கை வாளெங்கே? புறப்படடா என் மகனே, எரியட்டும் இனப் பகை, முறியட்டும் அவர்தம் மூடத்தனம் என்றே அறைகூவி அழைத்து, ரத்தத்திலும், சித்தத்திலும், வீரச் செறிவூட்டிய வித்தகத் தலைவி எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கண்களில் கனவாய் மலர்ந்து, கவிதையின் நயமாய் மிளிர்ந்து, உதிரத்தின் சூடாய் திகழ்ந்து, உணர்ச்சிகளின் சுடராய் ஒளிர்ந்து, தமிழ் மொழியை, தமிழ் மக்களை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழ் பாரம்பரியத்தை, தமிழர்தம் உரிமைகளை



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

காத்தருளிய கலைவாணி, தமிழ் மண்ணுக்கு புத்துயிரூட்டிய புதுமைப் பெண்ணரசி புண்ணியத் தாய் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

சோலைகளின் குளிர்ச்சியாய் ஏழைகளின் இதயத்தில் நிறைந்து, சாதி மத பேதங்களைக் கடந்து அவர்படும் துன்பமெல்லாம் களைந்து, ஒடுக்கப்பட்ட மக்களைக் கரையேற்றிய கண்கண்ட தெய்வம். *(மேசையைத் தட்டும் ஒலி)* தடுக்கப்பட்ட நீதிகளை தமிழர்க்குப் பெற்றுத் தந்த காவல் தெய்வம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *12–30*

தலைநிமிர்ந்த தமிழ் இனத்தின் உரிமைக் குரலாய் ஒலித்த ஒப்பிலா தெய்வம் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழருக்கு தமிழ்நாட்டிற்கு இனிமேல் துன்பம் இல்லை, துயரம் இல்லை என்ற நிலையை எய்திட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் இரட்டை இலையை அலையாய் எழச்செய்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தன் தோளில் தமிழ்நாட்டை காத்துநின்ற இமயம், தன் திறத்தால் தமிழ்நாட்டை தலைநிமிர்த்திய சிகரம், அருட்கொடையாய் இறைவன் அனுப்பிய அன்பின் சின்னம். தமிழினமே போற்றி வணங்கும் ஆற்றலின் வடிவம் எங்கள் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)* எண்ணிலா பெருமைகளை தன்னிலே கொண்ட தங்கத் தாய், இந்த மண்ணுலகை விட்டு மறைந்தாலும், மக்களின் மன உலகை விட்டு மறையாமல் அவர்தம் இதயக் கோயில்களில் கொலுவிருக்கும் தெய்வமென குடிகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது முதல் வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக்கோடி தொண்டர்களைக்கொண்ட ஒப்பிலா இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடி தொண்டன் என்ற வகையில் இந்த இயக்கத்தின் கழகப் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே *23–1–2017* அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின்மீது கடந்த *3* நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் *22* பேர் கலந்துகொண்டு உரையாற்றி இருக்கிறார்கள். உரையாற்றியவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினையும், பாராட்டினையும் முதற்கண் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறப்போர் உள்ளத்திற்கு துணிவு வேண்டும், தூய்மை வேண்டும், தன்னல மறுப்பு வேண்டும். இதுதான் அறப்போரின் இலக்கணம்" என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா அவர்களின் இலக்கணத்திற்கு ஏற்ப வாழ்ந்து, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்திக் கொண்டிருந்தவர் மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும், அவர் காட்டிய திசையில் நல்லாட்சியை நாங்கள் அளித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்தத் தருணத்தில் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். சிலர் இந்த அரசின்மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி உள்ளார்கள். குற்றச்சாட்டுகளுக்கு இடையிலேயும், ஆக்கபூர்வமான கருத்துகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பண்பாளர்கள் சிலர் எங்களது சாதனைகளை ஏற்றுக்கொண்டதுடன் சில பிரச்சினைகளுக்கு உண்மையான காரணம் என்ன என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். எங்களைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சிகளை எதிரிகளாக நாங்கள் பார்ப்பதில்லை. எதிரே இருந்து நம்மைத் தூண்டி நமது திறமைகளைத் தட்டி எழுப்பி, நம்மை வளர்ப்பவர்களாகத்தான் நாங்கள் அவர்களைப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இங்கே சொல்லப்படும் கருத்துகளுக்கு நாங்கள் மிகுந்த மதிப்பளிக்கிறோம்.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சி என்பதற்கான அடையாளம் என்ன என்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மாறுபட்ட அளவுகோலை வைத்திருந்தார்கள். ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது அந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி. அதாவது GSDP–ன் வளர்ச்சி என்று பல மாநில அரசுகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்த உற்பத்தியின் வளர்ச்சி காரணமாக, மாநிலம் வளர்ச்சி அடைவதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினாலும், அந்த வளர்ச்சி ஒரு சிலரின் வளர்ச்சியாகத்தான் அமைந்துவிடும். இதுபோன்ற வளர்ச்சியின் காரணமாக, மேல்தட்டிலே இருக்கின்ற ஒரு சிலரது வாழ்க்கைத் திறன் மேலும் உயரும் என்றாலும், அடித்தட்டிலே வாழ்கின்ற மக்கள் இதனால் எந்தவிதப் பயனையும் அடைய இயலாது. எனவேதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு என்பது ஏழை எளியவர்களுக்கான அரசாக இருக்க வேண்டும். இல்லாதோரை கை தூக்கிவிடும் அரசாக இருக்க வேண்டும். குறை உள்ளவர்களை நிறைவாக்கும் அரசாக இருக்க வேண்டும். அப்போதுதான் வளர்ச்சியின் பயனை ஒவ்வொருவரும் அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் பெற இயலும் என்பதையே அரசின் அடித்தளக் கொள்கையாகக் கொண்டிருந்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். வளர்ச்சி என்பது எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற ஒரு புதிய சிந்தனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டிருந்தார்கள். அதனால்தான் கல்வி மற்றும் பொது மக்களின் உடல்நலத்தில் மிகுந்த அக்கறை செலுத்தி அதற்கான திட்டங்களைத் தீட்டினார்கள்.

பிற்பகல் *12–35*

அடித்தட்டில் உள்ள மக்களின் பொருளாதார நிலை மாறிட வேண்டும் என்றால் வளர்ச்சியை நுகரக்கூடிய நிலையை அவர்கள் எய்த வேண்டும். அதற்கு இன்றியமையாது விளங்குவது பள்ளிக் கல்வி, உயர் கல்வி மற்றும் மக்களின் உடல் நலன் ஆகியவைதான். கல்வி மற்றும் மக்களின் உடல் நலன் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சி, சமுதாய வளர்ச்சிக் குறியீட்டை நிர்ணயிக்கும். சமுதாயக் குறியீடுகள் வளர்ச்சி அடையும்போது, சாமானிய மக்களும் பொருளாதார நிலையில் உயர்வடைய முடியும். அவர்களது வாழ்வு ஏற்றம் பெறும். எனவேதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

தரமான கல்வி பள்ளிகளிலே வழங்கப்பட்டால்தான் சிறந்த வாழ்வை மாணாக்கர்கள் வடிவமைத்துக்கொள்ள இயலும். தரமான கல்வி கிடைத்திட பள்ளிகளின் உட்கட்டமைப்பு சிறப்பானதாக இருக்க வேண்டும். கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு தேவையான கல்வி உபகரணங்கள் கிடைத்திடல் வேண்டும். மாணாக்கர்களின் கற்கும் திறன் மேம்படுத்தப்பட வேண்டும். இடைநிற்றல் குறைக்கப்பட வேண்டும். எனவேதான், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், போதிய ஆசிரியர்களை நியமனம் செய்திடவும், மாணாக்கர்கள் எளிதில் பள்ளி செல்வதற்கு வசதியை ஏற்படுத்துவதுடன், கல்வி கற்பதற்கான ஓர் அவாவினை அவர்களுக்குள் ஏற்படுத்திடவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வாறு பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்திய எண்ணில்லா திட்டங்களின் காரணத்தால்தான், தொடக்கக் கல்வி, நடுநிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி என அனைத்து நிலைகளிலும் சேர்க்கை விகிதம் தமிழகத்திலே கணிசமாக உயர்ந்துள்ளது, இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கல்விக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி கற்பதன்மூலம் மாணாக்கர்கள் வேலைவாய்ப்பு பெறவும், சுயதொழில் துவங்கவும் வாய்ப்பு ஏற்படும் என்பதால், உயர் கல்விக்கும் தமிழ்நாடு அரசு உரிய முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாதவகையில் கடந்த ஐந்தரை ஆண்டுக்கால மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், 4 புதிய அரசு பொறியியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 44 அரசு/ பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என 64 கல்லூரிகளைப் புதிதாகத் தொடங்கிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)



அதுமட்டுமின்றி, இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், தேசிய சட்டப் பள்ளி ஆகியவற்றை ஏற்படுத்தியதுடன், தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் புதிதாக உருவாகவும் மாண்புமிகு அம்மா அவர்களே காரணமாகத் திகழ்ந்தார்கள். இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டு 6.10 இலட்சம் என இருந்த உயர் கல்வி மாணாக்கர்களின் சேர்க்கை, இந்த ஆண்டு 7.20 இலட்சம் என உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தரை ஆண்டுகளில் புதிதாகத் தொடங்கப்பட்ட பாடப் பிரிவுகள் 959. கட்டடங்கள் கட்டப்படுவதற்காக செலவிடப்பட்ட தொகை 687.35 கோடி ரூபாய் ஆகும்.

கடந்த ஐந்தரை ஆண்டுகளில் 14,17,331 முதல் தலைமுறை மாணாக்கர்களுக்கு பயிற்சிக் கட்டண விலக்கு வழங்கப்பட்டுள்ளது. சுய நிதிக் கல்லூரிகளில் பயிலும் 6,53,864 ஆதி திராவிட பழங்குடியின மாணாக்கர்களுக்கான கல்விக் கட்டணங்களை அரசே ஏற்று வழங்கியுள்ளது. இப்படி அடுக்கடுக்கான திட்டங்களைச் செயல்படுத்தியதால்தான், உயர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு இன்று இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவில் உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம், அதாவது Gross Enrollment Ratio 23.6 சதவிகிதம் என்று உள்ள நிலையில், தமிழ்நாட்டில் இது 44.8 சதவிகிதமாக உள்ளது என்பதைப் பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியில் நாம் தொடர்ந்து முன்னிலை வகிப்பதற்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை நடைமுறைப்படுத்தும்வகையில், நோய் தாக்காமல் மக்களைப் பாதுகாப்பதற்கும், ஏற்படும் நோய்களிலிருந்து விரைவில் குணமடைய வழி காணவும், பல்வேறு மருத்துவ நலத் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களின் நல்வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் காரணமாக மனித வள மேம்பாடு உயர்வடைந்து வருகிறது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

*பிற்பகல் 12–40*

ஏழையெளிய மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 11–1–2012 அன்று தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகள், 23 முக்கியமான ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளுக்கு உதவி அளிக்கப்படுகிறது. ஒரு கோடியே 58 குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 11–1–2017 முதல் இந்தத் திட்டம் மேலும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு சிகிச்சை முறைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் காப்பீடு, 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கெனவே இருந்த 1,016 சிகிச்சை முறைகளுடன் மேலும் 312 சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

காப்பீட்டுத் தொகைக்கு மேல் செலவாகும் சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் வகையில், ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுப்பு நிதியிலிருந்து இதுவரை 4,388 பயனாளிகளுக்கு, 325 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிலான சிறப்பு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேறுகாலத்திற்குப் பின் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் சிசுக்களின் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கவும், தாய்க்கும், சேய்க்குமான ஆரோக்கியமான செயல்களைத் தாய்மார்கள் அறியச் செய்யவும், அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பயணம் செய்யும் தாய்மார்கள் மற்றும் பணிபுரியும் தாய்மார்கள் தனிமையில் பாலூட்டுவதற்காக அனைத்து வசதிகளுடன்கூடிய தனியாக பாலூட்டும் அறைகள் பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தாய்ப்பால் வங்கிகள் எட்டு அரசு மருத்துவமனைகளில் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அனைத்துத் தரப்பினருக்கும் மருத்துவ தகவல், ஆலோசனை, சுகாதாரம் சார்ந்த பொதுமக்கள் குறைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு, கொள்ளை நோய் பற்றிய தகவல், வளரிளம் பருவத்தினர் மற்றும் பிறருக்கு ஆற்றுப்படுத்தும் ஆலோசனைகள் ஆகியவை வழங்க 24 மணி நேரமும் இயங்கும் 104 தொலைபேசி எண் மருத்துவ தகவல் சேவை வசதி செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளைக் குறையின்றி வழங்கி, அவர்களது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்திட வேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனி அக்கறை கொண்டு செயல்பட்டார்கள். அதனால்தான், ஈடில்லா சாதனையாக புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், புதிய தாலுகா மருத்துவமனைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 5½ ஆண்டுகளில் 212 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 13 தாலுகா மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 39 மருத்துவ நிலையங்களை தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 129 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை வசதி போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இல்லாத 15 மாவட்டங்களிலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேர்வு வாரியத்தின்மூலம் 6,390 மருத்துவர்கள், 9,190 செவிலியர்கள் மற்றும் 1,447 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுக்கென இதுபோன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதனால்தான் நல்வாழ்வுக் குறியீடுகளில் நமது மாநிலம் முன்னிலை வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

*அதாவது, 2010 ஆம் ஆண்டு 1,000 குழந்தைப் பிறப்புகளுக்கு 24 என இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது 19 என குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம், 2010 ஆம் ஆண்டு 27 என இருந்தது. இது, தற்போது 23 என குறைந்துள்ளது. ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு தாய் இறப்பு விகிதம், 2010 ஆம் ஆண்டு 79 என இருந்தது, தற்போது 67 என குறைக்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்திற்கும் இன்றியமையாததாக உள்ள வேளாண்மைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள். சாகுபடிப் பரப்பை அதிகரித்தல், தரமான இடுபொருட்கள் உரிய காலத்தில் கிடைக்கச் செய்தல், புதிய வேளாண் உத்திகளைக் கடைப்பிடித்தல், விளை பொருட்களைச் சேமித்து வைத்து, இலாபகரமான விலையில் விற்பதற்காக கிடங்குகள் அமைத்தல், நெல், கரும்பு ஆகியவற்றிற்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதார விலையை விட அதிக விலையை நிர்ணயம் செய்தல் என பல நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், உணவு தானிய உற்பத்தியில், வறட்சி இல்லாத ஆண்டுகளில், புதுப்புது சாதனைகளை நம்மால் படைக்க முடிந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, விவசாயிகள் நலன் காக்கும் வகையில் இந்தத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும்.*

*பிற்பகல் 12–45*

*விவசாயத்திற்கு இன்றியமையாத தேவை தண்ணீர். ஆனால், வற்றாத பெரும் நதிகள் எதுவும் தமிழகத்தில் இல்லாத காரணத்தால், தண்ணீர்ப் பற்றாக்குறை என்பது எப்போதும் நிலவி வரும் பிரச்சினையாகவே உள்ளது. தண்ணீர்த் தேவையை சமாளிக்க, நுண்ணீர்ப் பாசன வசதிகள் பெரிதும் உதவிடும்*



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*என்பதால், நுண்ணீர்ப் பாசன அமைப்பை ஏற்படுத்த சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 5½ ஆண்டுகளில் 1,83,251 விவசாயிகளுக்கு 1,000 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.*

*வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையை நீக்கி, உரிய நேரத்தில் சாகுபடி மேற்கொள்ள, வேளாண் இயந்திரங்கள் கிடைக்கச் செய்தல் அவசியமாகும். எனவே, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 5½ ஆண்டுகளில் வேளாண் இயந்திரங்களுக்கு மற்றும் கருவிகள் வாங்குவதற்கென, 347 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 1,94,765 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளால் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு 18 கோடியே 42 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்படுவதுடன், வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 370 வட்டாரங்களில் வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் முனைவோர், பெண்கள் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*விவசாய உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாகவே, 2010–2011 ஆம் ஆண்டு 75.95 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்த உணவு தானிய உற்பத்தி, 2015–2016 ஆம் ஆண்டில் 113.70 இலட்சம் மெட்ரிக் டன் என (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து 3–வது ஆண்டாக, 100 இலட்சம் மெட்ரிக் டன்களுக்குமேல் உற்பத்தி செய்யப்பட்டு உயர் சாதனையை நாம் எட்டியுள்ளோம்.*

*கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி, கூட்டுறவு வங்கிகளில் 31–3–2016 அன்று நிலுவையில் இருந்த சிறு, குறு விவசாயிகளின் பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 5,318.73*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

கோடி ரூபாய் அளவிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 12,02,075 விவசாயிகள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வர்தா' புயல் 12–12–2016 அன்று சென்னையில் கரையைக் கடந்தபோது வீசிய சூறாவளிக் காற்றினால் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி, ஆயிரக்கணக்கான மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்தன. மின்சார சேவை பெரிதளவில் பாதிக்கப்பட்டது. இந்தப் பாதிப்புகளைச் சீர்செய்ய, தமிழக அரசின் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து, போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டன.

'வர்தா' புயலால் பாதிக்கப்பட்ட உள்கட்டமைப்புகளை சீர் செய்யவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கவும் மொத்தம் 585.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்பட்ட 34,206.13 ஹெக்டேர் விவசாயப் பயிர்கள் சேதமடைந்ததால், பாதிக்கப்பட்ட 54,747 விவசாயிகளுக்கு, 44.82 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 'வர்தா' புயலால் பாதிக்கப்பட்ட 6,836.43 ஹெக்டேர் தோட்டப் பயிர் பாதிப்பிற்கு, 14,502 பயனாளிகளுக்கு 10.63 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. 15,103 மீனவர்களுக்கு, சேதங்களுக்கென 16 கோடியே 19 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்கு இதுவரை மொத்தம் 498 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளம், புயல், வறட்சி ஆகிய இயற்கை இன்னல்கள் ஏற்படும்போது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும், அவற்றால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 2012–2013 ஆம் ஆண்டு தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டபோது, இந்தியாவிற்கே முன்னுதாரணமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறு



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தற்போது தமிழகத்தில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து மக்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பிற்பகல் 12–50

தமிழ்நாட்டில் வறட்சி சூழ்நிலை உருவாகியிருந்த நிலையில், அதுபற்றி மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்த பின், பயிர் பாதிப்பு நிலைமைகளை நேரில் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை வழங்க மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் கொண்ட குழுக்களை உடனடியாக அமைத்திட உத்தரவிட்டிருந்தேன். இதுபற்றி அறிக்கை ஒன்றினையும் 3–1–2017 அன்று வெளியிட்டிருந்தேன். அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தபடி, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் 3–1–2017 அன்றே அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வினை மேற்கொண்டு தங்களது அறிக்கையினை அரசுக்கு 9–1–2017 அன்று அளித்தன. இந்தக் குழுக்கள் அளித்த அறிக்கைகளின் பேரில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வடகிழக்குப் பருவ மழை மிகக் குறைவாகப் பெய்துள்ளதால், அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரி முழுவதும் தள்ளுபடி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை தற்போது திரும்பச் செலுத்த இயலாது என்பதால், கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் ஆகியவற்றில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடனை, மத்திய காலக் கடனாக மாற்றியமைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு மாற்றியமைப்பதற்குத் தேவையான அன்னவாரி சான்றிதழ்கள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு வங்கிகள்மூலம் 3,028 கோடி ரூபாய் பயிர்க் கடனாக இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் முழுவதும் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்கப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

பேரிடர் நிவாரண வரையறையின்படி பயிர்ச் சேதங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை உயர்த்தப்பட்டு, 27–10–2015 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி 33 சதவீதத்திற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படும். நெல் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,465 ரூபாய்; நெல் தவிர இதர நீர்ப் பாய்ச்சப்பட்ட பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,465 ரூபாய்; மானாவாரி பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய்; நீண்ட காலப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7,287 ரூபாய்; முசுக்கட்டை பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பேரிடர் நிவாரண வரையறையின்படி, நிவாரணம் மட்டுமே பெற இயலும் என்பதால் பயிர்க் காப்பீட்டு நிறுவனங்கள்மூலம் பயிர்க் காப்பீடு செய்யத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அதிக பயன் கிடைக்கும் என்பதால் அரசுக்குச் செலவு அதிகம் என்றாலும், இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் சராசரியாக பயிர்க் காப்பீட்டிற்கு அரசின் பங்களிப்பு பிரிமியத் தொகையாக 40 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு மாநில அரசின் பங்காக 410 கோடி ரூபாய் செலுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வோர் ஆண்டும் பேரிடர் நிவாரண நிதிக்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஆண்டும் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை 713 கோடி ரூபாய். மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு, மத்திய அரசு விடுவிக்க வேண்டிய இரண்டாம் தவணையான 258 கோடி ரூபாயை இதுவரை நாம் பெறவில்லை. எனினும், அதற்காக காத்திராமல், மாநில நிதியிலிருந்து, மத்திய நிதி விடுவிப்பை எதிர்நோக்கி செலவிடப்பட்டு வருகிறது. மாநிலத்தில் ஏற்படுகின்ற பேரிடர் மிகக் கடுமையாக இருக்குமேயானால், இந்த நிதியிலிருந்து மட்டும் நிவாரணத்தை மேற்கொள்ள இயலாது. அதனால்தான், இதுபோன்ற மிகப் பெரும் பேரிடர் ஏற்படும்போது மத்திய அரசிடமிருந்து போதிய பேரிடர் நிவாரண நிதியினை



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஒதுக்கீடு செய்ய கோரிக்கை வைக்கிறோம். இது எல்லா மாநிலங்களும் பின்பற்றும் நடைமுறைதான். மாநில பேரிடர் நிவாரண நிதி, ‘வர்தா’ புயல் நிவாரணத்திற்காக செலவிடப்பட்ட நிலையில், வறட்சி நிவாரணத்திற்கு என்று தேவைப்படும் நிதி, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கோரப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு தற்போது மாற்றியமைத்துள்ளது. அதன்படி வறட்சியின் அளவைக் கணிக்க, சில காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு, அதனடிப்படையில் கள ஆய்வு செய்து, அதிலும் பாதிப்பு குறிப்பிட்ட அளவுக்குமேல் இருந்தால்தான் வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்க முடியும். இப்பணிகளையெல்லாம் முறையாகச் செய்ததால்தான் தமிழகம் வறட்சி பாதித்த மாநிலமாகத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரண கோரிக்கை மனு தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து வறட்சி நிவாரணமாக 39,565 கோடி ரூபாய் கேட்டுள்ளோம். இந்தக் கோரிக்கையை நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 19–1–2017 அன்று புதுடில்லியில் நேரில் சந்தித்து வலியுறுத்தினேன். அதன்படி, இங்குள்ள வறட்சி நிலைமைகளை நேரில் பார்த்து, பரிந்துரை செய்திட மத்திய அரசு குழு ஒன்றை 23–1–2017 முதல் 25–1–2017 வரை ஆய்வு செய்ய அனுப்பி வைத்தது. அந்தக் குழு தனது ஆய்வை முடித்துள்ளது. மத்திய அரசுக்கு அந்தக் குழு விரைவில் அறிக்கையை அளித்து, அதன் அடிப்படையில் நமக்கு மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும் என நான் நம்புகிறேன்.

பிற்பகல் 12–55

அதேசமயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்கள் புல எண் வாரியாகக் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கு போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது கூடியவிரைவில் முடிக்கப்படும். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடானது ஒரே சமயத்தில் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு தக்க பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை மேலும் பரவலாக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No point of order, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எனது பதில் முடிந்தவுடன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பதில் முடிந்தபிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 2013–2014 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சந்தேகம் வரக் கூடாது. (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது உங்களுக்கு சந்தேகம் வரக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குறித்து வைத்துக்கொள்ளுங்கள். நான் பதில் சொல்லி முடித்தவுடன் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், முதலமைச்சர் பேசிய பிறகு நீங்கள் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பேசியபிறகு பேசிக்கொள்ளலாம், இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 2013–2014 ஆம் ஆண்டில் ஏக்கருக்கு 15,000 ரூபாய் இழப்பீடு வழங்கியதாகவும், தற்போது 5,645 ரூபாய் மட்டுமே அரசு வழங்க உள்ளதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள் தெரிவித்தார்கள். 2013–2014 ஆம் ஆண்டு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஏக்கருக்கு நெல் பயிர்களுக்கு 5,000 ரூபாயும், பாசனப் பயிர்களுக்கு 4,000 ரூபாயும், மானாவாரி பயிர்களுக்கு 3,000 ரூபாயும் வழங்கப்பட்டது. அப்போது இருந்த காப்பீட்டுத் திட்டத்தில், பிரிமியம்மூலம் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கும் நிதிக்கு கூடுதலாக இழப்பீடு இருந்தால், அதை மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இதன்படி டெல்டா விவசாயிகளுக்கு,



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நெல்லுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கிய இழப்பீடான 5,000 ரூபாயுடன் காப்பீட்டு இழப்பீடாக 8,692 ரூபாயும், காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணமாக 1,308 ரூபாயும் சேர்த்து 15,000 ரூபாயாக அரசு வழங்கி காப்பீட்டு நிறுவனத்திலிருந்து தொகையை ஈடு செய்தது. அதன்படி, 313 கோடி ரூபாய் பிரிமியமும், 181 கோடி ரூபாய் இழப்பீட்டு பங்கும், 47 கோடி ரூபாய் காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணமாகவும், ஆக மொத்தம் சுமார் 542 கோடி ரூபாயை மாநில அரசு வழங்கியது. 2016–2017 ஆம் ஆண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மாற்றப்பட்டு பிரிமியம் அதிகரிக்கப்பட்டது. இதன்படி, காப்பீட்டு நிறுவனமே முழு இழப்பீட்டையும் தர வேண்டும். இதற்கு 2016–2017 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு அதன் பங்காக 410 கோடி ரூபாயை பிரிமியமாக வழங்க வேண்டும். எனவே, காப்பீடு செய்த விவசாயிகள் பயிர்க் காப்பீட்டு இழப்பீடாக பயிர் வகைகளைப் பொறுத்தும், மாவட்டத்தைப் பொறுத்தும், ஏக்கருக்கு ரூபாய் 8,000 முதல் 50,000 ரூபாய் வரை இழப்பீட்டுத் தொகை பெற முடியும். (மேசையைத் தட்டும் ஒலி). இது தவிர, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நெல் போன்ற பாசனப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 5,465 ரூபாயும், மானாவாரி பயிர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாயும் பெறுவர். எனவே, இந்த ஆண்டு வழங்கப்படும் நிவாரணம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி காரணமாக வேலைவாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு போதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் பணி வரம்பு என்பதை 150 நாட்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் ஏரிகள் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் மற்றும் பாசன வாய்க்கால்கள் தூர் வாருதல் போன்ற பணிகள் 3,400 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என அறிவித்திருந்தேன். இந்தப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையைத் தீர்க்கும்வகையில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை வாயிலாக பசுந்தீவனம், அடர் தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும்வகையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமூலம், நீராதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும்வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் நீராதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியின்மூலம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, சேவைத் துறை வளர்ச்சியடைவதுடன் பொருளாதார வளர்ச்சியும் அடைய முடியும் என்பதால் தொழில் வளர்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். தொழில் வளர்ச்சிக்கென புதிய தொழில் கொள்கை, வாகன உற்பத்தியை ஊக்குவிக்க புதிய கொள்கை, வளர்ந்துவரும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான புதிய கொள்கை, நீண்ட கால வளர்ச்சிக்கு வழிகாணும் வகையிலான தொலைநோக்குத் திட்டம் 2023 என பல புதிய திட்டங்களையும், கொள்கைகளையும் ஏற்படுத்தி, தமிழகத்தில் மகத்தானதொரு தொழில் புரட்சிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வித்திட்டார்கள் என்று சொன்னால், அது மிகையல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் துவங்குவதற்கு ஏற்ற வசதிகள், இங்கு தமிழ்நாட்டில் செய்யப்பட்டுள்ளதால்தான் தொழில் துவங்க ஏற்றதாக உள்ள முதல் மூன்று மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இடம் பிடித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் திறன்,



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உட்கட்டமைப்பு, நிருவாக அமைப்பு, பொருளாதாரச் சூழல் ஆகியவற்றையெல்லாம் கணக்கிட்டு தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருப்பதாக தொழில் சம்பந்தமான பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் நிகர மதிப்பு கூட்டலின்படியும், தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பிலும் தமிழகம் மூன்றாம் இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று மொத்த ஏற்றுமதியில் தமிழகம் மூன்றாம் இடத்தில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்நிய நேரடி முதலீடுகள் அதிகம் பெறும் மாநிலம், தொழில் வளர்ச்சியில் விரைந்து முன்னேற இயலும். அந்த வகையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டு காலத்தில் தமிழ்நாடு பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடு 44,200 கோடி ரூபாய்தான். ஆனால், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த வெளிநாட்டு முதலீட்டுத் தொகை 71,500 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் பொதுவாக 10 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே தொழில்கள் துவங்கும் நிலை ஏனைய மாநிலங்களில் உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் இதுவரை 26 சதவிகிதத்திற்கும் அதிகமாக முதலீட்டுக்கான பணிகள் துவங்கப்பட்டுவிட்டன என்றும், இது மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான சாதனை என்பதையும் இப்பேரவைக்கு எடுத்துக் கூறுவதில் மிகவும் பெருமை அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள எஞ்சிய நிறுவனங்கள் தொழில் துவங்குவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டுள்ளன என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லாமல் 31,706 கோடி ரூபாய் மதிப்புள்ள தொழில் துவங்குவதற்கான 33 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கடந்த ஐந்தரை ஆண்டுகளில் கையெழுத்திடப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 16,450.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இவையன்றி தமிழ்நாடு தொழில் வழிகாட்டு நிறுவன மையம் மூலம் ஒற்றைச்சாளர முறையின் வாயிலாக 11,282.52 கோடி ரூபாய் மதிப்பிலான 56 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் பெரிய தொழிற்சாலைகள் இல்லாததைக் கருத்தில்கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கு தொழிற்சாலைகள் ஏற்படுத்திட பல சிறப்புச் சலுகைகளை அறிவித்தார்கள். அதன்படி, 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு, நிலப் பத்திரப் பதிவுக்கான முத்திரைத்தாள் கட்டணத்திற்கு முழு விலக்கு, மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிப்பு, மதிப்புக் கூட்டு வரி அடிப்படையிலான சலுகைகள் பெற தொழில் கொள்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச முதலீட்டுத் தொகையை 50 கோடி ரூபாய் என்பதிலிருந்து 10 கோடி ரூபாய் எனக் குறைத்து வழங்குதல் ஆகிய சிறப்புச் சலுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது 3 முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 48,600 கோடி ரூபாய் மதிப்பில் கையொப்பம் ஆகியுள்ளன. இதில் 2 திட்டங்கள், திட்டத்திற்கான இடம் தேர்வு செய்தல், நிதி ஆதாரங்களை இறுதி செய்தல் ஆகிய நிலையில் உள்ளன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பினை வழங்குபவையாக உள்ளதால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க பல்வேறு முன்னோடித் திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள். முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரி



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மானியம் என பல்வேறு சலுகைகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆம் ஆண்டுவரை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 14.16 இலட்சங்கள் ஆகும். 2011 ஆம் ஆண்டுவரை பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 6.90 இலட்சங்கள் ஆகும். அதாவது, 2011—ல் 6.90 இலட்சமாக இருந்தது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், 2016 ஆம் ஆண்டு 14.16 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதில், 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1.78 இலட்சமாகும். கடந்த 5½ ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 7.26 இலட்சங்கள் ஆகும். அதாவது, கடந்த 2006 முதல் 2011 ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையைவிட 300 சதவிகிதத்திற்கு அதிகமான எண்ணிக்கையில் கடந்த 5½ ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு மின் பற்றாக்குறை மிகுந்த மாநிலமாக, அதிக மின்வெட்டு உள்ள மாநிலமாக இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்தத் துயர நிலையை மாற்றிக் காட்டுவேன் என்ற உறுதிபாட்டுடன் செயல்பட்டு, இருண்ட மாநிலமாக இருந்த தமிழகத்தை ஒளிமயமான மாநிலமாக மாற்றிக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

5–6–2015 முதல் தமிழ்நாட்டில் மின்வெட்டு என்பது அறவே இல்லை. 2011 ஆம் ஆண்டில் 10,237 மெகா வாட் என இருந்த மின் நிறுவுதிறன், புதிய மின் திட்டங்களை நிறைவேற்றியதன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்ட கால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலமும் 18,182 மெகா வாட் என

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

உயர்த்தப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு சராசரியாக நாளொன்றுக்கு 200 மில்லியன் யூனிட் என இருந்த மின் பயனீடு, தற்போது 296 மில்லியன் யூனிட் என உயர்ந்துள்ளது. உச்சகட்ட மின் தேவையைப் பூர்த்தி செய்வதில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டில் மட்டும் 2,409 கிலோ மீட்டர் உயர் அழுத்த மின் பாதைகளும், 6,443 கிலோ மீட்டர் தாழ்வழுத்த மின் பாதைகளும், 13,242 மின்மாற்றிகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மின்சாரம் என்பது அனைவருக்கும் இன்றியமையாத ஒன்று என்பதால், வீட்டு உபயோகிப்பாளர் அனைவருக்கும் தற்போதைய கணக்கீட்டு முறைப்படி 100 யூனிட் மின்சாரம் கட்டணம் இல்லாமல் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு கடந்த மே மாதம் முதல் இந்தச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு 1,600 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் காரணமாக 1 கோடியே 91 இலட்சம் பயனீட்டாளர்கள் பயனடைந்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வரும் ஐந்தாண்டுகளில் அனல் மின் திட்டங்களிலிருந்து கூடுதலாக 13,000 மெகா வாட் மின்சாரம் 96,440 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது (1) எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1 x 660 மெகா வாட்), (2) எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 x 660 மெகா வாட்), (3) வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–III (1 x 800 மெகா வாட்) மற்றும் (4) உப்பூர் அனல் மின் நிலைய திட்டம் (2 x 800 மெகா வாட்) ஆகிய திட்டங்கள் மூலமாக 4,380 மெகா வாட் நிறுவிட 34,375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–I (2 x 660) 10,615 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவிட பணி ஆணைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர நான்கு புதிய மின் திட்டங்கள் முறையே (1) உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–II (2 x 660 மெகா வாட்), (2) உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–III (2 x 660 மெகா வாட்), (3) எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் (1 x 660 மெகா வாட்) மற்றும் (4) கடலாடி மிக உய்ய அனல் மின் திட்டம் (5 x 800 மெகா வாட்) மூலமாக 7,300 மெகா வாட் நிறுவிட 51,450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1–10

தமிழ்நாட்டில் தற்போது 1,549 மெகா வாட் திறனுள்ள சூரிய மின்சக்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர 680 மெகா வாட் திறனுள்ள சூரிய மின் சக்தி நிலையங்கள் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், வருகின்ற ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 3,000 மெகா வாட் சூரிய மின்சக்தி நிலையங்கள் நிறுவிட ஏதுவாக மாற்று ஏல முறை (reverse bidding) மூலம் முதற்கட்டமாக 500 மெகா வாட் சூரிய மின்சக்தி கொள்முதல் செய்ய ஒப்பந்தம் கோரப்பட்டது. மற்றுமொரு 500 மெகா வாட் சூரிய மின்சக்தி கொள்முதல் செய்ய அதிகபட்ச விலையாக யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 50 பைசா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10–2–2017 அன்று அந்த ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தொழில், உட்கட்டமைப்பு என ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற திட்டத்தை வகுத்து அளித்துள்ளார்கள். இதன்படி 217 உட்கட்டமைப்பு வசதிகள் சம்பந்தப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 88 திட்டங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 16 திட்டங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலை அடைந்துள்ளன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** 800 மெகா வாட் அதானி என்ற ஒருவருக்குக் கொடுத்தீர்கள் அல்லவா? அது வரவேயில்லையே?

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைச்செருகல் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்பொழுதும் செய்கிற வாடிக்கையான செயலைத்தான் இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லா விவரங்களையும் நான் இப்பொழுது சொல்லிக்கொண்டு வருகிறேன். கூடுதலான விவரம் வேண்டுமென்றால், பதில் சொன்னவுடன் தருவதற்குக் கடமைப்பட்டுள்ளேன் என்பதை மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இடையில் break ஆகிவிட்டது. 24 விரிவாக்கத் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR)/ விரிவான சாத்தியக்கூறு ஆராய்வு (Detailed Feasibility Study) தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய திட்டங்களில் 89 திட்டங்கள் திட்ட வடிவமைப்பு நிலையில் தற்போது உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'–ஐச் செயல்படுத்துவதற்காக சில சட்டங்கள் மற்றும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) என்கிற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிய உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிதி திரட்டுவதற்காக ஒரு புதிய நிறுவனமாக தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய பங்குப் பரிவர்த்தனை வாரியம் Securities and Exchange Board of India (SEBI)–ன் மேற்பார்வையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு தனி நிதியைத் திரட்ட இது வழிவகை செய்யும். தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் மாற்று முதலீட்டு நிதி (வகை–I) (Alternative Investment Fund Category–I) என்கிற ஒரு நிதியை உருவாக்கி, அதற்கு (SEBI)–ன் ஒப்புதலை 12–5–2016 அன்று பெற்றுள்ளது. இதுபோன்ற ஒரு நிதி, இந்திய மாநிலங்களிலேயே, தமிழ்நாடு அரசால்தான் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று இல்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நிதியில் 6,000 கோடி ரூபாய் வரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்படும் நிதி பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில், விவசாயம் என அனைத்துத் துறைகளும் ஏற்றம் பெறுவதற்கும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாது விளங்குவது உட்கட்டமைப்பு வசதிகள்தான். எனவேதான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகர்ப்புறங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் புதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், ஏற்கெனவே உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

கடந்த 5½ ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் 54,111 கிலோ மீட்டர் சாலைகள் மற்றும் 2,338 பாலங்கள் 28,105 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 16 புறவழிச் சாலைகள் 211.44 கோடி ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, சாலைகள், பாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில், கடந்த 5½ ஆண்டுகளில் 4,577.07 கி.மீ. சாலை மற்றும் பாலப் பணிகள், 4,056.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. 241 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை மற்றும் பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 1–15

மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், பூங்காக்கள் பராமரிப்பு, திடக் கழிவு மேலாண்மை போன்ற பணிகள் 2,055.87 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வசதி, பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், திடக் கழிவு மேலாண்மை, தெரு விளக்குகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் 11,746.40 கோடி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

ரூபாய் செலவில் கடந்த 5½ ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 2,638.36 கோடி ரூபாய் செலவில் 86,816 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நேற்று, தி.மு.க. உறுப்பினர்கள் பேசும்போது சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் இன்னும் அடிப்படை வசதிகளே செய்யப்படவில்லை என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட மாதவரம், நெற்குன்றம், நொளம்பூர், காரம்பாக்கம், இராமாபுரம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னசேக்காடு, மணலி, பள்ளிக்கரணை, முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம் மற்றும் புழல் ஆகிய 27 பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 830.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணைக்கப்பட்ட பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிழக்குக் கடற்கரை சாலையிலுள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் 5,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் கடன் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெற வேண்டுமென்ற அடிப்படையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு ‘தாய்’ திட்டம் செயல்படுத்த ஆணையிட்டார்கள். அதன்படி இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தமுள்ள 79,394 குக்கிராமங்களில் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், சுடுகாடு/இடுகாடு மற்றும் அவற்றிற்கான சாலை வசதிகள் ஆகிய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சிறு பாசன ஏரிகளைப் புனரமைப்பு செய்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, ‘தாய்’ திட்டத்தினை நீட்டித்து, இரண்டாம் கட்ட ‘தாய்’ திட்டப் பணிகள் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த, புதுமைத் திட்டமான சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், ஊரகக் குடியிருப்புத் திட்டம், கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்மாநில நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டி, தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெற்றுத் தர அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய சட்டப் போராட்டம் காரணமாகவே ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை செயல்படுத்தத் தேவையான காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு இன்னமும் அமைக்கவில்லை. 30–9–2016 அன்று உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியத்தை நான்கு நாட்களுக்குள் அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. எனினும், மத்திய அரசு, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசுக்குப் பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்து திரும்பப் பெற வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மாற்றியமைக்கக் கோரி ஒரு மனுவை 3–10–2016 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்குப் பிறப்பித்த உத்தரவை ஒத்தி வைத்தது. மேல்முறையீட்டு மனுக்கள் அனைத்தும் 7–2–2017 முதல் தினந்தோறும் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும்,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின்படி, நாளொன்றுக்கு வினாடிக்கு 2,000 கன அடி நீரை கர்நாடகம் தொடர்ந்து திறந்து விடவேண்டும் எனவும் உத்தரவிட்டது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் 26–1–2017 வரை கர்நாடகம் விடுவித்தது, பிலிகுண்டுலுவில் கிடைக்கப்பெற்ற 67.140 டி.எம்.சி. அடி தண்ணீரில், 30.642 டி.எம்.சி. அடி தண்ணீர் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலேயே கிடைக்கப்பெற்றுள்ளது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைத்திடவும், நமக்குரிய தண்ணீரை, கர்நாடக அரசிடமிருந்து பெற்றிடும் வகையிலும் உச்ச நீதிமன்றத்தில் நியாயமான தீர்ப்பை நாம் பெற்றிட முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

பிற்பகல் 1–20

காவேரி ஆற்றின் குறுக்கே, கர்நாடக அரசு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையில் மேகதாது உள்ளிட்ட எந்த ஓர் அணை கட்டும் திட்டத்தையும் செயல்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சட்டப்பூர்வமாக உறுதியுடன் தடுத்து நிறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 1,28,058 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசுத் துறைகளில் 3,03,111 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் பதிவுகளின்படி 1 கோடியே 8 இலட்சத்து 29 ஆயிரத்து 997 பேர் புதியதாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

நடப்பாண்டில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம், 15,013 இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். அரசு மற்றும் அரசு துறைகளில் 29,393 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் பதிவுகளின்படி தற்போது 6,00,545 பேர் புதியதாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 1991 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட முன்னோடி திட்டம்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம் ஆகும். 6 இலட்சத்துக்கும் அதிகமான சுய உதவிக் குழுக்கள்மூலம் 92 இலட்சத்திற்கும் மேல் உறுப்பினர்கள் கொண்ட பெரும் இயக்கமாக இது தற்போது திகழ்ந்து வருகிறது.

கடந்த ஐந்தரை ஆண்டுகளில் 30,794 கோடி ரூபாய் அளவுக்கு சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாட்கோமூலம் 90,064 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 316.72 கோடி ரூபாய் பொருளாதார கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் வழங்கப்பட்ட மானியம் 138.48 கோடி ரூபாயாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளியோர் ஏற்றம் பெறும் வகையிலான எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், மிகக் குறைந்த விலையில் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வழங்கும் திட்டம், தாலிக்கு 8 கிராம் தங்கத்துடன்கூடிய 50,000 ரூபாய் வரையிலான திருமண உதவித் திட்டம், 12,000 ரூபாய் மகப்பேறு நிதி உதவித் திட்டம், விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம், பசுமை வீடுகள் திட்டம், 1,000 ரூபாய் முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம், பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்மூலம் மலிவு விலையில் காய்கறிகள் வழங்கும் திட்டம், அம்மா உணவகங்கள், அம்மா சிமெண்ட், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகங்கள், குறைந்த விலையில் அரசு கேபிள் டிவி இணைப்பு (மேசையைத் தட்டும் ஒலி) என ஏழை எளியோர் நலம் காண மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திய அற்புதமான நலத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு அம்மா அவர்களின் இத்திட்டங்கள் அனைத்தையும் எவ்விதத் தொய்வும் இன்றி இன்னும் சிறப்புடன் செயல்படுத்துவோம் என்பதையும் இப்பேரவைக்கு மிகவும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்—ஒழுங்கைப் பொறுத்தவரை தமிழ்நாடு ஓர் அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. சட்டம்—ஒழுங்கை திறம்படப் பாதுகாக்க வேண்டுமெனில் காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சட்டம்—ஒழுங்கைப் பாதிக்கும் நிகழ்வுகளைத் தடுப்பது என்றாலும், குற்றத் தடுப்பு, புலனாய்வு ஆகிய காவல் பணிகள் என்றாலும் காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டு வருகிறது. சட்டம்—ஒழுங்கைப் பராமரித்தல், சட்டத்தின் ஆட்சி நடைபெறுதல், பொதுமக்கள் எவ்வித அச்ச உணர்வும் இல்லாமல் தங்களது அன்றாடப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவையே பொது அமைதி என்பதன் அடையாளமாகும். குற்ற நிகழ்வுகளே இல்லை என்ற நிலையை எந்த ஒரு நாடும், எந்த ஒரு மாநிலமும் எய்திட இயலாது. மாறிவரும் சமுதாய சூழ்நிலை, தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மக்கள் தொகை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் குற்ற நிகழ்வுகள் அதிகரித்து வரும் சூழ்நிலை நாடெங்கும் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன என்பதே *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு சிறப்பாகப் பாதுகாக்கப்படுகிறது என்பதையும், தடுக்கப்படக்கூடிய குற்றங்கள் தடுக்கப்படுகின்றன என்பதையும் எடுத்துக்காட்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் இந்த அரசு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஏழை எளியவர்களின் நலன் காப்பதற்கான திட்டங்கள், மனித வள மேம்பாட்டை உறுதி செய்யும்வகையில் கல்வி மற்றும் மக்கள் உடல்நலன் சார்ந்த திட்டங்கள், வேலைவாய்ப்பினை அளிக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான கொள்கைகள், திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், கழிவுநீர் வெளியேற்றும் வசதிகள், சாலைகள் போன்றவற்றை



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அமைப்பதற்கான திட்டங்கள், ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், அவர்களுக்கு வீட்டுவசதி வழங்கும் திட்டங்கள் என அனைவரையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துக்கொடுத்த சட்டமன்றத் தேர்தல் அறிக்கை மற்றும் தொலைநோக்குத் திட்டம், 2023 ஆகியவையே இந்த அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கான வழிகாட்டியாக விளங்குகின்றன. 2011 மற்றும் 2016 சட்டமன்றப் பேரவைத் தேர்தல் அறிக்கைகளின் மூலமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் வாக்குறுதிகள் அளித்த இனங்கள் தற்போது நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களால் 121 வாக்குறுதிகள் தற்போது நிறைவேற்றப்பட்டுவிட்டன. *(மேசையைத் தட்டும் ஒலி)* மொத்த வாக்குறுதிகளில் 121 வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. 86 வாக்குறுதிகள் தொடர்பான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 18 வாக்குறுதிகள் தொடர்பானவை, மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 4 வாக்குறுதிகள் தொடர்பானவை நீதிமன்ற வழக்குகளினால் நிலுவையில் உள்ளன. மீதமுள்ள 92 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஜல்லிக்கட்டுப் பிரச்சினை பற்றிப் பேசியுள்ளனர். மத்திய அரசின் விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்திற்கு மாநில திருத்தம் ஒன்றைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டு, இந்தச் சட்டத் திருத்தத்தினை ஓர் அவசரச் சட்டமாக பிறப்பிக்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, மத்திய அரசின் பரிந்துரையுடன் மேதகு குடியரசுத் தலைவரின் உத்தரவு பெறப்பட்ட பின்னர், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, 1960 ஆம் ஆண்டைய விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தில் தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நடத்தும்வகையில், உரிய திருத்தங்களை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மேற்கொண்டு, விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசரச் சட்டம், 2017 கடந்த 21–1–2017 அன்று பிறப்பிக்கப்பட்டது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் 23–1–2017 அன்று விலங்குகள் வதைத் தடுப்புச் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு, 2017, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அன்றே மாண்புமிகு ஆளுநரின் மூலமாக மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக, மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சகம், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம், மத்திய சட்ட அமைச்சகம், மத்திய பண்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் இசைவினைப் பெற்று, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல், நேற்றையதினம், 31–1–2017 அன்றே பெறப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விலங்குகள் வதைத் தடுப்புச் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2017 தமிழ்நாடு அரசிதழிலும் நேற்றே, அதாவது 31–1–2017 அன்றே வெளியிடப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 23–1–2017 அன்று ஆரம்பித்து, 31–1–2017–க்குள், அதாவது ஒரு வார காலத்திற்குள், ஒரு சட்டம் இயற்றப்படுவது (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் செயல்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதனை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வைத்தது, முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை உயர்த்தியது போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்வுகளில் சட்டரீதியாக வெற்றி பெற்றுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றை தனது அயராத மற்றும் தீவிர முயற்சிகளால் தமிழ்நாட்டிற்கு பெற்றுத் தந்தவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர் வகுத்துத் தந்த அந்த வெற்றிப்பாதையில், தமிழக அரசு தொடர்ந்து பீடு நடைபோடும் விதமாகவும், தமிழர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நிலைநிறுத்துகின்ற வகையிலும் இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழக வரலாற்றிலும், தமிழக மக்களின் மனதிலும் இது நீங்கா இடம் பெறும் என்பதை இந்த மாமன்றத்தில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர், GST மற்றும் UDAY திட்டம் ஆகியவற்றை எதிர்த்த தமிழக அரசு, அவற்றை தற்போது ஏன் ஏற்றுக்கொண்டது எனக் கேள்விகள் எழுப்பினர். இவற்றிற்கு சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்கள் தகுந்த பதிலை அளித்துள்ளனர். உதய் திட்டத்திலுள்ள சில நிபந்தனைகளை நாம் எதிர்த்து அவற்றை மத்திய அரசு மாற்றியுள்ளதைப்பற்றி மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கி, மாநிலங்களின் நலன்களைப் பாதுகாக்கும் விதமாக GST கவுன்சிலில் தமிழக அரசு சார்பாக எடுத்து வைக்கப்பட்ட கருத்துகள் ஏற்கப்பட்டதை மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கியுள்ளார். GST மற்றும் UDAY ஆகியவற்றை துவக்கம் முதலே ஆதரித்து வந்த தி.மு.க.-வினர் இது பற்றி விளக்கம் கேட்பது வேடிக்கையாகத்தான் உள்ளது.

பிற்பகல் 1–30

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் உரிய நிதி வழங்கப்படவில்லை என இங்கே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள்கூட இதை இங்கே வலியுறுத்தினார்கள். பலமுறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த அவர்-- வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, அதுவும் இப்பேரவையின் அனுமதி பெற்றுவிட்டால், அந்த நிதியை யாரும் மறுக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 2 கோடி ரூபாய் வீதம் 470 கோடி ரூபாய் வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு, அதற்கான அனுமதியையும் இந்தச் சட்டமன்றம் வழங்கியுள்ளது. எனவே, இதற்கான நிதி இல்லை என்று கூறுவது ஒரு தவறான கருத்தாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பணிகளைச் செயல்படுத்த அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களால்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

எடுக்கப்பட வேண்டிய பணிகள் குறித்த பட்டியலை மாவட்ட ஆட்சியர்களிடம் வழங்கி, பணி அனுமதி பெற்று, அவை செயல்படுத்தப்படும்போது செலவுப் பட்டியல் சமர்ப்பித்து செலவு மேற்கொள்ள வேண்டும். இதற்கான நிதி, சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மறுக்க இயலாது. இத்திட்டங்களில் எடுக்கப்பட்ட பணிகளுக்குக்கூட இதுவரை 30 சதவீதத்திற்கும்மேல் செலவிடப்பட்டுள்ளது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இதற்கான நிதியாதாரம் வரவு–செலவுத் திட்டத்தில் உள்ளது. மாநில அரசின் நிதி நெருக்கடி காரணமாக போதுமான நிதி வழங்கவில்லை என்று கூறுவது ஒரு கற்பனையான வாதம்தான் என்ற உண்மையை தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. அது Collector–க்குப் போகவில்லை என்றும் நான் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பொழுதும் நான் சொல்கிறேன், நீங்கள் ஒதுக்கிய நிதி 2 கோடி ரூபாய் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சென்று சேர்ந்து விட்டதா என்று கேளுங்கள்; ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதுபற்றித் தெரிவித்தீர்களா என்று கேளுங்கள். ஏனென்று கேட்டால், நாங்கள் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று எழுதிக் கொடுக்கிறோம். நிதியில்லாத காரணத்தால் அந்தப் பணிகளை எடுக்க மாட்டேன் என்கிறார்கள். 50 இலட்சம் ரூபாய்தான் வந்தது என்று சொல்கிறார்கள். நீங்கள் நிதி ஒதுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை; இந்தச் சட்டமன்றம் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை: உங்கள் நிருவாகம், செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வரவில்லை. நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை விசாரித்துவிட்டுச் சொல்லுங்கள், எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கூற்றுப்படி, அவர் கொடுத்த பணிகளை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விளக்கம் பெறப்பட்டு, உரிய வழிமுறையின்படி செயல்படுத்தப்படும் என்பதனையும், அதற்குரிய நிதி அங்கே ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது என்பதனையும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 235 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 2 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எங்கள் திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவில் 7 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். மாவட்ட அதிகாரிகள் தலா ரூ.50 இலட்சம் வீதம் ரூ.3½ கோடி தான் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். மேலும், வேலை செய்ததற்கான பணம் வரவில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பணம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாமல் சொல்கிற குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள இயலாது. மாவட்ட ஆட்சியரிடம் உரிய விளக்கம் கேட்கப்படும்.

அடுத்து, மத்திய அரசின் பண மதிப்பிழப்புப் பற்றிப் பேசும்பொழுது, மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் தேதி மாண்புமிகு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

பாரதப் பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை அறிவித்தவுடன் அடுத்த நாள் காலையிலேயே மத்திய அரசு அறிவுரைகளுக்கிணங்க, மாநிலம் முழுவதிலும் உள்ள வங்கிகளுக்கும், ATM–களுக்கும் பாதுகாப்பை வழங்க மாநில அரசு உத்தரவிட்டது. இதனால்தான், தமிழ்நாட்டில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை. இதைத் தொடர்ந்து ரிசர்வ் வங்கியின் அலுவலர்கள் மற்றும் வங்கிப் பிரதிநிதிகளின் மூலமாக நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதி காக்கவும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மக்களுக்குத் தேவையான பணத்தினை தர முடியாத நிலை ஏற்பட்டபொழுது, ரிசர்வ் வங்கி அலுவலர்களுடன் மாநில அரசு தொடர்பு கொண்டு, அவர்களால் முடிந்த அளவு அதிகமான நிதியைப் பெற்றுத் தந்துள்ளோம். 13–11–2016–லிருந்து மத்திய கூட்டுறவு வங்கிகள், பழைய செல்லாத நோட்டுகளை வாங்கக் கூடாதென மத்திய அரசு அறிவித்ததால், அந்தத் தடையை நீக்க வலியுறுத்தினோம்; அந்தத் தடையும் நீக்கப்பட்டது. தமிழகத்தைத் தொடர்ந்து பிற மாநிலங்களும் இதை வலியுறுத்தின. மத்திய ரிசர்வ் வங்கி வழங்கும் புதிய நோட்டுகள் பற்றிய விவரங்களை, மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. எனவே, மாநில அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஒரு தவறான வாதமாகும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து நீர்வள ஆதாரத்தைப் பெருக்குவது என்பது மிகவும் முதன்மையான பணி என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதன்படி, நீராதாரங்களைப் பராமரித்து நீரை முறையாகச் சேமித்து வைத்தால், கடும் வறட்சியையும் நாம் எளிதில் எதிர்கொள்ள முடியும். இத்தகைய ஆதாரங்களை மக்கள் பங்களிப்போடு பாதுகாத்து வந்த முறைதான் குடிமராமத்து முறை. இந்த முறை காலப்போக்கில் மறைந்து, அரசே இப்பணிகளைச் செய்ய நேரிட்டது. இதனால் இந்த நீர் ஆதாரங்களின் பராமரிப்பில், மக்களின் ஈடுபாடு குறைந்து விட்டது. இவற்றையெல்லாம்



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கருத்தில் கொண்டுதான், குடிமராமத்து முறையைப் புதுப்பிக்க, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதன்படி, அரசாணை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள்கூட வரவேற்றுப் பேசினார்கள். குடிமராமத்துத் திட்டத்தின்படி, பொது மக்கள், உள்ளூர் அமைப்புகள், பாசன அமைப்புகள் 10 சதவிகிதப் பங்களிப்பினை, பொருளாகவோ அல்லது மனித ஆற்றலாகவோ வழங்க முன்வந்தால், 10 இலட்சம் ரூபாய் வரையிலான திட்டப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கி, அவர்களே அப்பணியைச் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. ஆறுகளைச் சுத்தம் செய்தல், குளங்களைச் சீரமைத்தல், கால்வாய்களைச் சீரமைத்தல் போன்ற பல்வேறு நீர்நிலைகளை இத்திட்டத்தின்மூலம் சீரமைக்கலாம். இத்திட்டத்தினைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் பொது மக்களும், அமைப்புகளும், மாவட்ட ஆட்சியரை அணுகி, இத்திட்டத்தைச் செயல்படுத்தலாம். இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டப் பணிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்தி, பொது மக்களும், மாவட்ட ஆட்சியரை அணுகி தங்களை இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். திட்டப் பணிகள் அனைத்தும் 2017 மார்ச் மாதம் இறுதிக்குள் மாநிலம் முழுவதும் ஒரே நாளில் தொடங்கப்பட்டு, இது ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நிதி, அடுத்த ஆண்டு, 300 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அது படிப்படியாக மேலும் உயர்த்தப்பட்டு, அடுத்த ஓரிரு ஆண்டுகளில், நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகள் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகச் செயல்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது, ஆளுநர் உரையில் தொடர் நடவடிக்கைகளும், வளர்ச்சித் திட்டங்களும் இடம் பெற்றிருக்க வேண்டுமென்று தெரிவித்தார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, அரசினுடைய Statement of Policy அதாவது, கொள்கை அறிவிப்பு என்ற இலக்கணத்தை மீறி, எதை எதையோ பட்டியல் போட்டு,

பக்கத்தை நிரப்பியிருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். ஒருவர் வளர்ச்சித் திட்டங்கள் இடம் பெற்றிருக்கவில்லை என்கிறார்; மற்றொருவர் கொள்கை அறிவிப்பு என்பதைவிட திட்டங்களை பட்டியலிட்டு இருப்பதாகச் சொல்லியுள்ளார். ஆளுநர் உரை மீது குறைகளையே கூற வேண்டுமென்று எண்ணியதால்தான், இத்தகைய முரண்பாடான கருத்துகள் தி.மு.க-.வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களாலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன என்று கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கொள்கை அறிவிப்பு என்ற இலக்கணத்தையும் மீறி, மற்றவற்றையும் பட்டியலிட்டிருக்கிறார்கள் என முதலில் தெரிவித்துவிட்டு, இந்த ஆளுநர் உரையில் கொள்கை அறிவிப்பு எதுவும் இல்லை என பின்னர் தெரிவித்துள்ளார். கொள்கை அறிவிப்பு பற்றி அவருக்கு ஏன் இவ்வளவு குழப்பம் எனத் தெரியவில்லை.

ஆளுநர் உரையில் துறை வாரியான கொள்கைகள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. நீர் ஆதார மேலாண்மை, ஏழைகளுக்கான வீட்டு வசதி, வறுமை ஒழிப்பு, திறன் மேம்பாடு மற்றும் பொதுச் சுகாதாரம் என்ற மாநில அளவிலான 5 இயக்கங்கள் மற்றும் 11 சிறப்பு நோக்கு பெரும் திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டிருப்பது கொள்கை விளக்கம் அல்லாமல் வேறு என்ன? *(மேசையைத் தட்டும் ஒலி)* பசுமைப் பரப்பை அதிகரிப்பது; கச்சத் தீவை மீட்பது; தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் மொழி ஆகியவற்றை காப்பதற்கான நடவடிக்கைகள்; கட்டமைப்பு மேம்பாடு; குடிமராமத்து; மானாவாரி வேளாண்மை இயக்கம்; வேளாண் சந்தைகளை ஒருங்கிணைத்தல்; கால்நடை மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு; ஆழ்கடல் மீன்பிடி ஊக்குவிப்பு; கூடுதல் மின் உற்பத்தி; சாலைக் கட்டமைப்பு மேம்பாடு; கிராமக் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்; நகர்ப்புற கட்டமைப்பு மேம்பாடு; தொழில் வளர்ச்சி; தொழில் பயிற்சி அமைப்புகளை வலுப்படுத்துதல்; மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என துறை வாரியாக கொள்கை விளக்கங்கள் இங்கே சொல்லப்பட்டுள்ளன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது உரையின் இறுதியிலே நடுக்கடலில் உள்ள ஒருவர் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் உள்ள நிலை பற்றி சொல்லியுள்ளார். The Rime of the Ancient Mariner என்னும் ஆங்கிலக் கவிதையில் 'Water water





everywhere; nor any drop to drink' என்றுள்ள வரிகளைத்தான் இவ்வாறு மொழி பெயர்த்துள்ளார். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவர் கூறும் நடுக்கடலில் உள்ள தண்ணீர், இவரது பேச்சின் ஆரம்பத்தில் இல்லை இல்லை என்று கூறிய கற்பனைப் பிரச்சினைகள்தான். கற்பனைப் படகில் உட்கார்ந்து கொண்டு, இல்லாத பிரச்சினைகளை எண்ணி மாய்ந்தால், நல்ல தண்ணீர் ஒரு துளியும் கிடைக்காது என்பது உண்மைதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிரச்சினைகளாக நினைத்துச் சொல்வதுதான் கானல் நீர். எவ்வளவோ கருத்துகள் இந்த உரையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த உரை கண்ணுக்குத் தெரியாத கானல் நீர் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.

*பிற்பகல் 1–40*

ஒருவர் காணுகின்ற காட்சி, அவரவர் பார்வையைப் பொருத்தும், அவரவர் மனதைப் பொருத்தும் இருக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒருவரின் பார்வையில், தாகம் தீர்க்கும் தண்ணீராக இருப்பது, இன்னொருவர் பார்வைக்கு கானல் நீராகத் தெரியும். கானல் நீர் என்பது, அவரவர் பார்வையில் உள்ள கோளாறே தவிர, உண்மையில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆளுநர் உரை நம் தாகம் தணிக்கும் தண்ணீர் என்பதைத் தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் இதை கானல் நீர் என்பது, இது ஒரு காட்சிப் பிழை என்றே கருதுகிறேன்.

ஆளுநர் உரையைத் தொடர்ந்து வரவு–செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதில் தேவைக்கேற்ப புதிய திட்டங்கள் சேர்க்கப்படும். பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நிலையில், ஆண்டுதோறும் புதிய திட்டங்கள் போட வேண்டும் என்ற அவசியமும் இல்லை. மக்களின் தேவைக்கும், மாறிவரும் சூழலுக்கும் ஏற்ப திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும். புதிய திட்டங்களை, தேவைக்கேற்ப கொண்டு வர வேண்டும். இவை அடுத்து வரவுள்ள, வரவு–செலவுத் திட்டத்தில்தான் கொண்டு வரப்படும். அந்தவகையில் ஆளுநர் உரையில் தெரிவித்துள்ளவாறு, புதிய வழிகளையும், புதுமையான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித்தரும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரக்கப் பேசும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு உள்ளதைச் சொல்லவும் முடியவில்லை; உண்மையை ஏற்கவும் மனமில்லை. அம்மா அவர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்ததைப் பாராட்ட மனமில்லை. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் முதற்கட்டமாக 142 அடி உயர முழு முதற்காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்கிற உண்மையை ஏற்க மனமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மூன்று ஆண்டுகளாக, உணவு தானிய உற்பத்தி, 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சி உள்ளதை ஏற்க மனமில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையை முடிக்கட்டும். திரு. துரைமுருகன், பிறகு பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அவர்கள் case போட்டார்கள், இவர்கள் case போட்டார்கள். இரண்டு case–ஐயும் Supreme Court–க்கு மாற்றினோம். Supreme Court–ல் decision கொடுத்தார்கள். அந்த decision–ஐ amendment செய்துவிட்டு அதன் பிறகு நாங்களும், திரு. லட்சுமணன் கமிட்டி போட்டு சென்றோம். நாங்கள் போகிறபொழுது உங்களுக்குத் தீர்ப்பு வந்தது. கொடைத் தேங்காய் மாதிரி எங்களுடையது, எங்களுடையது என்கிறீர்கள். அந்த இரண்டு case–ஐயும் மாற்றியது கலைஞர், Supreme Court–க்குக் கொண்டு சென்றது கலைஞர், வாதாடியது கலைஞர், கமிட்டி போட்டது கலைஞர், திட்டத்தைக் கொண்டு வந்தது கலைஞர். சந்தடி சாக்கில் நீங்கள் அடித்துக்கொண்டு போகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2006 வரையிலான மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில், முல்லைப் பெரியாறு நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தினார்கள். அதன் காரணமாகத்தான் 2006 பிப்ரவரி மாதம் உச்ச நீதிமன்றம் முல்லைப் பெரியாறு நீர்மட்டத்தை 142 அடியாக தேக்கிக்கொள்ளலாம் என்றும், அங்கே



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இருக்கின்ற பேபி அணை, சிற்றணை என்ற இரண்டு மண் அணைகளை முழுவதுமாகச் சீர் செய்தவுடன் அதனுடைய முழு கொள்ளளவான 152 அடியாகத் தேக்கிக் கொள்ளலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பெற்றுத் தந்தார்கள். உடனே கேரள அரசு என்ன செய்தது? கேரள சட்டமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடிதான் என்று அவர்கள் ஒரு வரையறை செய்து, பல்வேறு அணைகளின் நீர்மட்டத்தை அவர்கள் இறுதி செய்தார்கள். அதில் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடிதான் என்று வரையறை (Ceiling) செய்து ஓர் அவசரச் சட்டத்தை, அதாவது amendment கொண்டு வந்தார்கள். உடனே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு பெற்ற பிறகு, ஒரு மாநில அரசு அதன் சட்டமன்றத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை என்ற வாதத்தினை உச்ச நீதிமன்றத்தில் உடனடியாக மார்ச் மாதத்தில் எடுத்து வைத்தார்கள். மார்ச் மாதத்தில் உங்களுக்கெல்லாம் தெரியும், Election Notification வந்துவிட்டது. 2006–ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. 2006–லிருந்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், இதெல்லாம் சரியில்லை, இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வாய்ப்புக் கேட்டார், வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இப்படி குறுக்கீடு செய்கிறீர்களே? இது என்ன முறை? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. ஆஸ்டின், என்ன சொல்கிறார்? என்ன சொல்ல வேண்டும்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** 2006 பிப்ரவரி மாதத்தில் கேரள சட்டமன்றத்தில் அவசரச் சட்டம் கொண்டு வந்துள்ளார்கள், 136 அடிதான் ceiling என்று. மார்ச் மாதம்தான் நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளீர்கள். ஒரு மாத காலம் ஏன் இடைவெளி வந்தது? உடனடியாகக் கேட்டு வாங்கியிருக்கலாமே? (குறுக்கீடுகள்)

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு சட்டம் நன்றாகத் தெரியும். திரு. ஆஸ்டின் அவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை என்றே நான் கருதுகிறேன். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழுகின்றபோது, முதலில் மத்திய அரசின் கவனத்திற்கு அதனைக் கொண்டுவர வேண்டும். மத்திய அரசு அதில் தலையிட்டு நல்ல முடிவை, உரிமையாக இருக்கின்ற மாநிலங்களுக்குத் தரவில்லையென்றால், அதன் பின்னர்தான் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படும். ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்துகின்ற அரசாக மத்திய அரசு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்குரிய பரிகாரம் இல்லாத காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஆன கால அவகாசம்தான் அந்த 24 நாட்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். மார்ச் 1–ல் notification வந்து விட்டது. நீங்கள் ஆட்சிக்கு வந்து விட்டீர்கள். 2006 முதல் 2011 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்த தீர்ப்பினை உறுதிப்படுத்துகின்ற அரசாக நீங்கள் செயல்பட்டீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இல்லை. 2011–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன், இந்தப் பிரச்சினையை மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்குகளைத் துரிதப்படுத்தி, விசாரணையைச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய சட்டப் போராட்டத்தின் முடிவுகள்தான், 2006–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்த, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்புக்கு உத்தரவாதத்தை மீண்டும் 2013–ல் பெற்றுத் தந்த முதலமைச்சர்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே பணிவோடு



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) யாரைச் சொல்கிறார்? பேசிக் கொண்டிருக்கும்போது, எப்போதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஒரு speed break போடுவார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவை விஞ்சி உள்ளதை ஏற்க உங்களுக்கு மனமில்லை.

வேளாண்மைத் துறையிலும், கால்நடைத் துறை உள்ளிட்ட முதன்மைத் துறைகளிலும் செயல்படுத்தப்பட்டு வரும் பல முன்னோடித் திட்டங்களை ஏற்க மனமில்லை.

நெல்லுக்கும், கரும்புக்கும், மத்திய அரசு வழங்கும் அடிப்படை ஆதார விலையைவிட மாநில அரசு கூடுதலாக வழங்குவதைப் பாராட்டுவதற்கும் மனமில்லை. எண்ணற்ற நீர் ஆதார மேம்பாட்டுப் பணிகளை, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்துவதை ஏற்கின்ற மனமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கல்வித் துறையில் மடிக் கணினி முதல் தேவையான அனைத்து உதவிகளையும், உபகரணங்களையும் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தியதை ஏற்கவும் உங்களுக்கு மனமில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது உரையை முடிக்கப் போகிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறை செய்துள்ள புரட்சியைப் பாராட்ட மனமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016–ல் உணவு தானியத்தை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னாக நீங்கள் உற்பத்தி செய்துவிடுங்கள், அப்போது அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) இந்த ஆண்டு...

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நேற்று இல்லை, இல்லை என்று நீங்கள் சொன்னீர்கள். அதற்காகத்தான், எங்களுடைய சாதனைகளைச் சொல்கிறோம். சொல்ல வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கிறது. முதியோர் உதவித் தொகையை மாதம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியதோடு தாலிக்குத் தங்கம் எட்டு கிராமாக உயர்த்தியது; (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத்தை உற்பத்தி செய்கின்ற நாடுகூட அதைக் கொடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி உயர்த்தி வழங்குவது என எண்ணற்ற சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதை ஏறெடுத்துப் பார்க்கவும் உங்களுக்கு மனமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு எண்ணவும் இயலா இமாலயச் சாதனைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிகழ்த்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கக்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏனோ மனமில்லை, அது ஏன் என்று எனக்கும் புரியவில்லை.

ஆளுங்கட்சியின் சாதனைகளை மறைத்துப் பேசுவதும், எதிர்க்க வேண்டியதும்தான் அவரது தர்மம் எனக் கருதுகிறாரோ என்னவோ தெரியவில்லை. இல்லை, இல்லை என்பதே அவரின் கற்பனை. ஆங்கிலத்தில் Wishful Thinking எனச் சொல்வார்கள். இருக்கின்ற ஒன்றை, இல்லாததுபோல், அவரவர் விருப்பப்படி கற்பனை செய்துகொள்வார்கள். அப்படித்தான், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றும் உள்ளது. பூனை தன் கண்களை மூடிக்கொண்டால், உலகம் இருண்டு விடப்போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தகைய சாதனைகளைச் செய்துள்ளார்கள் என்பதையும், அம்மா அவர்களின் வழி நடக்கும் இந்த அரசு, எத்தகைய திட்டங்களை திறம்படச் செயல்படுத்துகிறது என்பதையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் தனது உரையை முடிக்கப் போகிறார். கொஞ்சம் இருங்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதனால்தான் வரலாற்றுச் சாதனையாக 32 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆளுகின்ற கட்சியையே மீண்டும் தேர்ந்தெடுத்து, அரசாட்சி செய்திடும் உரிமையை மீண்டும் அம்மா அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள், பல்வேறு நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். மக்களுக்கு நன்மை பயக்கும் ஆலோசனைகளை, உறுதியாக இந்த அரசு நிச்சயம் ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், தமிழகம் முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும் என்பதை இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், எங்களுக்கு பாராட்ட மனமில்லை என்று சொன்னார். மனம் திறந்து சொல்கிறேன். நீங்களே முதல்வராக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எல்லா சக்தியையும் பெற்றிருக்க வேண்டும். உங்களுக்கு வேண்டிய சக்தியை நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு அந்தப் பக்கத்திலிருந்து எதுவும் வராமல் இருக்க வேண்டும். நீங்களே முதல்வராக இருக்க வேண்டுமென்று மனமாரப் பாராட்டி, இந்த 5 ஆண்டுக்காலம் நீங்களே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட பதிலை, ஆளுநர் உரையிலே நடைபெற்றிருக்கக்கூடிய

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 பிப்ரவரி 1

விவாதத்திற்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். எடுத்து வைத்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய நான் எடுத்து வைத்த அந்த உவமானங்களையெல்லாம் சுட்டிக்காட்டி இதில் கொள்கைகளே இல்லை; ஆக, வரக்கூடிய பட்ஜெட்டிலேதான் முழு விவரங்கள் எல்லாம் வரும், இதையெல்லாம் அறிந்துகொள்ள முடியாத நிலையில் இவர்கூட இருக்கிறாரே என்ற நிலையிலே சில கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, சத்துணவுப் பணியாளர்களுடைய பணி மற்றும் ஊதியம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, முன்னுரிமை அடிப்படையிலே அது மேற்கொள்ளப்படும் என்று 2011 ஆம் ஆண்டினுடைய தேர்தல் அறிக்கையிலே நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அது என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி. அதேபோல, அத்திக்கடவு—அவினாசித் திட்டம் குறித்து நான் நேற்றைக்குக்கூட பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னேன். மத்திய நீர்வளத் துறை இதுசம்பந்தமாக தமிழக அரசிடம் விளக்கம் கேட்டு இன்னும் அந்த விளக்கம் மத்திய அரசுக்கு வந்து சேரவில்லை, அந்த நிருவாகத்திற்கு வந்து சேரவில்லை என்பதை தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக நான் பெற்று, ஆதாரத்தை கையிலே வைத்திருக்கிறேன். அதைத் தொடர்ந்து இன்னொன்று, லோக் ஆயுக்தா. சென்ற ஆளுநர் உரையிலே நிச்சயமாக அதைக் கொண்டு வருவோம், அந்த அமைப்பை உருவாக்குவோம் என்று உறுதி தந்திருந்தீர்கள். அந்த உறுதியும் நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆளுநர் உரையிலும் எடுத்துச் சொல்லப்படவில்லை. இதையெல்லாம் வைத்துத்தான் இது கானல் நீர் என்று நான் எடுத்துச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரிந்துகொண்டால் சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்த அளவுக்கு அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட்டது என்கின்ற பட்டியல் என்னிடத்தில் இருக்கின்றது. அதைச் சொல்வதற்கு நீங்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும். இருக்கட்டும். இந்த அத்திக்கடவு—அவினாசித் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் மிகவும் விளக்கமாக, விரிவாக, திடமாகச்



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்த பிறகு அவர்கள் நிதியுதவி தந்தாலும், தராவிட்டாலும் மாநில அரசே தன்னுடைய சொந்த நிதியில் அதைச் செயல்படுத்தும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உறுதியாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழிநடக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அதை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுமையாக இருங்கள், உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணுலகை விட்டு மறைந்துவிட்டார்கள் என்பதை எங்கள் மனம் ஏற்க மறுக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று துடிக்கிறது எங்கள் இதயம். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்து வந்த காலமும், நடந்து வந்த பாதையும் இன்னும் அவர்கள் நம்முடன்தான் இருக்கிறார்கள் என்று எங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காலையில் விழித்ததும் காணுகின்ற கருணை ஒளியாய், கையூன்றி எழும்போது தூக்கிவிடும் அருட்கரமாய், எந்தவொரு செயலைச் செய்யும்போதும் 'இப்படிச் செய்யுங்கள்' என்று சொல்கின்ற அருள்வாக்காய், நடந்து செல்ல வேண்டிய பாதை எது என்று வழிகாட்டும் ஒளிவிளக்காய் மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். விண்ணுலகிலிருந்து அருளாசி வழங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் பெருமைப்படும்படியாகவே செயலாற்றுவோம், மக்கள் பணியாற்றுவோம் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் ஒவ்வொருவரும் உறுதிபூண்டிருக்கிறார்கள். இந்த உறுதிப்பாட்டை ஒரு கணமும் மறக்காமல் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் இம்மி அளவேனும் தடம் புரளாமல் நாங்கள் வெற்றி நடைபோடுவோம்! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருப்பெயருக்கு, புகழுக்கு என்றும் பெருமை சேர்ப்போம் என்று உறுதி கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 பிப்ரவரி 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோருக்கு மிக, மிக, மிக திருப்தியாக இருக்கும் என நான் நம்புகிறேன். எனவே, இந்தப் பதிலுரையை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுத்த திருத்தங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். உங்கள் தலைவர்கள் இரண்டு பேரும் பேசிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள், உட்காருங்கள். திருமதி விஜயதரணி, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதலமைச்சர். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எழுந்து பேசினால் என்ன அர்த்தம்? திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். திருமதி விஜயதரணி, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் வீற்றிருந்த இந்த அவையில், அவர்கள் இல்லாத சூழ்நிலையில், அவருடைய அந்தப் பிரமாண்டம், அவருடைய அந்தப் பேச்செல்லாம் நமக்கு இன்றைக்கு நினைவுக்கு வருகிறது. இருப்பினும் இன்றைக்கு நாம் ஒரு நல்ல, எளிமையான



2017 பிப்ரவரி 1] [திருமதி எஸ். விஜயதரணி]

முதலமைச்சரைப் பெற்றிருக்கிறோம். அவரைப் பொறுத்தவரை, இன்றைக்கு அவர் அளித்த பதிலுரையின் இடையில் குறுக்கீடுகள் நிறைய அனுமதிக்கப்பட்டு, ஒரு வித்தியாசமான அவையை நாம் பார்க்க முடிந்தது; வரவேற்கிறோம். இதுபோன்ற ஜனநாயகம் இந்த அவையில் ஏற்பட வேண்டுமென்று என்னைப் போன்றவர்கள் ஆதங்கத்தோடு எதிர்பார்த்தது இன்றைக்கு நிறைவேறத் தொடங்கியிருப்பதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

அடுத்து, சீருடைப் பணியாளர் தேர்வுகளில் வயது உச்சவரம்பினால் பாதிக்கப்பட்டவர்கள், இடையில் நான்கு, ஐந்து ஆண்டுகள் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஆர்வத்திற்காக அந்த வயது உச்சவரம்பு தளர்த்தப்பட்டு 31 வயதாக நடைமுறைப்படுத்தப்படுமா என்று கேட்டிருந்தேன். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கான அந்த ஒதுக்கீடுகளையெல்லாம் இணைத்துக்கொண்டு, உச்சவரம்பைத் தளர்த்த அரசு முன் வரவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். அதற்கு ஒரு சாதகமான பதில் கிடைத்தால் நன்றாக இருக்கும். இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள் சீருடைப் பணியில் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி விஜயதரணி, ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கவேண்டும். விவாதமெல்லாம் இல்லை.

**திருமதி எஸ். விஜயதரணி:** விவாதம் இல்லை. உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் உரையிலே தமிழ்நாட்டில் 140 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வறட்சியைப் போன்று கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இன்றைக்கு விவசாயம்

[திரு. அர. சக்கரபாணி] [2017 பிப்ரவரி 1

மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரசிடம் 40,000 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாகக் கேட்டிருக்கிறார்கள். அதை வலியுறுத்தி, அந்த நிதியைப் பெற்று, விவசாயிகள் வாங்கியிருக்கின்ற கூட்டுறவுக் கடன் அனைத்தையும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற அத்தனை கடன்களையும் முழுமையாக இரத்து செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்” என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களால் 27–1–2017 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2017 பிப்ரவரி 1]

## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2017) மற்றும் 2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2017) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2—00

## 11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2017), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1–2–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2017 பிப்ரவரி 1

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்ன சொல்லுங்கள்?*

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாக வருகிற ஜூன் 30 ஆம் தேதி வரை தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார். இதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முதலிலே எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், 1994 ஆம் ஆண்டு பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி 5 ஆண்டுக்கு ஒருமுறை உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்று மத்திய அரசு சட்டம் கொண்டுவந்த காரணத்தால், 1996, 2001, 2006 மற்றும் 2011 ஆகிய நான்கு முறை உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் நல்லமுறையிலே பணியாற்றினார்கள். ஏனென்றால், அந்தப் பிரதிநிதிகள் இருந்தால்தான் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை, சாலை வசதி, தெரு விளக்கு, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியும். தனி அலுவலர்களால் அந்தப்

@ *30–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*



2017 பிப்ரவரி 1] [திரு. அர. சக்கரபாணி]

பணிகளை நிறைவேற்ற முடியாது. நீங்கள் ஜூன் 30 ஆம் தேதி வரை தனி அலுவலர்களுடைய பதவியை நீட்டிப்புச் செய்திருக்கிறீர்கள். அதற்குக் காரணமும் சொல்லியிருக்கிறீர்கள்; மார்ச் 2 ஆம் தேதி பள்ளிகளுக்கான தேர்வுகள் நடைபெறுவதனால் தேர்தல் நடத்த முடியாது, ஆசிரியர்களை வைத்துத்தான் தேர்தலை நடத்த முடியும், பள்ளிக்கூடங்களில்தான் தேர்தலை நடத்த முடியும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்வது, இன்றைக்கு ஆசிரியர்கள் இல்லாவிட்டாலும், அரசு அலுவலர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் ஏதாவது ஒரு நாளிலே அந்தத் தேர்தலை முன்கூட்டியே நடத்தி, உடனடியாக உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த அக்டோபர் மாதமே உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்று, மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புக்கு வந்திருப்பார்கள். ஆனால், 26–9–2016 அன்று ஞாயிற்றுக்கிழமை இரவிலே தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியீடு செய்கிறது. அடுத்த நாளே மனுதாக்கல் என்று சொல்லி, அதிலே பல்வேறு விதிகளைக் கடைப்பிடிக்கவில்லையென்று நீதியரசர் மரியாதைக்குரிய கிருபாகரன் அவர்கள், மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட 26–9–2016 ஆம் தேதியிட்ட அறிவிக்கை சட்ட விதிகளுக்குப் புறம்பாக உள்ளதாகவும், அறிவிக்கையில் வெளிப்படைத் தன்மை இருக்கவேண்டுமென்றும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் உரிய கால அவகாசம் வழங்க வேண்டுமென்றும், பழங்குடியினருக்கு உரிய இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் பல்வேறு நிபந்தனைகளைச் சொல்லி, டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லியும், சொன்ன அந்த நிபந்தனைகளையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றாமல், தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்தி வருகிறது.

பிற்பகல் 2–05

நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீதியரசர் அவர்கள் என்னென்ன நிபந்தனைகளை விதித்துள்ளார்களோ, அவற்றையெல்லாம் உடனடியாக நிறைவேற்றி உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல், உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வெளி மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும்.

சுழற்சி முறை, இட ஒதுக்கீடு ஆகியவற்றைச் சரியாகப் பின்பற்ற வேண்டும். 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை online வாயிலாக தாக்கல் செய்ய வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்களில் web camera பொருத்தப்பட வேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தலில், இப்போது பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் EVM பயன்படுத்துகிறோம். அதேபோல், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் ஐம்பதாயிரம் பேர் அரசியல் கட்சி சின்னத்தில்தான் போட்டியிடுகிறார்கள். அதேபோல், ஐந்தாயிரம் வாக்கு எண்ணிக்கை கொண்ட ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களும் அரசியல் கட்சி சின்னத்தில்தான் போட்டியிடுகிறார்கள். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் பதவிக்கான 655 இடங்களுக்கும், ஒன்றியக் குழு உறுப்பினர் பதவிக்கான 6,471 இடங்களுக்கும் கண்டிப்பாக Electronic Voting Machines வைத்து தேர்தல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 12,524 ஊராட்சிகளில் கிராமப் பஞ்சாயத்து தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள் பதவிகளுக்கு சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்கள். இரண்டு வெவ்வேறு வண்ணங்களில் வாக்குச் சீட்டினை அச்சடித்து, அதிலே எந்த ஊராட்சி ஒன்றியம், எந்த ஊராட்சி, வேட்பாளருடைய பெயர், அவரது பெயருக்கு எதிராக அவரது சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டைப் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால், ஏற்கெனவே ஆறு கோடி வாக்குச் சீட்டு அச்சடித்துவிட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். பூட்டு சின்னம், சாவி சின்னம் இதெல்லாம் வாக்குச் சீட்டில் எங்கிருக்கிறது என்றே தெரியாமல், அச்சீட்டை ஜோபியிலே வைத்துக் கொண்டுபோய் அடுத்த பஞ்சாயத்தில் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைக்கு இந்த அரசிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எந்தெந்தப் பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகிறார்களோ, அந்தச் சீட்டில் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் இருக்க வேண்டும், ஊராட்சி மன்றத்தின் பெயர் இருக்க வேண்டும், வார்டு எண் இருக்க வேண்டும், வேட்பாளர் பெயர் இருக்க வேண்டும், வேட்பாளரின் சின்னம் இருக்க வேண்டும். தேர்தலை நடத்தும் சமயத்தில் இதையெல்லாம் கடைப்பிடிக்க





வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, ஊராட்சி மன்றத் தலைவருக்கும், வார்டு உறுப்பினருக்கும் தனித்தனியே வாக்குப் பெட்டி வையுங்கள். ஏனென்றால், எண்ணிக்கை சீக்கிரம் முடிந்துவிடும். வாக்கு எண்ணிக்கை மையத்தில், மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்றத் தலைவர், வார்டு உறுப்பினர் என எல்லோரும் ஒரே இடத்தில் நின்றுகொள்கிறார்கள். வாக்குச் சீட்டைப் பிரித்துப் போடும் இடத்தில் பிரச்சினை ஏற்பட்டு, பின்னர் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது. சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் போல EVM வைத்துவிட்டால் அன்று மாலைக்குள்ளேயே எண்ணிக்கை முடிந்துவிடும். வார்டு உறுப்பினர் பதவிக்கு ஒரு இலட்சம் பேர்; அவர்களின் வாக்கு எண்ணிக்கை முடிந்து அவர்கள் சென்று விடுவார்கள். அடுத்து ஊராட்சி மன்றத் தலைவர் 12,524; அவர்கள் வாக்கு எண்ணிக்கை முடிந்ததும் ஒன்றியக் குழு உறுப்பினர், மாவட்டக் கவுன்சிலர் வாக்கு எண்ணிக்கை நடைபெறும். இவற்றில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை இல்லாமல் நேர்மையாக, ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்த வேண்டுமென்றால் ஒன்றியக் குழு உறுப்பினருக்கும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினருக்கும் Electronic Voting Machines கண்டிப்பாகப் பயன்படுத்த வேண்டும். அதேபோல, ஊராட்சி மன்றத் தலைவருக்கும், வார்டு உறுப்பினருக்கும் தனித்தனி வண்ணத்திலே வாக்குச் சீட்டு வழங்கி, நான் சொன்ன கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி, நேர்மையாகத் தேர்தல் நடத்தினால் எளிதாக ஒரே நாளில் வாக்கு எண்ணிக்கையை முடித்துவிடலாம். இல்லையென்றால், ஐம்பதாயிரம் ஓட்டுகளை எண்ணுவதற்கு காலையில் ஆரம்பித்து அடுத்த நாள் வரை அதாவது இரண்டு நாட்கள் வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. போராட்டம், மறியல், ஆர்ப்பாட்டம் என பெரிய சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகள் வருகின்றன. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த நடைமுறைகளையெல்லாம் நீங்கள் பின்பற்ற வேண்டும். தேர்தல் நடத்துவதற்கு முன்பு, அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் கருத்துகளையும் கேட்க வேண்டும். கால அவகாசம் எடுக்காமல் விரைவிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடத்தினால்தான் மத்திய அரசிலிருந்து நிதி வரும், இல்லையென்றால் வராது. எனவே,

[திரு. அர. சக்கரபாணி] [2017 பிப்ரவரி 1

நீங்கள் சொல்லியிருப்பதுபோல் ஜூன் மாதம் வரை காலந்தாழ்த்தாமல், விரைவாக உள்ளாட்சி மன்றத் தேர்தலை ஓரிரு மாதங்களில் நடத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சி சார்பில் இரண்டு பேர் வாய்ப்பு கேட்கிறீர்கள். யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) இருவரில் யாராவது ஒருவர் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால், ஜனநாயக ரீதியாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அனைத்து வசதிகளும் கிடைப்பது பஞ்சாயத்துத் தேர்தலில்தான். ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என்பதுதான் மக்கள் மத்தியிலே உள்ள குழப்பம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) அமைதி, அமைதி.

பிற்பகல் 2–10

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** பஞ்சாயத்துத் தேர்தல், ஒட்டுமொத்தத் தமிழக மக்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. அடிப்படை வசதிகளைச் சரியாகச் செய்வதற்கு பஞ்சாயத்துத் தேர்தல்மூலம் பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் வந்தால்தான் மக்களுக்கு அதனைக் கொண்டு செல்ல முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தவகையில் கொண்டு செல்ல முடியாது. ஆனால், அப்படிப்பட்ட பெரும் இழப்பு, ஜனநாயக சீர்குலைவு ஏற்பட்டுவிட்டதே என்பதுதான் வருத்தம். இதைச் சரி செய்வதற்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும், முறையாக நடத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடா அவர்கள் சொன்னதைப்போல, துரிதமாக இந்தப் பணியைச் செய்வதற்கு, இந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன் வரவேண்டும். மக்களுக்கு ஜனநாயகக் கடமைகளை ஆற்ற வேண்டும் என்ற வகையிலே தேர்தல் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி விரும்புகிறது. ஆகவேதான் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்துவிட்டீர்கள். மானியக் கோரிக்கையில் பேசுகிறமாதிரி பேசிவிட்டார். முடிக்கச் சொல்வீர்கள் என்று பார்த்தால், நீங்களும் முடிக்கச் சொல்லவேயில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தாராளமாக வாய்ப்புக் கொடுத்துவிட்டார்கள். எல்லோரும் பார்த்தார்கள், எவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்கள் என்று. அதனால், நீங்கள் பேரவைத் தலைவரை வாழ்த்த வேண்டும்.

இன்றைக்கு எங்களுக்கெல்லாம் ஓர் ஆச்சரியம். தேர்தலை யார் நிறுத்தினார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) யார் நீதிமன்றத்திற்குப் போனார்கள், யார் இதை நிறுத்தினார்கள் என்பது மக்களுக்கு முழுமையாகத் தெரியும். உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது; அதுவும் முழுமையாகத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தார்கள் என்பதை நாடே அறியும். ஆனால், உள்ளாட்சித் தேர்தலை நடத்தக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு கொறடா அவர்கள் சொல்லும்போது. . . (குறுக்கீடு) இல்லை, இதிலே இரண்டு விஷயம். (குறுக்கீடு) நான் யார் பெயரையும் சொல்லவில்லை. பேசி முடித்துவிடுகிறேன். பேசி முடித்ததற்குப் பிறகு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். இதிலே கருத்து சொல்லக்கூடிய உரிமை எங்களுக்கு உண்டு. அந்தவகையிலேதான்,

எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் இங்கே தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி, இந்த அவையிலே விளக்கிட வேண்டுமே தவிர, தேவையில்லாமல் சில வார்த்தைகளை இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகவே நீதிமன்றம் சென்றதாகச் சொல்கிறார். நீதிமன்றம் சென்றது நாங்கள்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்தான் நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். உச்ச நீதிமன்றம் வரையிலே சென்றிருக்கிறோம். இல்லை என்று மறுக்கவில்லை. நிறுத்துவதற்காக அல்ல, தடை செய்வதற்காக அல்ல, தேர்தல் முறையாக நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் நீதிமன்றம் சென்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு அதற்கேற்ற வகையில், அவர் அறிமுகம் செய்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றக்கூடிய வகையிலே, அதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, தேவையில்லாத வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால், தேவையற்ற வார்த்தைகளைச் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கும் ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தல் நடத்துவதற்குக் காலதாமதம் யாரால் ஏற்பட்டது? சரி, 1996, 2001, 2006, 2011. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். உங்கள் கட்சிக் கொறடா அவர்கள் பேசும்போது எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து கேட்டார்கள் அல்லவா? அதேபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது அமைதியாக உட்கார்ந்து கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, இது சரியில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டார், வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்கிறார், நீங்கள் பொறுமையாக உட்கார்ந்து கேளுங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** நான் சொல்வதில் ஏதாவது மாறுபாடு இருந்தால் திரும்பவும் அவர்கள் சொல்லட்டும், நான் பதில் சொல்கிறேன். அதாவது 1996, அதற்குப் பின்னால் 2001, 2006, 2011–ல் என்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டதோ, அதேபோல, எந்தெந்தத் தேதிகளில் வெளியிடப்பட்டதோ அதே நடைமுறைகளைத்தான் நாங்கள் நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) நான் முழுவதுமாகப் பேசி முடித்து விடுகிறேன். முழுமையாக, உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடத்தக் கூடாது என்பதற்காக தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகளும்— நீங்கள் மட்டுமல்ல—மற்றவர்களும் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். தி.மு.க. உள்ளிட்ட சிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் காரணமாகத் தேர்தல் அறிவிக்கை உயர் நீதிமன்ற ஆணைப்படி இரத்து செய்யப்பட்டது. இதுகுறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் செய்த மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது. மேலும், உள்ளாட்சித் தேர்தல் நடத்த அனுமதித்து, சென்னை உயர் நீதிமன்ற அமர்வு மற்றொரு வழக்கில் அளித்த தீர்ப்பை எதிர்த்து தி.மு.க. தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள், மன்ற உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர்கள் பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்பும் நோக்கத்தில் சாதாரண தேர்தல் அறிவிக்கையை 26–9–2016 அன்று வெளியிட்டது. மேற்சொன்ன அறிவிக்கையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 33984/2016, பல்வகை நீதிப்பேராணை எண்கள் 29329 மற்றும் 29330/2016 தாக்கல் செய்யப்பட்டன. (குறுக்கீடு) அதிக நேரம் பேசியிருக்கிறார், அதனால் விளக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இவ்வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் 4–10–2016 தேதியிட்ட ஆணையில் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31–க்கு முன்னதாகவே தேர்தல் நடத்தவும் மற்றும் அத்தேர்தல் பணியை செய்து முடிப்பதற்கு புதிய அறிவிக்கை வெளியிடுமாறும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அறிவுரை வழங்கியது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 பிப்ரவரி 1

*பிற்பகல் 2-15*

*உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், அவற்றை 5 ஆண்டு காலத்திற்குமேல் நீட்டிக்க முடியாது என்பதால் தேர்தல் நடத்தப்படுகின்றவரை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனி அலுவலர்களை அமர்த்தும் செய்யுமாறு அரசிற்கு அறிவுரை வழங்கியது. அதன் அடிப்படையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தலை நடத்தும்வரையோ அல்லது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 தேதிவரையோ அதில் எது முந்தியதோ அங்கு தனி அலுவலர்களை நியமனம் செய்து, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மூன்றாம் திருத்த அவசரச் சட்டம், தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2016 பிறப்பிக்கப்பட்டது. ஊராட்சி அமைப்புகளுக்கான தேர்தல் சட்ட விதிகளின்படி, ஊராட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்காகத் தயாரிக்கப்பட்ட மற்றும் திருத்தப் பெற்ற வாக்காளர் பட்டியலும் ஒரேமாதிரியாக இருத்தல் வேண்டும். ஆனால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க சீராய்வு 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் இந்தியத் தேர்தல் ஆணையத்திடமிருந்து கிடைக்கப்பெறும். சட்டமன்றப் பேரவையின் வாக்காளர் பட்டியல்கள் பெறப்பட்ட பின்பே, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் நோக்கத்துக்காக இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட இயலும். 2017 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 12 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்புக்கான ஆண்டு இறுதித் தேர்வு நடைபெறும். பெரும்பாலான வாக்குப் பதிவு அலுவலர்கள் பள்ளிக் கல்வித் துறையிலிருந்து தேர்தல் பணிக்கு நியமனம் செய்யப்படுவதால் அவர்களைத் தேர்தல் பணியில் அமர்த்த இயலாது. மிகப் பெரும்பாலான பள்ளி வளாகங்களை வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்துவதால், அவை ஆண்டுத் தேர்வு மற்றும் ஏப்ரல் 2017 ஆம் மாதத்தில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி முடிவடைந்த பின்னரே கிடைக்கப்பெறும்.*

*எனவே, மேற்கண்ட காரணங்களால் உரிய காலத்திற்குள், உரிய காலக்கெடுவிற்குள் தேர்தல் நடத்த இயலாது என்பதால், 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று தனி அலுவலர்களின் பதவிக்காலம் முடிவுறும் என்பதைக் கருத்தில்கொண்டு, ஊராட்சி அமைப்புகளின் அலுவல்களை நிருவகிப்பதற்காக பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அரசைக் கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்* autonomous body *என்பது அவர்களுக்கும் தெரியும். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஊராட்சி அமைப்புகளின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதற் கூட்டம் நடக்கும் வரையிலோ அல்லது 2017 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை மேலும் 6 மாத கால நீட்டிப்பு செய்ய 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு இப்பேரவையின்முன் வைக்கப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறோம்.*



2017 பிப்ரவரி 1] [திரு. எஸ்.பி. வேலுமணி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தி.மு.க. கொறடா அவர்கள், நல்ல பல கருத்துகளை சட்டமன்றத்திலே பதிய வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர் கூறிய அந்தக் கருத்துகளின் அடிப்படையில், உண்மைத் தன்மையினை அறிந்து, ஆராய்ந்து அதில் சில கோரிக்கைகளை அரசு உறுதியாக, நல்ல யோசனையாக இருந்தால் ஏற்கும். மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒரு கருத்தை மிகவும் வலியுறுத்திச் சொன்னார்கள். அதாவது, முறையாக தேர்தல் நடப்பதற்காகத்தான் நாங்கள் உயர் நீதிமன்றம் சென்றோம், உச்ச நீதிமன்றம்வரை சென்றோம் என்று சொன்னார்கள். முறையாக, இந்த உள்ளாட்சித் தேர்தலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாகச் செய்யும். ஏனென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலங்களில், எந்த வருடமாக இருந்தாலும், உள்ளாட்சித் தேர்தல் முறையாகத்தான் நடந்தது. நாங்கள் ஒருபோதும் 2006–ல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலைப்போல நடத்த மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகராட்சியிலே, 155 வார்டுகளில் அன்றைக்கு தேர்தல் நடந்தது. தேர்தல் நடந்த 99 இடங்களில் நடைபெற்றது தேர்தலே அல்ல, மறு தேர்தல் நடத்தப்படும் என்று சென்னை உயர்*

*நீதிமன்றம் சொன்னது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல எந்தத் தேர்தலையும் நடத்தமாட்டோம் என்பதை நான் உறுதியாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறகு ஏன் இப்பொழுது உள்ளாட்சித் தேர்தலுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்து இருக்கிறது? நீங்கள் முறையாக இதை நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபடவில்லை என்பதற்காகத்தான் தடை உத்தரவு பிறப்பித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் சரி செய்துவிட்டு நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொண்டால் நன்று.*

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் தேர்தலே நடத்த முற்படவில்லை. தேதி அறிவித்தவுடன் நீங்கள் போய் தடையாணை வாங்கிவிட்டீர்கள். ஆனால், தேர்தல் நடைபெற்று முடிக்கப்பெற்று, அந்தத் தேர்தல் செல்லாது என்று. . . (குறுக்கீடுகள்) என்னைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *என்னைப் பேசவிடுங்கள். தேர்தல் நடைபெற்ற மொத்த இடங்கள் 155. திரு. சேகர் பாபு அப்பொழுது நன்றாக அடிவாங்கினார், நன்றாகத் தெரியும். அவர் வார்டுக்குள் போய் அடிவாங்கினார். 155 இடங்களில் 99 இடங்களுக்கு தேர்தலே செல்லாது என்று சொல்லி மறு தேர்தல் நடத்தப்பட்டது. அந்த மாதிரி தேர்தலை நாங்கள் ஒருபோதும் நடத்தமாட்டோம் என்று சொல்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்கள் கட்சியின் கொறடா அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் அதைத் திருப்பி அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய காரணத்தினால்தான் நான் மீண்டும் அதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கிய சென்னை உயர் நீதிமன்றம் அளித்திருக்கக்கூடிய அந்த விளக்கம் என்னவென்று கேட்டால், மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட 26–9–2016 ஆம் தேதிய அறிவிக்கை சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாக உள்ளதாகவும், அறிவிக்கையில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டுமென்றும், அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் உரிய கால அவகாசம் வழங்க வேண்டுமென்றும், பழங்குடியினருக்கு உரிய இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஞாயிற்றுக்கிழமை தேர்தல் ஆணையம் அறிவிக்கிறது. மறுநாளே வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான தேதியும் அறிவிக்கப்படுகிறது. வேட்பாளர் பட்டியல் அன்றுதான் அறிவிக்கப்படுகிறது. இதெல்லாம் முறையா? இதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டி நீதிமன்றத்திற்குச் சென்றோம். எனவே, அந்த அடிப்படையில்தான் நீதிமன்றம் இந்த முடிவை எடுத்து, தடை விதித்து, முறைப்படுத்திவிட்டு இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ முறை சட்டமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அதனுடைய* effect *வரும் என்றும், அன்று முதலே சட்டமன்ற வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் என்றும் முன்மாதிரி இருக்கிறது. அது ஒரு பெரிய குறையல்ல. ஆனால், முறையாகத் தேர்தல் நடத்தப்படும் என்பதைத் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடு)

நகராட்சி சட்டமுன்வடிவு இப்போதுதான் வருகிறது. (குறுக்கீடு) இப்போதுதான் வருகிறது. இனிமேல்தான். (குறுக்கீடு) அவசரப்படாதீர்கள். ஒவ்வொன்றாக வரும்.

## (இ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் கருத்துகளைச் சொல்வதற்கு முக்கியக் காரணம், உள்ளாட்சியில் எனக்கு நினைவு தெரிந்து 1969, 1985 அதைப்போல 1996 என தொடர்ந்து அத்தனைத் தேர்தல்களையும் நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். ஆக, இன்றைக்கு இருக்கிற நிலவரத்தில் 6 மாதங்களுக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சட்டத்தின் உட்பிரிவு சட்டம் சொல்லியிருந்தாலும், **

பிற்பகல் 2–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். இராஜா:** இல்லை, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதைக் கேளுங்கள், திரு. இராஜா. (குறுக்கீடுகள்) இருங்கள். இந்த ** எல்லாம் இப்போது எதற்கு? நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? ஆதரிப்பதென்றால், இன்ன காரணத்திற்காக ஆதரிக்கிறேன்; எதிர்ப்பதென்றால், இன்ன காரணத்திற்காக எதிர்க்கிறேன் என்று அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

@ 30-1-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 பிப்ரவரி 1]

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு முறை நகர மன்றத் தலைவராக இருந்த காரணத்தினால் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருக்கட்டும். அதனால்தான் உங்களைப் பேச விட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சட்ட ஷரத்தைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பேச நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்புக்கு வராது. நீங்கள் பேசிய அத்தனையையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதைமட்டும் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** நான் சொல்வது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) காரணத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், உங்களைவிட எனக்குக் கொஞ்சம் விவரம் கூட தெரியும். நீங்கள் எனக்குப் பாடம் சொல்லாதீர்கள். நான் சொல்வதை மட்டும் நீங்கள் செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** அங்கு மக்கள் பிரதிநிதிகளும் இல்லை. அரசு அதிகாரிகளும் இல்லை. ஆகவேதான், இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று உங்கள் மூலமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மட்டும் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** ஆகவே, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் கண்டிப்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் தள்ளிப்போய்க் கொண்டிருக்கின்றன. அது 6 மாதத்திற்குள் நடைபெற வேண்டும். இல்லையென்றால் அரசமைப்புச் சட்டத்தின் கூறுகளின்படி ஒரு constitutional crisis தமிழகத்தில் ஏற்படும் என்பது நாம் அறிந்த ஒன்று. மத்தியிலிருந்து நிதிப் பகிர்வுகள் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படும். ஆனால், அதேநேரம் அதற்குண்டான மாற்று ஏற்பாடாக தமிழக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாம் தேர்தலை தள்ளிக்கொண்டே போனால் ஒரு மாற்று ஏற்பாடு நம்மிடம் இருக்க வேண்டும். அந்த மாற்று ஏற்பாடு என்ன என்பதை அரசு விளக்க வேண்டும்.

இரண்டாவது, இந்தத் தேர்தல்கள் நடைபெறும்பொழுது ஒரு முக்கியமான சீர்திருத்தம், காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் என்ன விரும்புகிறோமென்றால், கால அவகாசம் சரியாகத் தரப்பட வேண்டும். அதை நீங்கள் இந்த முறை கண்காணிப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆனால், அதே நேரம் இந்தமுறை Electronic Voting Machine–ஐ அறிமுகப்படுத்துவது என்பது ஒரு முக்கியமான கடமை என்று கருதுகிறேன். இதை மாநில தேர்தல் ஆணையம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஊராட்சிகளுக்குக் கொண்டு வருவதில் சிரமம் இருக்கும். ஆனால், அதேநேரம் பேரூராட்சிகள், ஊராட்சி மன்றம் மற்றும் மாவட்ட கவுன்சிலர்கள் போன்ற பதவிகளுக்கெல்லாம் நிச்சயமாக EVM–ஐப் பயன்படுத்தலாம். அது ஆரோக்கியமான நடைமுறையாக இருக்கும். சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை, ஆங்காங்கு நடக்கக்கூடிய கைகலப்பு போன்றவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு இது ஒரு நல்ல விஷயமாக இருக்கும். எனவே, காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் இதை வலியுறுத்துகிறோம். விரைவில் இந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். இல்லையென்றால், நிதிப் பகிர்வுகளுக்கான மாற்று ஏற்பாடாக அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை விளக்க வேண்டும். நன்றி.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் கேட்டதற்குச் சொன்ன அதே பதில்தான். இருந்தாலுங்கூட, இப்போது உள்ளாட்சிகளிலே ** இல்லை என்று சொல்லியிருந்தார். அதேபோல, பல வேலைகள் நடக்கவில்லை என்று சொன்னார். வர்தா புயல் வந்தபோது எடுக்கப்பட்ட நடவடிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் போய், அதேபோல் ஒவ்வொரு அமைச்சரும் நேரில் போய், உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் நேரில் போய், எல்லாப் பக்கமும் சிறப்பான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதை எல்லோரும் பாராட்டினார்கள். அதேபோல, எல்லா ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் எல்லாப் பக்கமும் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேவையான அலுவலர்கள் இருக்கின்றார்கள்.

பிற்பகல் 2–30

அதுமட்டுமல்ல, நீங்கள் அன்றைக்கு நீதிமன்றத்திற்குச் செல்லாமல் இருந்திருந்தால், இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல் முழுமையாக நடைபெற்று, அனைத்து மேயர்களும் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் பதவி ஏற்றிருப்பார்கள். இது நாட்டு மக்களுக்கும் தெரியும்.

நான் மீண்டும் சொல்கிறேன். 1996, 2001, 2011 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து நீங்கள் என்ன நடைமுறையைப் பின்பற்றி வந்தீர்களோ அதே நடைமுறைதான் எல்லாவற்றிலும் பின்பற்றப்படுகின்றது. அதைத்தான் நாங்கள் நீதிமன்றத்திலும் சொல்லியிருக்கிறோம். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

### (ஈ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017),* மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

*@ 30–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சட்டமுன்வடிவிற்கான பின்னிணைப்பு ஒன்றினைப்பற்றி, இங்கே என்னுடைய கருத்தினை பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஒரு பின்னிணைப்பாக தண்டத் தொகை அதிகரிக்கிற ஒரு தீர்மானம் வந்திருக்கிறது. சாக்கடை அடைப்பு ஏற்பட்டு, தெருக்களில் கழிவுநீர் ஓடினால் 20 ரூபாய் என்றிருந்த தண்டத் தொகை இன்றைக்கு 2 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் தண்டத் தொகை இன்றைக்கு எந்தெந்த வகைகளிலெல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், சாதாரண குடியிருப்பு என்றால் ரூ.5,000/– முதல் ரூ.10,000/– வரையிலும், சிறப்புக் கட்டடங்கள் என்று சொன்னால் ரூ.25,000/– முதல் ரூ.50,000/– வரையிலும், அடுக்குமாடிக் கட்டடங்கள் என்று சொன்னால் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரையிலும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த அந்தச் சட்டத்தின்படி, வெறும் 20 ரூபாய் என்றிருந்தது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், உங்களுக்கு நிறைய விவரங்கள் தெரியும். நான் இல்லையென்று சொல்லவில்லை. நீங்கள் சென்னை மேயராக இருந்திருக்கிறீர்கள். அதனால் உங்களுக்கு விவரம் தெரியும். ஆனால், அவை எல்லாவற்றையும் சொல்ல நேரம் இல்லை. இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக உங்களுடைய கருத்து என்ன? நீங்கள் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் இப்போது பேச வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்று மட்டும் சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று, யார் பொறுப்புக்கு வந்தாலும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் மக்கள் பிரதிநிதிகள் சாலையில் நடமாடவே முடியாது. அதற்காகத்தான் நான் இதைப் பதிவு செய்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** ரூ.20/— என்றிருந்ததை, ரூ.2 இலட்சம் அளவுக்கு உயர்த்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. அதனால், நீங்கள் தயவுசெய்து இதைப் புரிந்துகொண்டே ஆக வேண்டும். **

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பிரமணியன், நான் சொல்வதைக் கேளுங்கள். இது விவாதம் அல்ல. (குறுக்கீடு) இல்லை, இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் இந்த ஷரத்தின்படி நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதைச் சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதற்குமேல் இதில் விவாதம் இல்லை.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா?

**திரு. மா. சுப்பிரமணியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். நீங்கள் பேசும்போது ** பற்றி மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசினால் சரி. நீங்கள் சட்டமுன்வடிவு விவாதத்திற்கு வரும்போதே ** என்று சொல்கிறீர்கள். அவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? அதை மட்டும் நீங்கள் இப்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிய அத்தனையும் நான் நீக்கிவிட்டேன். நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 பிப்ரவரி 1

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டத்தைப் புரிந்துகொண்டு பேசுகிறீர்களா, புரியாமல் பேசுகிறீர்களா என்பது புரியவில்லை. இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவந்ததே, தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்காகத்தான். இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் எங்கே இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுகிறார் அவர் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறாரா, எதிர்க்கிறாரா? என்று சொன்னால் பரவாயில்லை. அதைவிடுத்து ** சொல்வதிலேயே குறியாக இருக்கும்போது சட்டத் திருத்தம் குறித்து அவரை மேற்கொண்டு எப்படிப் பேச அனுமதிப்பது என்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** 20 ரூபாய் என்று இருந்ததற்கு 2 இலட்சம் ரூபாய் அபராதம் போட்டீர்களென்றால், ஆயிரக்கணக்கான மடங்கு உயர்த்தினீர்களென்றால் இதை எதிர்ப்பது அல்லாமல், ஆதரிக்கவா முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை எதிர்ப்பதாக நான் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் நடைபெற்றுவரும் பாதாளச் சாக்கடைப் பணிகள் திட்டமாக இருக்கட்டும், குடிநீர் வழங்கும் திட்டமாக இருக்கட்டும், மாநகராட்சியின் இடங்களான

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 பிப்ரவரி 1] [திருமதி எஸ். விஜயதரணி]

கிழக்குக் கடற்கரைச் சாலை, இன்னும் பல்வேறு பகுதிகளில் அந்தப் பணிகள் கொண்டு சேர்க்கப்படவில்லை. பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்படாத சூழ்நிலையில் தண்டத் தீர்வையை பன்மடங்கு உயர்த்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்துள்ளீர்கள். இப்போது அப்பகுதிகளில் ஏற்கெனவே, charge, surcharge செலுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது, இந்த சட்டமுன்வடிவின் வாயிலாகக் கொண்டுவரப்படும் இந்தத் தீர்வையும் additional ஆக வரும்போது, அது மக்கள்மீது சுமத்தக்கூடிய ஒரு பெரிய சுமையாக இருக்கும். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை யாருக்கு அமையுமோ, அதற்கேற்றாற்போல் அமையக்கூடிய விதத்தில் மாத்திரம் அது அமையப்பெற வேண்டும். அதுபோல பன்மடங்கு தண்டத் தீர்வையை உயர்த்துவது மக்களுக்குப் பெரிய சுமையாக இருக்கும். ஏற்கெனவே Income tax, Service Tax போன்ற எல்லா tax–யும் மக்கள் கட்டி, கட்டி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த Tax–ஐயும் உயர்த்தி மக்களைக் கஷ்டப்படுத்தாமல், தயவுசெய்து இதற்கு ஒரு விதிவிலக்கு அளித்து, ஏதாவது ஒரு relaxation கொடுங்கள் என்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் தரப்பில் வன்மையாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின்மீது தி.மு.க. மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். இந்தச் சட்டமுன்வடிவின்மீது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது, தவறு செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத்தான் இந்தச் சட்டமுன்வடிவு என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தெரிவித்துள்ளீர்கள். மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளாமல்தான் பேசியிருக்கிறார் என்று அவர் பேசியதிலிருந்தே தெரிகிறது. (குறுக்கீடுகள்) நான் பேசுவதை நீங்கள் கேளுங்கள். பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு கேளுங்கள்.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பிரமணியன், நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும், விடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Change India என்ற தன்னார்வ நிறுவனத்தின் இயக்குநர். . . (குறுக்கீடுகள்) நான் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் மானியக் கோரிக்கை வரும்போது அதில் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** Change India என்ற தன்னார்வ நிறுவனத்தின் இயக்குநர், திரு. ஏ. நாராயணன் என்பவர் சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் பல இடங்களில் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டு, மழை நீர் ஆதாரங்கள் அசுத்தமாக்கப்பட்டுள்ளன என்றும், பல்வேறு நோய்கள் உருவாகக் காரணமாக இருக்கின்றன என்றும் தெரிவித்து, இவ்வகையான இணைப்புகளைக் கண்டறிந்து உடனடியாகத் துண்டிக்க வேண்டுமென்றும், அவ்வாறு மீறுபவர்கள்மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து அபராதம் விதிக்க வேண்டுமென்றும் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

பிற்பகல் 2–40

நீதிப் பேராணை எண் 31345/2014. இதற்கு முன்னாலேயே மாண்புமிகு அம்மா அவர்கள், விதி 110–ன்கீழ், வடிகால்களை அமைப்பதற்கென 4,000 கோடி ரூபாய் அறிவித்தார்கள். அதில், 1,150 கோடி ரூபாயில் வடிகால்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்தாலும்கூட, வழக்குத் தொடருகிறார்கள். சென்னை மாநகராட்சி சட்டம் 1919–ல், விதி 191–ன்படி, சட்ட விரோதமான இணைப்பைத் தடுக்கும் சட்டம், விதியினை மீறுபவர்களுக்கு ரூ.200/– அபராதம் விதிக்க, அட்டவணை 7–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத்தான் நீங்கள் இங்கே குறிப்பிட்டீர்கள். அதேபோல, விதி 202–ன்படி, அழுக்கு மற்றும் குப்பைகள் சேர்த்தல் மற்றும் மழைநீர் வடிகாலில் மாசு



2017 பிப்ரவரி 1] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஏற்படுத்துபவர்களுக்கு ரூ.20/– அபராதம் விதிக்கப்படுகிறது. மேலும், சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையின் மூலமாக தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939–ல் பிரிவு 44–ன்கீழ் ரூ.50/– அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் கீழ்க்கண்ட தீர்ப்பை 9–10–2015 அன்று வழங்கியது: “மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக கழிவுநீரை இணைக்கும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள்மீது தற்போது விதிக்கப்படும் அபராதத் தொகை ரூ.100/– என்பது மிக, மிக சொற்பமானது. மேலும், இதனை 20 மடங்காக உயர்த்தி, ரூ.2,000/– அபராதம் விதிக்க சென்னை மாநகராட்சியால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிகிறது.” (குறுக்கீடு) இது, நீதிமன்றம் குறிப்பிட்டது. “20 மடங்கு அதிகம் எனத் தெரிவித்தாலும், இது வெறும் ரூ.2,000/– மட்டும்தான் எனக் கூறினாலும், இது, தவறு செய்பவர்களை எவ்வகையிலும் தடுத்து நிறுத்தாது. மேலும், ரூ.2,000 அபராதம் விதிப்பது என்பது, எந்த நோக்கத்திற்காக தண்டனை விதிக்கப்படுகிறதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றாது. எனவே, கட்டடங்கள் எந்த வகைப்பாடு என்பதைக் கண்டறிந்து, அதற்குத் தகுந்தவாறு தண்டனை விதிக்கப்பட வேண்டும். கட்டடங்களின் பயன்பாடு வகைக்கு ஏற்றவாறு, அபராதமாக ரூ.5,000/– முதல் சில இலட்சங்கள்வரை உயர்த்தி, அரசாணை பிறப்பித்து, இதுகுறித்து வரைவு அரசாணை அடுத்த நீதிமன்ற அமர்விற்குள் (அடுத்த அமர்வு நாள் 6–2–2017) உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்” என ஆணை பிறப்பித்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சி அபராதத் தொகையை பின்வருமாறு உயர்த்தி, அரசுக்குப் பரிந்துரை செய்து, முன்மொழிவுகள் அனுப்பியது: “கட்டட வகைப்பாடு–சாதாரண கட்டடங்கள் (ordinary buildings) தரைதளம் முதல் இரண்டாம் தளம்–குடியிருப்புக் கட்டடம் ரூ.5,000/–, வணிகப் பயன்பாடு கட்டடம் ரூ.10,000/–; சிறப்புக் கட்டடங்கள் (special buildings) தரைதளம் மற்றும் முதல் நான்கு தளங்கள் கொண்ட கட்டடம்–குடியிருப்புக் கட்டடம் ரூ.25,000/– , வணிகப் பயன்பாடு கட்டடம் ரூ.50,000/–; பல அடுக்குமாடிக் கட்டடங்கள் (multistorey buildings) இவற்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம், ரூபாய் இரண்டு இலட்சம்.” அதனை அப்படியே ஏற்று,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 பிப்ரவரி 1

தமிழக அரசு, சென்னை மாநகராட்சி சட்டங்களுக்குத் திருத்தம் கொண்டு வருவதற்கு சட்டமன்றப் பேரவையில் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்துள்ளது.

சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதற்கான பதிலைச் சொல்கிறேன். இந்தச் சட்டத்தினால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த ரூ.100/–ஐ சென்னை குடிநீர் வாரியத்திற்குச் செலுத்தி, கழிவுநீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இதனால், அந்தப் பகுதியிலுள்ள மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் தேங்கி அசுத்தமாகக்கூடிய சூழ்நிலைகள் தடுக்கப்படுவதுடன், கொசுத் தொல்லை மற்றும் துர்நாற்றம் ஏற்படுவதைத் தடுக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, சாதாரண மக்கள் வெறும் ரூ.100/–ஐச் செலுத்தி கழிவுநீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம். அதுதான் விஷயம். ஏழை எளிய மக்கள் வசிக்கக்கூடிய இடங்களில் நடத்தப்படும் ஒருசில வணிகக் கட்டடங்களால்தான் பெரும்பான்மையான விதிமீறல்கள் நடைபெறுகின்றன. அதாவது, தவறு செய்பவர்களுக்கு மட்டும்தான் அபராதம் விதிக்கப்படுகிறதேயொழிய பிறருக்கு விதிக்கப்படுவதில்லை. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். மேலும், வணிக நிறுவனங்கள் மிகுந்த பகுதியிலுள்ள பெரிய வணிகக் கட்டடங்கள் மற்றும் பல மாடிக் கட்டடங்களால் நடைபெறக்கூடிய விதிமீறல்கள் கண்டிப்பாகத் தடுக்கப்படும். சென்னை மாநகரில் தினமும் உருவாகும் கழிவுநீர் 625 மில்லியன் லிட்டர் ஆகும். சென்னை குடிநீர் வாரியம் மூலமாக 764 மில்லியன் லிட்டர் கழிவுநீரைச் சுத்திகரிக்க முடியும். எனவே, தற்போது மழைநீர் வடிகாலில் விடப்படும் கழிவுநீர் கண்டிப்பாகத் துண்டிக்கப்பட வேண்டும். இது, பொதுக் சுகாதாரத்தை மேம்படுத்தும். எதிர்வரும் காலங்களில் மழைநீர் வடிகால்கள் கழிவுப் பொருட்களால் அடைக்கப்படுவது தவிர்க்கப்படும்.

சென்னை மாநகரில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாத வகையில், மழைநீரை சிறந்த முறையில் சேமித்து, குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் உலக வங்கி நிதியுதவியுடன், 1,100 கோடி ரூபாய் கடனுதவி பெற்று, ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பு கட்டப்பட்டுள்ளது.



2017 பிப்ரவரி 1] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பிற்பகல் 2–45

அதேபோல், கோவளம் வடிநிலப் பகுதி மற்றும் கொசஸ்தலை ஆறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பு கட்ட ரூ.3,000/– கோடிக்கு அனுமதி பெற ஜெர்மன் மேம்பாட்டு வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டு நிறுவனத்துடன் அம்மா அவர்களுடைய அரசின்மூலம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றோம், இன்னும் நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம். இந்தச் சட்டத்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். நீதிமன்றத்தின் வலியுறுத்தலின் காரணமாகத்தான் இந்தச் சட்டம் வருகின்றது. அதனால்தான் இதை நான் சொல்ல வந்தேன். எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (உ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2017), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2017)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 30–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (ஊ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2017), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1–2–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தம்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





பிற்பகல் 2–50

## (எ) தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2017), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2017)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அடுத்ததும் இதேபோன்றதொரு சட்டமுன்வடிவு வர இருக்கின்றது. கருத்து கூறுபவர்கள் இரண்டிற்கும் சேர்த்து கருத்து சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, சொல்லுங்கள்.

**முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு, தமிழகத்தில் பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அதன் பொதுக் குழுவிலும், தலைவர் கலைஞர் அவர்கள் கடிதங்களின் மூலமாகவும், தளபதி அவர்கள் அறிவித்த போராட்டங்களின் மூலமாகவும், அவர் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இதை நிறைவேற்ற வேண்டும் என்று அறிக்கைவிட்டதன் விளைவாகவும், இதுபோன்றதொரு

---

[@] 31–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[முனைவர் க. பொன்முடி] [2017 பிப்ரவரி 1

சட்டமுன்வடிவு வந்ததை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கின்ற அதேநேரத்தில், இந்தச் சட்டமுன்வடிவிலே சில விஷயங்கள் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டு திரு. அனந்தகிருஷ்ணன் அவர்களின் தலைமையிலே ஒரு குழு நியமிக்கப்பட்டு, தமிழகத்திலிருந்து நுழைவுத் தேர்வு முறை விரட்டப்பட்டது. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயிருந்து தமிழகத்திலே நுழைவுத் தேர்வு இல்லையென்ற நிலைமை இன்றுவரை தொடர்ந்து இருக்கின்றது. நுழைவுத் தேர்வின் விளைவாக, 2006 ஆம் ஆண்டு 24,670 பேர் மட்டுமே கிராமப்புறங்களிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டதன் விளைவாக 2010 ஆம் ஆண்டில் 76,703 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட மூன்று மடங்கு. அதேபோல, தமிழ்வழி பயின்றவர்கள் 2006 ஆம் ஆண்டில் 11,799 பேர்தான். ஆனால், 2010–ல் 54,460 பேர். ஆகவே, நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டதன் விளைவாக கிராமப்புற மாணவர்களும், தமிழ்வழி பயில்கின்ற மாணவர்களும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களும் மருத்துவக் கல்லூரியிலேயும், பொறியியல் கல்லூரியிலேயும் இடம் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தது என்பது உண்மை. ஆனால், அதற்கு ஓர் ஆபத்து இன்றைக்கு வந்திருக்கிறது என்ற சூழலில், இந்தச் சட்டம் மிகவும் அவசியமானது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தக் கல்வியை முதலில், Concurrent List என்ற பட்டியலிலிருந்து State List–க்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நீங்கள் தயவுசெய்து மேற்கொள்ள வேண்டும். நான் இதை ஒருவேண்டுகோளாக வைக்கிறேன். 'நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஏன் செய்யவில்லை?' என்று கேட்கக் கூடாது. நாங்களும் அதற்குக் குரல் கொடுத்திருக்கிறோம். அகில இந்திய அளவிலே, கல்வி அமைச்சர்கள் மாநாடு கூட்டப்பட்டபோது, நானே அதில் கலந்து கொண்டு இதை State List–ல் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நெருக்கடி காலத்தில்தான் இதுபோன்ற நிலைமையை உருவாக்கி, Concurrent List–லே, அதாவது, பொதுப் பட்டியலுக்குக் கொண்டுவந்து, மாநிலப் பட்டியலிலிருந்து நீக்கினார்கள். எப்படி



2017 பிப்ரவரி 1] [முனைவர் க. பொன்முடி]

நீங்கள் உடனடியாக டில்லி சென்று மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து, முயற்சிகளைச் செய்து ஜல்லிக்கட்டைக் கொண்டுவந்தீர்களோ, அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவருடைய கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேரை வைத்திருக்கின்ற காரணத்தினால், இந்தப் பிரச்சினையிலும் தயவுசெய்து ஈடுபட்டு, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு உடனடியாகக் கொண்டுவந்து ஒரு பாதுகாப்பைக் கொண்டுவர வேண்டும். பல்வேறு பிரச்சினைகளை மத்திய அரசாங்கம் நம்மீது தற்போது திணித்துக் கொண்டிருக்கிறது. சமஸ்கிருதத்தைப் புகுத்துவோம் என்கிறார்கள். அதேபோல் Exit தேர்வு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மருத்துவர்தான். அவர் M.B.B.S., படித்துவிட்டுத்தான் வந்திருக்கிறார். அவருக்கு இதுகுறித்துத் தெரியும். அதேநேரத்தில், practice செய்ய வேண்டுமென்றால், மத்திய அரசாங்கம் நடத்தும் Exit தேர்வில் தேர்ச்சி பெற்றுத்தான் செய்ய முடியும் என்றவொரு சூழ்நிலையெல்லாம் உருவாகிக் கொண்டிருக்கின்றது.

பிற்பகல் 2–55

அதேபோல, ஆசிரியர்கள் தேர்வாக இருந்தாலும் அதுவும் அப்படித்தான் வர வேண்டியிருக்கிறது. ஆக, புதிய கல்விக் கொள்கை என்ற பெயரிலே மாநிலங்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிகளில் மத்திய அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பது அப்பட்டமான உண்மை. ஆகவே, இந்த அரசு அதைத் தடுத்து நிறுத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஜல்லிக்கட்டுக்கான சட்டத்தை ஆளுநர் அவர்களிடமும், குடியரசுத் தலைவர் அவர்களிடமும் அனுமதி பெற்றுத்தான் நிறைவேற்றியிருக்கிறோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்திற்கும் அதுபோன்ற யோசனைகள் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

ஏனென்று சொன்னால், இந்தச் சட்டத்திற்கும் அப்படிச் செய்தால்தான், உச்ச நீதிமன்றத்திற்குப் போனால் நிற்காது. ஏனென்றால், அது மிக முக்கியமானது. 2006, பிப்ரவரி மாதத்திலே சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால், அந்தச் சட்டத்தை உயர் நீதிமன்றம் செல்லாது என்று சொல்லிவிட்டது. அதற்குப் பின்னர், 2006–ல், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்த பிறகு,

திரு. அனந்தகிருஷ்ணன் தலைமையிலே ஒரு குழுவை நியமித்து, ஓர் அவசர சட்டத்தைக் கொண்டுவந்து, பின்னர், இது உயர் நீதிமன்றத்திற்குச் சென்றபொழுது, இந்தச் சட்டம் செல்லும் என்று கொன்னதால் அது செல்லுபடியானது. ஆக, நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டது.

நீங்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, இந்தச் சட்டத்தை ஆளுநர் அவர்கள் மூலமாகவும், குடியரசுத் தலைவர் அவர்கள் மூலமாகவும் ஒப்புதல் பெற வேண்டும். ஏனென்று சொன்னால், 2007–ல் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது; மத்திய அரசாங்கத்தினுடைய அனைத்துத் துறைகளின் மூலமாகவும், குடியரசுத் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிற காரணத்தினாலும் இந்தச் சட்டம் செல்லும் என்று நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிற காரணத்தினால், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நாமும் அதுபோன்ற முயற்சிகளிலே ஈடுபட்டால், NEET தேர்வு தமிழகத்திலே எப்பொழுதும் நுழைய முடியாத அளவிற்கு நம்மால் செய்ய முடியும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதிலே முழுமையாக ஈடுபட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தத்தைக் கொடுத்து, இந்தச் சட்டத்தைத் திருத்துகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்டம், பிரிவு 324 (பி)–ன்படி, இவற்றையெல்லாம் திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு நாம் எவ்வளவு அழுத்தம் கொடுக்கிறோமோ, அப்பொழுதுதான் நிரந்தரமாக இது செயல்படும். ஆகவே, அதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, 2010–ல் இந்திய மருத்துவக் கழகம்தான் இதனை அறிவிக்கிறது; இதைப் பாராளுமன்றத்தில் அறிவிக்கவில்லை. 2010–ல் இந்திய மருத்துவக் கழகம், NEET தேர்வின் மூலமாக, தேசிய அளவிலே போட்டித் தேர்வுகளை நடத்தி, நாங்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்றுதான் சொன்னது. ஆனால், 2010–ல் உச்ச நீதிமன்றமே இந்திய மருத்துவக் கழகத்திற்கு இந்த அதிகாரம் கிடையாது; மாநிலச் சட்டங்களே நிலைத்து நிற்கும் என்று சொல்லிவிட்டது. அதனால்தான், கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சட்டம் 2011–க்குப் பின்னரும் நிலைத்து நின்றது. ஆனால், பாராளுமன்றமே 2013–ல் NEET–க்கு ஓர் அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறது. ஆகவே, பாராளுமன்றத்திலும் நாம் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அவசியமும், கட்டாயமும் ஏற்படுகிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, நீங்கள் இயற்றுகிற இந்தச் சட்டம் இங்கே ஒருமனதாக நிறைவேற்றப்படவிருக்கிறது. தமிழக மக்களுடைய அனைத்து ஆதரவையும் பெற்றிருக்கிறது. NEET ஒழிய வேண்டுமென்ற சட்டம் அனைவருக்கும் ஏற்புடையதாகவே இருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் உங்களை மீண்டும் கேட்டுக்கொள்வது, எப்படி ‘ஜல்லிக்கட்டு’ சட்டம், அவசரச் சட்டமாகக் கொண்டு வரப்பட்டு, கவர்னர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோருடைய கையெழுத்தைப் பெற்று சட்டமாக்கப்பட்டதோ, அதுபோல இந்தச் சட்டமும் அவர்களுடைய ஆதரவைப் பெற்று உருவாக வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளை வைத்து, இதை வரவேற்று அமர்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான இந்தச் சட்டமுன்வடிவில், தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவ, மாணவியரின் கல்விச் சூழ்நிலையைப் பொறுத்து நாம் இந்த முடிவுகளை தற்பொழுது எடுக்கிறோம். பள்ளிகளில் கல்வி முறை மற்றும் கல்வித் திட்டம் மேலும் தமிழகத்தில் வலிமை பெற வேண்டுமென்பதே என்னுடைய தாழ்மையான கருத்து. அதை இன்னும் வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். சர்வதேச அளவிலும், அகில இந்திய அளவிலும், பிற மாநிலங்களோடும் ஒப்பிடும்போது, இன்னும் நாம் வலிமை பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதேபோல, தமிழகத்திலே இருந்து மாணவர்கள் வெளியிலே சென்று பல்வேறு போட்டித் தேர்வுகள் மற்றும் அகில இந்தியத் தேர்வுகளில் பங்கெடுக்கிறார்கள். அதிலும் நாம் தேர்வு பெற வேண்டும். எல்லா இடங்களிலும் தமிழர்களின் கரங்கள் அதிகமாக ஓங்கியிருக்க வேண்டும். தற்பொழுது வேண்டுமானால் NEET

தேர்வுக்காக சட்டம் போட்டு, நம்முடைய மாணவர்களின் சூழ்நிலைகளுக்கேற்ப அதைக் கொண்டு வருகிறோம். ஆனால், வருங்காலங்களில் NEET நுழைவுத் தேர்வு உச்ச நீதிமன்றத்தில் எவ்வாறு பார்க்கப்படும் என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. NEET தேர்விற்கென்றே அல்லது பொதுத் தேர்விற்கென்றே, அகில இந்திய அளவில் இந்தக் கல்வி முறைகளை பள்ளிகளில் வலிமைப்படுத்தக்கூடிய திட்டங்களைக் கொண்டுவந்து, பயிற்சிகளைத் தந்து, நமது அரசு, மாணவர்களைத் தயார் செய்ய வேண்டும். வருங்காலங்களுக்கேற்ப சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். தற்போது, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் ஆதரிக்கிறோம். வருங்காலங்களுக்கேற்ப மாணவர்களைத் தயார் செய்யும் பொறுப்பிலும் நமது அரசு ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து இந்தச் சட்டமுன்வடிவினை தற்போது காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 3—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நுழைவு மற்றும் தகுதித் தேர்வினைத் (NEET) தொடர்ந்து எதிர்த்த கொள்கையிலே இந்திய அளவிலே உறுதியாக இருந்த ஒரே முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது இந்தச் சட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று முதல் வரியிலே சொன்னார்கள். அதை ஒத்துக்கொள்கின்றோம்; நன்றி. அதற்குப் பின்னர், ‘தி.மு.க. தொடர்ந்து நடத்திய பல்வேறு போராட்டங்களாலும், எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டமுன்வடிவினைக் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்திய காரணங்களாலும்’ என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. காரணம், தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, தொடர்ந்து இந்தக் கொள்கையிலே உறுதியாக இருந்தது மட்டுமல்ல, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில்கூட 12—5—2016 அன்று திருநெல்வேலியில்





நடந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசியதை நான் இந்த அவையில் இப்போது பதிய வைப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள்; “வாக்காளப் பெருமக்களே, உங்களது ஆதரவுடன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீண்டும் அமைந்தவுடன் மருத்துவப் படிப்பு மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு இல்லாமலேயே, தொடர்ந்து மாணாக்கர்கள் சேர்க்கப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதியை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு அளிக்கின்றேன்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து, “தேவையெனில், இதற்கென தனியாக ஒரு சட்டத்தையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12—5—2016 அன்றே தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கூட்டத் தொடரிலேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த “நீட்” தேர்வைப் பற்றிக் கேட்டார்கள். அப்போதே நான் அவர்களிடத்திலே சொன்னேன்; மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கொள்கைகளிலே உறுதியாக இருக்கிறது, அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையால் மட்டும்தான் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது என்பதையும், சட்ட ரீதியாக நாம் போராடிய காரணத்தால்தான் கடந்த ஆண்டு, நம்முடைய கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்கு +2 மதிப்பெண்கள் அடிப்படையிலே அரசு மருத்துவக் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது என்பதையும் தாங்கள் அறிவீர்கள் என்று சொன்னேன். அப்பொழுதே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அடுத்த ஆண்டு என்ன செய்வீர்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் திருநெல்வேலியில், தேர்தல் பிரச்சாரத்தின்போது இவ்வாறு சொல்லியிருக்கிறார்கள், ஆகவே, அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கொள்கைகளிலே உறுதியாக இருக்கிறது என்பதை நான் சொல்லியிருக்கின்றேன். அதைப்போல, 2007 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்னர் நீங்கள் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையெல்லாம் பெற்றீர்கள் என்றெல்லாம் சொன்னீர்கள். அதை ஒத்துக்கொள்கிறோம். அது உண்மை. ஆனால், அப்படி

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 பிப்ரவரி 1

அந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்கு முன்பே, 9–6–2005-ல், முதன்முதலாக இதுபோன்ற நுழைவுத் தேர்வே வேண்டாம், +2 மதிப்பெண்கள் அடிப்படையில்தான் மாணாக்கர்களைச் சேர்க்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையிலே ஓர் அரசாணையைப் பிறப்பித்தது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் அந்த அரசாணையைப் பிறப்பித்தார்கள். அதற்குப் பின்னாலே அதையொட்டி 18–2–2006–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைச் சட்டமாக்கினார்கள். அதற்குப் பிறகுதான் ஆட்சி மாறியது. நீங்கள், அனந்தகிருஷ்ணன் கமிட்டி அமைத்தீர்கள். அதெல்லாம் வரலாறுகள். அனைத்து விவரங்களையும் நான் அறிவேன். உங்களிடத்திலே நான் பணிவோடு சொல்வது மாண்புமிகு அம்மா அவர்கள் "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று சொன்னார்கள். இன்றைக்கும் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஏழை, எளிய கிராமப்புற மாணவர்கள், நலிவுற்ற மாணவர்கள் இதுபோன்ற ஒரு competitive exam–ஐ எழுத முடியாது, அந்த traumatic experience என்று சொல்லக்கூடிய ஒரே சீரான நுழைவுத் தேர்வு என்பது பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் மனச்சுமையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்ற காரணத்தினாலே, இது மாணவர்களுடைய எதிர்காலத்தை ஒரு முறை மட்டுமே நிர்ணயிக்கக்கூடிய முயற்சியாக இருக்கின்ற காரணத்தால்தான், அம்மா அவர்களுடைய கொள்கைகளை நிலைநிறுத்தக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இந்த "நீட்" தேர்வே இருக்கக் கூடாது என்பதற்காக நாம் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவினை ஏக மனதாக, ஒரு மனதாக, அனைத்து உறுப்பினர்களும் இதை வரவேற்றுப் பேசியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குரிய விளக்கத்தினை இங்கே



2017 பிப்ரவரி 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த "நீட்" தேர்வு வந்ததிலிருந்தே அதை எதிர்த்து, உச்ச நீதிமன்றம் வரை வழக்கு தொடுத்து, "நீட்" தேர்வே தேவையில்லை என்ற கொள்கையில்தான் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பிற்பகல் 3–05

சமூக நீதிக்காகப் போராடி, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை இந்திய அரசமைப்பின் 9–வது அட்டவணையில் (மேசையைத் தட்டும் ஒலி) சேர்த்து "சமூக நீதி காத்த வீராங்கனை" என்று இந்தியாவிலேயே புகழப்பட்டவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வழியில் நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்கும். சில, பல கருத்துகளை எதிர்க்கட்சிகள் இங்கே பதிவு செய்துள்ளார்கள். இது நம்முடைய மாநிலப் பட்டியலில் இருந்தால் மிகவும் வசதியாக இருக்கும். இடையில் மாற்றப்பட்டதை பொதுப் பட்டியலிலிருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்கே கொண்டு வந்தால் இந்தச் சட்டத்திற்கு நிரந்தரத் தீர்வு இருக்கும் என்பதை மாநில அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம். . . (குறுக்கீடுகள்) அதெல்லாம் சட்டப் பாதுகாப்பு செய்யப்படும் என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சேர்க்கைக்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஒருமனதாக ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2017), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2017)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 31–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஒருமனதாக ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2017), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2017)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

@ 31–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

பிற்பகல் 3–10

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைத் (ஒழுங்குமுறைப்படுத்தும்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஒ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2017), மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2017)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

[@] @ 30–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஓ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2017), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 31–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஔ) தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2017), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2017)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

[@]31–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2017 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 பிப்ரவரி 1]

பிற்பகல் 3–15

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

## (இ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

### (i) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2016–2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. இரா. குமரகுரு
3. திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்
4. திருமதி ப. மனோன்மணி

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

5. திரு. கே.பி.பி. பாஸ்கர்

6. திரு. ஆர். கனகராஜ்

7. டாக்டர் V.P.B. பரமசிவம்

8. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

9. திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்

10. திரு. அர. சக்கரபாணி

11. திரு. தங்கம் தென்னரசு

12. திரு. எஸ்.ஆர். இராஜா

13. திரு. ஏ.பி. நந்தகுமார்

14. திரு. கே.பி.பி. சாமி

15. திரு. எஸ். சுதர்சனம்

16. திரு. செ. ராஜேஷ் குமார்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2016–2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 196–ன்கீழ் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## (ii) பொதுக் கணக்குக் குழு

2016–2017 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு



2017 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திருமதி பொன். சரஸ்வதி

2. திரு. சு. ரவி

3. திரு. ரா. தமிழ்ச்செல்வன்

4. திரு. கி. மாணிக்கம்

5. திரு. ஓ.கே. சின்னராஜ்

6. திரு. உ. தனியரசு

7. திரு. C.V. சேகர்

8. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

9. திரு. ஆர். நடராஜ்

10. திரு. துரைமுருகன்

11. திரு. எஸ். ஆஸ்டின்

12. திரு. மா. சுப்பிரமணியன்

13. திரு. பழனிவேல் தியாக ராஜன்

14. திரு. டி. செங்குட்டுவன்

15. திரு. நா. கார்த்திக்

16. திரு. கரி. இராமசாமி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2016–2017 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்கு பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு முதலமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 204–ன்கீழ் திரு. கரி. இராமசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) எதுவாக இருந்தாலும், எனது அறையில் வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) இதுகுறித்து எதைப் பேசுவதாக இருந்தாலும், என்னுடைய அறையில் வந்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசலாம். நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (iii) பொது நிறுவனங்கள் குழு

2016–2017 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன: (குறுக்கீடுகள்)

1. திரு. விருகை V.N. ரவி
2. திரு. என்.ஜி. பார்த்திபன்
3. திரு. அ. பிரபு
4. திரு. எஸ். முத்தையா
5. திரு. ச. வெற்றிவேல்
6. திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்
7. திருமதி மு. சந்திரபிரபா
8. திரு. ஏ. இரத்தினசபாபதி
9. டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்
10. திரு. கு. பிச்சாண்டி
11. திரு. பி.கே. சேகர்பாபு
12. திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி
13. திரு. ஐ.பி. செந்தில்குமார்
14. முனைவர் கோவி. செழியன்



15. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்
16. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2016–2017 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 3–20

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவினுடைய உறுப்பினர்களாவார்கள். பேரவை விதி 213–ன்கீழ் திரு. எஸ். முத்தையா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

### (iv) அவை உரிமைக் குழு

2016–2017 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் 14 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 14 உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன: (குறுக்கீடுகள்)

நீங்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) ஏதாவது பேச வேண்டுமென்றால் என்னுடைய அறையிலே வந்து பேசலாம். (குறுக்கீடுகள்)

1. திருமதி மு. பரமேஸ்வரி
2. திருமதி ம. கீதா
3. திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்
4. திரு. டி.எ. ஏழுமலை
5. திரு. அ. மருதமுத்து
6. திரு. ஆர். தங்கதுரை
7. திரு. எஸ்.எஸ். சரவணன்

8. திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்

9. திரு. கே.ஆர். பெரியகருப்பன்

10. திரு. க. சுந்தர்

11. திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்

12. திரு. உ. மதிவாணன்

13. திரு. எஸ். ரகுபதி

14. திருமதி எஸ். விஜயதரணி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2016–2017 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 227(3)–ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகே வந்து ஏதோ பேசினர்.)

இங்கே பாருங்கள். இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குப் போங்கள். நீங்கள் எது பேசுவதாக இருந்தாலும் என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்)

எனக்கு இருக்கின்ற அதிகாரத்தை நான் முறையாகச் செயல்படுத்தியிருக்கிறேன். ஏற்கெனவே என்ன நடைமுறையோ அந்த நடைமுறைப்படி நான் அறிவித்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. (குறுக்கீடுகள்) பேரவை பொதுக் கணக்குக் குழுவினுடைய





விதி. . . (குறுக்கீடுகள்) "மேலும், இக்குழுவினால் ஆய்வு செய்யப் பெறவேண்டிய கணக்குகள், இக்குழுவின் தலைவராக நியமனம் செய்யப்பெறக்கூடியவர் சார்ந்துள்ள கட்சி அரசாங்கப் பொறுப்பில் இருந்த ஆண்டுக்குப் பொருத்தமான காலத்தொடர்பு உடையனவாக இருப்பின் அப்போது வேறு கட்சியைச் சார்ந்த ஒருவரை குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் நியமனம் செய்யலாம்" என்ற விதியைப் பயன்படுத்தி என்னுடைய அதிகாரத்திற்குட்பட்டு நியமனம் செய்திருக்கிறேன். நீங்கள் ஏதாவது பேச வேண்டுமென்றால் என்னுடைய அறைக்கு வந்து பேசும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மீதியிருக்கின்ற குழுக்களின் விவரத்தை பேரவை உறுப்பினர்களுக்கு முறைப்படி தபால் மூலமாக நான் அனுப்பி வைக்கின்றேன் என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் எனக்கு இருக்கின்ற அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி ஏற்கெனவே என்ன நடைமுறை இந்த அவையிலே பின்பற்றப்பட்டிருக்கிறதோ அந்த நடைமுறையைப் பின்பற்றித்தான் குழுவின் தலைவர்களை என்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு நான் நியமனம் செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) 2006–2011–ல், இந்த அவையிலே என்ன நடைமுறை பின்பற்றப்பட்டதோ, 61 உறுப்பினர்கள் இருந்த பெரும்பான்மையான கட்சிக்கு தலைவர் பதவி கொடுக்காமல், 34 உறுப்பினர்கள் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு வழங்கிய நடைமுறை இதே அவையிலே ஐந்தாண்டுகள் பின்பற்றப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அதே நடைமுறையை பின்பற்றித்தான் எனக்கு இருக்கின்ற அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், எனக்கு இருக்கின்ற அதிகாரத்தை மட்டுமல்லாமல். . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதுவாக இருந்தாலும் என் அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சரி, விடுங்கள். எதுவாக இருந்தாலும் என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் பேரவைத் தலைவர் இருக்கைக்கு வந்து ஏதோ பேசினார்.)

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

பிற்பகல் 3–25

சரி, விடுங்கள். மேலும், சட்டமன்ற விதிகளைப் பின்பற்றித்தான் நான் இந்த நியமனங்களைச் செய்திருக்கிறேன்; தலைவர் பொறுப்பிற்கு நான் நியமனம் செய்திருக்கிறேன். தெளிவாகவே விதி இருக்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

"மேலும், இக்குழுவினால் ஆய்வு செய்யப்பெற வேண்டிய கணக்குகள், இந்தப் பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ய வேண்டிய கணக்குகள், இக்குழுவின் தலைவராக நியமனம் செய்யப்பெறக்கூடியவர் சார்ந்துள்ள கட்சி அரசாங்கப் பொறுப்பில் இருந்த ஆண்டுக்குப் பொருத்தமான காலத்தொடர்பு உடையனவாக இருப்பின், அப்போது வேறு கட்சியைச் சார்ந்த ஒருவரை குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் நியமனம் செய்யலாம்" என்ற விதி இருக்கிற காரணத்தினாலே, வருகின்ற கணக்குகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் இருந்த கணக்குகள் ஆய்வுக்கு வர இருக்கின்றன. அதனாலேயும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஆட்சிக் கால கணக்குகளும் ஆய்வுக்கு வர இருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு ஆட்சியினுடைய கணக்குகளும் ஆய்வுக்கு வர இருப்பதனாலே இந்த விதியைப் பயன்படுத்தியும், அதுமட்டுமல்லாமல் எனக்கு இருக்கிற அதிகாரத்தையும் பயன்படுத்தி—(மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, 2006 முதல் 2011 வரை என்ன முறை இந்த அவையிலே பின்பற்றப்பட்டதோ, எந்த விதி அப்போது பயன்படுத்தப்பட்டதோ, அப்போது இருந்த ஆளுங்கட்சி என்ன நடைமுறையைக் கடைப்பிடித்து, மெஜாரிட்டி இருந்த கட்சிக்குக் கொடுக்காமல், வேறு கட்சிக்குக் கொடுத்ததோ, அதே நடைமுறைகள் வழக்கத்திலே இருக்கிற காரணத்தினாலே இந்த விதியைப் பின்பற்றித்தான் நான் பொதுக் கணக்குக் குழுவிற்கு திரு. கரி. இராமசாமி அவர்களை நியமனம் செய்திருக்கிறேன்; (மேசையைத் தட்டும் ஒலி) அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. முழுக்க முழுக்க விதிகளைப் பின்பற்றி, நடைமுறையைப் பின்பற்றித்தான் நான் நியமனம் செய்திருக்கிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

மீதமுள்ள குழுக்களின் விவரத்தை நான் தபாலில் அனுப்புகிறேன் என்று சொன்னேன். அமைதியான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, உறுப்பினர்கள் மகிழ்ச்சியாக யார் யார் எந்தக் குழுவிலே இருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்வதற்கு வசதியாக மீதமுள்ள குழுக்களையும் நான் அறிவிக்கிறேன்.

## (v) பேரவை விதிகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 256(1)–வது விதியின்கீழ், 2016–2017 ஆம் ஆண்டுக்கான பேரவை விதிகள் குழுவிற்கு (Rules Committee) கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. மாண்புமிகு திரு. ப. தனபால், பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் பேரவைத் துணைத் தலைவர்.
4. திரு. மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர்
5. திரு. P. வெற்றிவேல்
6. திரு. மு. சக்ரபாணி
7. திரு. எம். தமிமுன் அன்சாரி
8. திரு. ஆர். சுந்தரராஜ்
9. திரு. சி.வி. இராஜேந்திரன்
10. திரு. வி. பன்னீர்செல்வம்
11. திரு. ஆர். முருகன்
12. டாக்டர் இரா. மாசிலாமணி
13. திரு. க. கார்த்திகேயன்
14. திரு. டி.ஆர்.பி. ராஜா
15. திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்
16. திரு. வி.எஸ். காளிமுத்து

பேரவை விதி 256(1)—ன்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

## (vi) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)—வது விதியின்கீழ், 2016—2017 ஆம் ஆண்டுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. எஸ். ஈஸ்வரன்
2. திரு. அ. நடராஜன்
3. திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
4. திரு. க்ஷி.ஜி. கலைச்செல்வன்
5. திருமதி கு. உமா மகேஸ்வரி
6. திரு. பெ. பழனியப்பன்
7. திரு. கே.எஸ். விஜியகுமார்
8. திரு. எஸ். அம்பேத்குமார்
9. திரு. வெ. கணேசன்
10. திரு. துரை கி. சரவணன்
11. திரு. ப. ஆடலரசன்
12. திரு. ஆர். கணேஷ்

பேரவை விதி 240—ன்படி, திரு. பெ. பழனியப்பன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

## (vii) அரசு உறுதிமொழிக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248(1)—வது விதியின்கீழ், 2016—2017 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு (Assurance Committee) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:



1. திரு. சி. ராஜா
2. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
3. திரு. சு. குணசேகரன்
4. திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்
5. திரு. எஸ்.ஜி. சுப்பிரமணியன்
6. திருமதி நா. மனோரஞ்சிதம்
7. திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்
8. முனைவர் க. பொன்முடி
9. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
10. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி
11. திரு. த. மனோ தங்கராஜ்
12. திரு. துரை. சந்திரசேகரன்

பேரவை விதி 249(1)—ன்படி, திரு. சி. ராஜா அவர்களை இக்குழுவின் தலைவராக நிய,மனம் செய்கிறேன்.

பிற்பகல் 3—30

## (viii) அவைக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 253(1)—வது விதியின்கீழ், 2016—2017 ஆம் ஆண்டுக்கான அவைக் குழுவிற்கு (House Committee) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கே. பழனி
2. திரு. எ.பி. சக்திவேல்
3. திரு. என்.டி. வெங்கடாச்சலம்
4. திருமதி வி. கஸ்தூரி வாசு
5. திரு. எம். செல்வராசு

6. திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்

7. திருமதி ப. சத்யா

8. திரு. பா. ஆறுமுகம்

9. திரு. சே. கருணாஸ்

10. திரு. எஸ்.பி. சண்முகநாதன்

11. திரு. பெ. சுப்ரமணி

12. திரு. மு.பெ. கிரி

13. டாக்டர் ஆர்.டி. அரசு

14. திரு. கு. இராதாமணி

15. திரு. கே.வி. சேகரன்

16. திரு. அ. நல்லதம்பி

17. திரு. ச. பாண்டி

18. திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்

பேரவை விதி 253(1)—ன்படி, திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

## (ix) மனுக்கள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)—வது விதியின்கீழ், 2016–2017 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவிற்கு (Petition Committee) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கோ. வெங்கடாஜலம்

2. திரு. சி. சந்திரசேகரன்

3. திரு. அ. ராமு

4. திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமைக் கொறடா

5. திரு. தூசி. கே. மோகன்





6. திரு. அ. மனோகரன்

7. திரு. வே.பொ. சிவசுப்பிரமணி

8. திரு. சபா. ராசேந்திரன்

9. திரு. சு. புகழேந்தி

10. திரு. பி.என்.பி. இன்பசேகரன்

11. திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்

பேரவை விதி 261(2)—ன்படி, திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமைக் கொறடா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

## (x) பேரவை நூலகக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 264(1)—வது விதியின்கீழ், 2016–2017 ஆம் ஆண்டுக்கான பேரவை நூலகக் குழுவிற்கு (Library Committee) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. ஆர்.எம். சின்னதம்பி

2. திரு. கே.வி. இராமலிங்கம்

3. திரு. க.நா. விஜயகுமார்

4. திரு. அ. சண்முகம்

5. திரு. ஏ.கே. போஸ்

6. திரு. ஆர். முருகையா பாண்டியன்

7. திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்

8. திருமதி பெ. சீத்தாபதி

9. திரு. கு.க. செல்வம்

10. திரு. எ. ராமர்

பேரவை விதி 264(3)—ன்படி, திரு. கே.வி. இராமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (xi) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *268*(i)–வது விதியின்கீழ், *2016-2017* ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்கு (Committee on Papers Laid on the Table of the House) கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. பி.வி. பாரதி
2. திரு. ஆர். பாலசுப்பிரமணி
3. திருமதி கு. சித்ரா
4. திரு. கே.எஸ். தென்னரசு
5. திரு. வி. ராதாகிருஷ்ணன்
6. திரு. மா. கோவிந்தராசு
7. திரு. V. செந்தில்பாலாஜி
8. திரு. கே.எஸ். மஸ்தான்
9. திரு. கே.எஸ். மூர்த்தி
10. திரு. ஒய். பிரகாஷ்
11. திருமதி ம. வரலட்சுமி

பேரவை விதி *268*(ii)–ன்படி, திரு. V. செந்தில்பாலாஜி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

### (ஈ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:



| | | |
|---|---|---|
| அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. சோ. மாரியப்பன் கென்னடி |
| பாரதியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. வி.சி. ஆறுக்குட்டி<br>திரு. மு. திராவிடமணி |
| பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. இரா. சந்திரசேகர்<br>திரு. அ. சௌந்தரபாண்டியன் |
| மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | டாக்டர் கா. கதிர்காமு<br>திரு. பா. நீதிபதி<br>திரு. பி. மூர்த்தி<br>திரு. சௌ. தங்கப்பாண்டியன் |
| மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. ஐ.எஸ். இன்பதுரை<br>திரு. எச். வசந்தகுமார் |
| பெரியார் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. S. செம்மலை<br>திரு. இரா. இராஜேந்திரன் |
| தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்<br>திரு. வி.ஜி. ராஜேந்திரன் |
| தமிழ் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு. எம். ரெங்கசாமி<br>திரு. எம். இராமச்சந்திரன் |
| சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை | – | திரு.. வீ. அலெக்சாண்டர்<br>திரு. மு. கோதண்டபாணி<br>திரு. ப. சத்திய நாராயணன்<br>திரு. ப. பலராமன்<br>திரு. ஜெ. அன்பழகன்<br>திரு. ப. ரங்கநாதன் |
| அணாணா பல்கலைக்கழக ஆட்சிக் குழு | – | திரு. ஆர் நடராஜ் |
| அண்ணாமலை பல்கலைக்கழக ஆட்சிக் குழு | – | திரு. கே.ஏ. பாண்டியன் |

| | |
|---|---|
| தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழு | – திருமதி ம. கீதா |
| தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் | – திரு. என் முருகுமாறன் |
| தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் | – திரு. எஸ். பவுன்ராஜ் |
| தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமம் | – திரு. எஸ். முத்தையா |
| திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு | – திரு. கோ. லோகநாதன் த்திரு. ஆர். காந்தி |

*பிற்பகல் 3-35*

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.





## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–37 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*15. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

*16. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*17. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*18. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*8. 2016–2017 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

------